உ

கடவுள் துணை.

பொதியமலையிலெழுந்தருளிய

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

பஞ்சபட்சிசாஸ்திரம்

மூலமும்

சாந்தலிங்கசுவாமிகளால் அருளிச்செய்த

நூதன உரையும்

அதற்கிசைந்த சக்கரங்களும்,

சங்கரனார் உமாமஹேஸ்வரிக்கு உபதேசித்த

ஞானசரநூல் சாஸ்திரம்

மூலமும் - உரையும்.

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியாரால்,

சென்னை,

புவனேஸ்வரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்டார்ட் காப்பிரைட்.

1931

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில், ம-ா-ா-ஸ்ரீ, சிறு மணலூர்-கண்ணப்ப முதலியார் பாரியாள் சொர்ணம்பாள், அகஸ்தியர் பஞ்சபட்சி சாஸ்திரம் மூலம் உரை என்னும் இப்புஸ்தக காப்பிரைட் சுதந்திரத்தை எனக்கு விக்கிரையம் செய்து விட்டபடியால் இதை 1897-வது வருஷத்திய 25-வது ஆக்டு 20-வது பிரிவு 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை பிரஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும், காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது ஆகையால் இந்நூலுக் குடையவராகிய டி. சாரதா புத்தகசாலை தலைவர், த. துரைசாமி முதலியார் அவர்களின் உத்திரவின்றி பிறர் இதைப் பதிப்பித்தலும், இதை வேறுபாஷையில் மொழி பெயர்த்தலும் அல்லது இதிற்கண்டிருக்கிற பாகங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

த. துரைசாமி முதலியார்.

சுத்தப்பதிப்பு சோதிட புத்தகங்கள்.

சாதக சிந்தாமணி	2	0	0
சாதகாலங்காரம் மூலம்	0	12	0
ஷை மூலம்-உரை	1	8	0
விஞடி பஞ்சபக்ஷி சாஸ்திரம் மூலமும்-உரையும்	1	4	0
கமலமாமுனி ரேகை சாஸ்திரம் மூலமும்-உரையும்	1	0	0
போகர் பஞ்சபட்சி மூலமும்-உரையும்	0	14	0
அகஸ்தியர் பஞ்சபக்ஷி மூலமும்-உரையும்	0	12	0
அகஸ்தியர் ஞானசரநூல் மூலமும்-உரை	0	4	0
பெரிய வருஷாதி நூல்	0	8	0
மணிகண்ட கேரளம்	0	6	0
வால்மீகர் ஆரூடசாஸ்திரம் 150-பாடல் மூலம்-உரை	0	8	0
சகாதேவ சாஸ்திரம்	0	4	0

எமது விலாசம் :—டி. சாரதா புத்தகசாலை,

நெ-23, பாளையப்பன் தெரு, மின்ட் பில்டிங், சென்னை.

உ

கடவுள் துணை.

அகஸ்தியர்

பஞ்சபட்சி சாஸ்திரம்.

காப்பு.

வெண்பா.

உன்னியொருவன் உரைத்தமுதலெழுத்தைப்
பன்னிப் பறவையாய் பாவித்து-வன்னி
உதைய திசைப்பக்ஷியுண்மை யுரைக்கக்
கதை காவியப் பொருளே காப்பு.

(பொ-ரை) (தன்னைநோக்கி) ஒருவன்நினைத்து வருகின்ற ஒருகாரியத்தில் அவன்சொல்லும் வாக்கியத்தின்முதல் எழுத்தைநன்றாயாராய்ந்து பறவைகளுக்குரிய ஐதட்சரங்களில் அதற்கு வருகின்றபறவையாகக்கணக்கிட்டு சூரியோதயதிசையிலிருந்து பட்சிகளின்பயனை எடுத்துச் சொல்லுதற் பொருட்டு ஞானசாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பொருளாயுள்ள வஸ்துவே காப்பாகும். எ-று.

நாமகள் துதி.

துய்யமலருறையுந் தோகா யுனதம்பெற்ற
செய்யமலர்ப்பாதஞ் சேவித்தேன்-வையத்
தைந்து வகைப்பக்ஷி யமையுங் குணமென்றன்
சிந்தைதனி னிற்கவே செய்.

(பொ-ரை.) பரிசுத்தமான வெண்டாமாரையில் எழுந்தருளியிருக்கின்ற இளம்பெண்ணாகிய சரஸ்வதாதேவியே! உன்னுடைய அழகிய பொன்போன்றசெவந்ததாமரைமலர் போலும்திருவடித்தாள் வணங்கினேன். ஆகையால் நீ இவ்வுலகத்தில் பஞ்சபட்சிகள் பொருந்துங்குணங்களை எம்முடையமனதில் இருக்கச்செய்யவேண்டும். எ-று.

முனிவர் நூன்முறை.

ஒன்று திசைக்குருவியொன்றிவரு மோர்தூதன்
நின்றநிலையாருடத்தில்நேரும்-நன்று
வழுவா துரைத்தாயும் வல்லவர்கள் சொன்ன
முழுவாகடத்தின்முறை.

(பொ-ரை.) நன்றாயதொரு தப்பிதமுமில்லாமல்சொல்லி ஆராய்கின்ற வல்லமை யுடையவர்கள் சொல்லின் முறைமையான வாசகத்தின் வரிசைக்கிரகமானது பொருந்திய திக்குகளில் ஊடுருவிச் சேர்ந்துநெருங்கி வருகின்ற ஒருதூதுவன் இருந்ததன்மையைக்கண்டு சொல்லும் குறிகுணங்கள் ஆரூடத்தில் ஆகும் என்பதாம். எ-று.

முதலதிகாரம்.

நூல்

மொழிக்கு முதலெழுத்தே முன்னுதிக்குமாமதனைப்
பழித்தவன் றன்னிலையும் பார்த்து வழிபெறவே
பேரால்வருவனவும் பேதமறிந் துணர்ந்து
ஆராய்ந்துசொல்வதறி.

(பொ-ரை) தூதுவன் (ஒருகாரியத்தைநோக்கிவருபவன்) ஏதாவதொன்றைக்குறித்து நன்மை தீமைகளில் எதையோ ஒன்றைக்கேட்கத் தொடங்கும் வசனத்தில் முதலாகவுள்ள எழுத்தே பட்சிக்கும்முதன்மையாகும், ஆகையால் அந்தப்பட்சி எழுத்தையும், அவ்வசனத்தைச்சொன்னவன் நின்றநிலைமையையும் நன்றாகநிதானித்துப்பார்த்து அவனுடைய நாமதேயத்தினால் பேதங்களையும் அபேதங்களையும் நன்றாயுணர்ந்து நன்மை தீமைகளைச் சொல்ல வேண்டுமென்றுணர்வாய். என்றவாறு. 1

அ-வல்லூறு

இ-ஆந்தை

உ-காகம்.

எ-கோழி

ஒ-மயில்

பஞ்சபக்ஷிகளும் அதற்குரிய அட்சரங்களும்.

அகரமேவல்லூறு ஆந்தை இகரமதாம்
உகரங்கருகாக முன்னிப்-பகரில்
எகரமதுகோழி யெஞ்ஞான்றுமஞ்ஞை
ஒகரமுயிர்மெய்யாந்துரை

(பொ-ரை.) டேகை அகரம் என்னும் அட்சரமாம், ஆந்தை இகரம் என்னும் அட்சரமாம், காகம் உகரம் என்னும் அட்சரமாம், நினைத்துச்சொன்னால் கோழி எகரம் என்னும் அட்சரமாம், மயில் எந்தக்காலங்களிலும் ஒகரமென்னும் அட்சரமாம், இவ்விதியையே உயிர்மெய் எழுத்தாக வந்தாலுங் கொள்ளவேண்டும். எ-று. 2

பக்ஷம் இரண்டிற்கும்

பக்ஷிகளின் செய்கைக் குறிப்பு.

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஊணடையரசு நித்திரை மாணம் உயர்பகலிரவினுலுண்டு
நீணிலத்தரசு செய்துயின் செத்துநெறியுடனடந்துமேயுறங்கும்
பூணுறு மமரபக்க நற்பகலூண் பொன்றியுந்துயின்றரசாகிச்
சேணுறுநடையுண்டு றங்கியேசென்றுஞ் செத்தரசாளு நல்லிரவே

(பொ-ரை.) இந்தப்பட்சிகள் ஐந்தும் பூர்வபட்சம் பதினைந்து நாளும் பகலில் ஊண், நடை, அரசு, நித்திரை, மரணம், என்னும் வரிசையாகவும் இரவில் ஊண் அரசு, மரணம், நடை நித்திரை என்னும் வரிசையாகவும் அமரபட்சம் பதினைந்து நாளும், பகலில் ஊண், மரணம், நித்திரை, அரசு, நடை, யென்னும் வரிசையாகவும், இரவில் ஊண், நித்திரை மரணம், அரசு என்னும் வரிசையாகவும், நடைபெறும். எ-று 3

பூர்வபக்ஷம்-அமரபக்ஷங்களுக்கு-திதி பதினைந்தாகவும் திதி ஒன்றுக்கு சாமம் பத்தாகவும் சாமம் ஒன்றுக்கு நாழிகைப்பகுதி

ஒன்றேகா லொன்றைரீ ரொன்று முக்காலரையும்
நன்றாக விவ்வாறு நாழிகையுங்-குன்று
வளர் பிறைக்குந் தேய்பிறைக்கும் வாலாயமாஞ் சூட்ச
வளமுறைத்தார் முன்னோர் வகுத்து

(பொ-ரை.) ஐந்து பட்சிகளுக்கும் தொழில் நாழிகைகளை வெளிப்படுத்துமிடத்தில் பூர்வபட்சம் அமரபட்சம் என்னும் இரண்டுபட்சம்களிலும் பொதுவாகவே ஒன்றேகால் நாழிகையும், ஒன்றரை நாழிகையும், இரண்டு நாழிகையும், முக்கால் நாழிகையும், அரைநாழிகையுமாக ஆறுநாழிகையாம் இவ்விதமே சூட்சமான வன்மை மார்க்கமென்று முன்னோர்களாகிற பெரியோர்கள் ஏற்படுத்திச்சொன்னார்கள்-எ-று.

நாழிகை ஆறு கூடிய சாமம் ஒன்றுக்கு

செய்கைப்பகுதி.

மறித்து மொருவகையால் வண்கடிகையா றுந்
தெரித்ததொரு சூக்குமத்தைச் சேரக்-குறித்திடுகா
லுண்டு நடந்தாண்டுறங்கியிறந்திடுமே
வண்டனைய கண்ணாய்மதி.

(பொ-ரை.) வேறுவிதமாக யோசிக்குமிடத்தில் இந்த நாழிகை ஆறும்சூக்குமமார்க்கத்தை யடையச்சொல்லுமிடத்தில் உண்டும், நடந்தும் அரசுசெய்தும், தூங்கியும், மரணமாயும் இருக்கும் வண்டுபோலும் கறுத்த கண்களையுடைய பெண்ணே! நீ கவனிப்பாயாக-எ-று.

வினைப்பகுதி.

உண்பாலுக் கொன்றேகா லொன்றரையிற்றானடக்க
கண்பார்த் தரசிரண்டிற் காண்போமோ-பண்பாகத்
தூங்குவது முக்காலாய்த் துஞ்சுவது தானரையாய்ப்
பாங்குடைய பட்சிபலன்.

(பொ-ரை.) இவ்விதம் மேலே எடுத்துக் காட்டப்பட்ட பொது நாழிகையை பட்சிகளின் தொழில்கிரமப்படி எடுத்துசொல்லுமிடத்தில் ஊணுக்கு ஒன்றேகால் நாழிகையும் நடைக்கு ஒன்றரை நாழிகையும் அரசுக்கு இரண்டுநாழிகையும் நித்திரைக்கு முக்கால் நாழிகையும் மரணத்திற்கு அரைநாழிகையும் தொழில்களாம் இந்தத் தொழில்காலங்களிலேயே பட்சிகளின் பலாபலனை உணரவேண்டும்-எ-று. 6

இந்நூல்காப்புமுதல் 9 செய்யுள்களின் பயனறியச்

சூக்ஷுமச்சக்கரம்.

பூர்வபக்ஷம்.		அமரபட்சம்.	
பகல்.	இரவு.	பகல்.	இரவு.
அ-வல்லூறு உண்டி-$1\frac{1}{4}$	உ-காகம் உண்டி-$1\frac{1}{4}$	ஒ-மயில் உண்டி-$1\frac{1}{4}$	எ-கோழி உண்டி-$1\frac{1}{4}$
இ-ஆந்தை நடை-$1\frac{1}{2}$	இ-ஆந்தை அரசு-2	உ-காகம் மரணம்-$\frac{1}{2}$	உ-காகம் தூக்கம்-$\frac{3}{4}$
உ-காகம் அரசு-2	அ-வல்லூறு மரணம்-$\frac{1}{2}$	அ-வல்லூறு தூக்கம்-$\frac{3}{4}$	இ-ஆந்தை நடை-$1\frac{1}{2}$
எ-கோழி தூக்கம்-$\frac{3}{4}$	ஒ-மயில் நடை-$1\frac{1}{2}$	எ-கோழி அரசு-2	அ-வல்லூறு மரணம்-$\frac{1}{2}$
ஒ-மயில் மரணம்-$\frac{1}{2}$	எ-கோழி தூக்கம்-$\frac{3}{4}$	இ-ஆந்தை நடை-$1\frac{1}{2}$	ஒ-மயில் அரசு-2

இவற்றிற்கிணங்க உள்ளமுடைய சூடாமணிச் சோதிடத்தி

லிருந்தெடுத்தெழுதியது.

நந்தைமுதலிய திதிப்பிரிவு.

வினவின் முதற்றிதியாறும் பதினொன்று நந்தை
மேலிரண்டேழ் பன்னிரண்டும் விளங்கும் பத்திரை
யினியதொருமூன் றெட்டும் பதின்மூன்றுஞ் சயையா
மிருத்தை யொன்பானுகும் பதினுன்கு மாகும்

புனைகுழலாய் பஞ்சமியும்பத்து மூவா தாமும்
பூரணை மென்மறி யலவன் கோன் மகரஞ் சரமாந்
கனிவிடைதேள் குடஞ்சிங்கம் நிலைராசியாகுந்
தனுமிதுனங் கன்னியுமீ னுபய மெனத்தகுமே.

(பொ-ரை.) திதிகளின் பிரிவுகளை கேட்குமிடத்தில், பிரதமை, சஷ்டி, ஏகாதசி இந்த மூன்று திதிகளும், நந்தை என்றும் விதியை சத்தமி, துவாதசி, இந்த மூன்று திதிகளும் பத்திரையென்றும் திரிதியை அஷ்டமி திரயோதசி இந்த மூன்று திதிகளும் சபையென்றும் நவமி, சதுர்த்தி, சதுர்த்தசி இந்த மூனறு திதிகளும் இருத்தைபென்றும் பஞ்சமி தசமி பௌர்ணமி இந்த மூன்று திதிகளும் பூரணையென்றும் சொல்லப்படும், இனிராசிகளின் பிரிவுகளைச்சொன்னால் புஷ்ப மாலையுடன் ஆபரணங்களையும் புனைந்த கூந்தலையுடைய பெண்ணே மேஷம், கர்க்கடகம் துலா, மகரம், இந்த நான்கு ராசிகளும் சரராசிக ளென்றும் ரிஷபம், விருச்சிகம் கும்பம் சிங்கம் இந்த நான்கு ராசிகளும் ஸ்திரராசிகனென்றும், தனுசு, மிதுனம், கன்னி மீன் இந்தநான்கு ராசிகளும் உபயராசிகளென்றுஞ் சொல்லப்படும் (எ-று.

இதனுள்

பிரதமை-சஷ்டி-ஏகாதசி-இம்மூன்றிற்கும் நந்தையென்றும்
விதியை-சத்தமி-துவாதசி-இம்மூன்றிற்கும் பத்திரை யென்றும்
திரிதிகை-அஷ்டமி-திரயோதசி-இம்மூன்றிற்கும் சபையென்றும்
சதுர்த்தி-நவமி-சதுர்த்தசி-இம்மூன்றிற்கும் இருத்தைபென்றும்
பஞ்சமி-தசமி-உவா-இம்மூன்றிற்கும் பூரணையென்றும் பெயராம்
அன்றியும்மேடம்-கர்க்கடகம்-துலாமகரம்-இவை நான்கும் சரராசிகள்
இடபம்-விருச்சிகம்-கும்பம்-சிங்கம்-இவைநான்கும் ஸ்திரராசிகள்
தனுசுமிதுனம்-கன்னிமீனம்-இவைநான்கும்உபய விராசிகளென்றறிக

சந்திர நாட் கூறுபாடாகிய திதிப் புணர்ச்சிச் சக்கரம்.

சந்திரன் கூறு	முதற் பக்கம்-நந்தை	2-ம் பக்கம் பத்திரை	3-ம் பக்கம் சயை	4-ம் பக்கம் இருத்தை	5-ம் பக்கம் பூரணை
முதல் வட்டம்	பிரதமை	விதியை	திரிதிகை	சதுர்த்தி	பஞ்சமி
2-ம் வட் டம்	சஷ்டி	சத்தமி	அஷ்டமி	நவமி	தசமி
3-ம் வட் டப்	ஏகாதசி	துவாதசி	திரயோதசி	சதுர்த் தசி	உவா

சரராசிகள்	நிலைராசிகள்	உபயராசிகள்
மேடம்	இடபம்	மிதுனம்
கர்க்கடகம்	சிங்கம்	கன்னி
துலா	விருச்சிகம்	தனுசு
மகரம்	கும்பம்	மீனம்

சந்திரன்பக்கம் 5-க்கும்-வாரம் 7-க்கும் அக்ஷரப்புணர்ச்சி

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

ஊர்கோணத்தைக்கதிர்செவ்வாய் உகரமோங்கும்பத்திரையாம்
தேர்கோளருணன்மதிஇகரஞ்சயையும் பொன்னும்உகரமதாம்
வேர்கோளிருத்தைப்புகர் எகரம்வெய்யசனி பூரணை ஒகரம்
ஏர்கோளிடையாய்பகற்நடிகை யிவ்வாரிவைபூண்சொன்னேமே.

(பொ-ரை.) சந்திரனுடைய வட்டங்களாகிய ஐந்தில் முதல்வட்டமாகிய நந்தையில் அகர எழுத்துக்குரிய பட்சியானது ஞாயிறு, செவ்வாய் என்னும் இரண்டுவாரங்களிலும், பத்திரையில் இகாரஎழுத்துக்குரிய பட்சியானது புதன் திங்கள் என்னும் இரண்டு வாரங்களிலும், சயையில் எழுத்துக்குரிய பட்சியானது குருவாரத்திலும், இருத்தையில் எகர உகர எழுத்துக்குரிய பட்சியானது சுக்கிரவாரத்திலும் பூரணையில் ஒகர எழுத்துக்குரிய பட்சியானது சனிவாரத்திலும் உண்ணும் இவ்விதம் உண்ணுவது பகல்நாழிகை முப்பதிலுமாகும் என்று சொன்னோம்-எ-று 7

வாரம்	உண்டி	நடை	அரசு	நித்தி	மரணம்
நந்தை ஞாயிறு செவ்வா	அ	இ	உ	எ	ஒ
பத்திரை திங்கள் புதன்	இ	உ	எ	ஒ	அ
சயை வியாழ	உ	எ	ஒ	அ	இ
இருத்தை வெள்ளி	எ	ஒ	அ	இ	உ
பூரணை சனி	ஒ	அ	இ	உ	எ

அட்சரம் ஐந்திற்கும் பக்ஷிபுணர்ச்சி.

சொன்னவகரம் வல்லூறூண்டெய்ப இகரமாந்தையினூண்
முன்னே உகரங்கொடியூண மொழியில் எகரங்கோழியினூண்
பன்னு ஒகரமஞ்ஞையினூண் பண்டையடைவேபறவைகளொன்
றுண்ணுமிரண்டுநடைமுடி மூன்றுறக்க நான்குசாவைந்தே.

(பொ-ரை.) சொல்லப்பட்ட அகரம் வல்லூறின் ஊணாகும் இகரம் ஆந்தையின் ஊணாகும், உகரம் காகத்தின் ஊணாகும், எகரம்கோழியின் ஊணாகும், ஒகரம் மயிலின் ஊணாகும், இவ்விதமே ஐந்து பக்ஷிகளிலும் முதல் ஒன்றேகால் நாழிகையில் ஊணும், இரண்டாவது ஒன்றரைநாழிகையில் நடையும் மூன்றாவது இரண்டுநாழிகையில் அரசும் நான்காவது முக்கால்நாழிகையில் தூக்கமும், ஐந்தாவது அரைநாழிகையில் சாவுமாகும். எ-று. ஆயினும் அந்தந்த வாரங்களுக்கும், ஐந்து சாமங்களுக்கும் ஆறுநாழிகைகளுக்கும் மாற்றிக்கொள்ள வேண்டும். 8

பக்ஷிப்புணர்ச்சிச் சக்கரம்.

சாம விபரம்	ஞாயிறுசெவ்வாய் நந் அ-வல்லூறு	திங்கள் புதன்பத்திரை இ-ஆந்தை	வியாழம் சயை 2-காகம்	வெள்ளி இருத்தை எ-கோழி	சனி பூரணை ஒ-மயில்
முதல் சாமம்	உண்டி-1¼	உண்டி-1¼	உண்டி-1¼	உண்டி-1¼	உண்டி-1¼
2-ம் சாமம்	நடை-1½	நடை-1½	நடை-1½	நடை-1½	நடை-1½
3-ம் சாமம்	அரசு-2	அரசு-2	அரசு-2	அரசு-2	அரசு-2
4-ம் சாமம்	தூக்கம்-¾	தூக்கம்-¾	தூக்கம்-¾	தூக்கம்-¾	தூக்கம்-¾
5-ம் சாமம்	சாவு-½	சாவு-½	சாவு-½	சாவு-½	சாவு-½

இதுவுமது வேறுவகை.

முதல் சாமம்	அ வல்லூறு உண்டி	இ ஆந்தை நடை	உ காகம் அரசு	எ கோழி நித்திரை	ஒ மயில் மரணம்
2-ம் சாமம்	ஒ மயில் உண்டி	அ வல்லூறு நடை	இ ஆந்தை அரசு	உ காகம் நித்திரை	எ கோழி மரணம்
3-ம் சாமம்	எ கோழி உண்டி	ஒ மயில் நடை	அ வல்லூறு அரசு	இ ஆந்தை நித்திரை	உ காகம் மரணம்
4-ம் சாமம்	உ காகம் உண்டி	எ கோழி நடை	ஒ மயில் அரசு	அ வல்லூறு நித்திரை	இ ஆந்தை மரணம்
5-ம் சாமம்	இ ஆந்தை உண்டி	உ காகம் நடை	எ கோழி அரசு	ஒ மயில் நித்திரை	அ வல்லூறு மரணம்

வாக்கியாட்சரப் பொருத்தம்

அஷ்டவிதயோனிப் பொருத்தமென்றுஞ் சொல்லப்படும்.
சாய்ந்தவகரங்ககரமுடன் சகரந்தகரந்தங்கரம்
வாய்ந்தபகரமகரமுடன் வகரமிவையெட்டெழுத்தாகும்
ஆய்ந்தபருந்துமுதல்யோனி யிருநான்கினுக்குமடைவாக
வேய்ந்தபொருத்தம்வெற்றியுட னிதனுற்பறவையியம்பிடுமே.

(பொ-ரை.) ஏற்பட்ட அ, க, ச, த, ந, ப, ம, வ, என்னும் இந்த எட்டு எழுத்துக்களையும், கிழ்த்திசை முதலாக எட்டுத்திசைகளிலும் அடைத்து அவைகளில் கருடன்முதலிய எட்டு யோனிகளை ஏற்படுத்தி அந்த அட்சரங்களாலும், எட்டுயோனிகளாலும் ஐந்துபட்சிகளுடைய பலாபலங்களையும் ஜெயத்தையும், தோல்வியையும், உற

வையும், பகையையும் விசாரித்து சொல்லுவதே கிரமமாகும். எ-று. எட்டு யோனிகளாவன:—கருடன், பூனே, சிங்கம், நாய், பாம்பு எலி, யானை, முயல், என்பவைகளாம். 9

பொருத்தச் சக்கரம்.

வடகிழக்கு வ முயல்	கிழக்கு அ கருடன்	தென்கிழக்கு க பூனே
வடக்கு ம யானை	அ எ ஒ இ உ	தெற்கு ச சிங்கம
வடமேற்கு ப எலி	மேற்கு ந பாம்பு	தென்மேற்கு த நாய்

வாக்கியாட்சர சக்கரம்.

பக்ஷி	வாக்கியங்களுக்குமுதலெழுத்துகள்.							
வல்லூறு	அ	க	ச	த	ந	ப	ம	வ
	ஆ	கா	சா	தா	நா	பா	மா	வா
ஆந்தை	இ	கி	சி	தி	நி	பி	மி	வி
	ஈ	கீ	சீ	தீ	நீ	பீ	மீ	வீ
காகம்	உ	கு	சு	து	நு	பு	மு	வு
	ஊ	கூ	சூ	தூ	நூ	பூ	மூ	வூ
கோழி	எ	கெ	செ	தெ	நெ	பெ	மெ	வெ
	ஏ	கே	சே	தே	நே	பே	மே	வே
மயில்	ஒ	கொ	சொ	தொ	நொ	பொ	மொ	வொ
	ஓ	கோ	சோ	தோ	நோ	போ	மோ	வோ

ஊரீவசொரஷ்டுஸ்ஷ்ட.

அக்ஷராலங்காரப் பொருத்தம்.

இயம்புமுன்னெழுத்தேபால னிரண்டது குமரன்மூன்றே
வயம்புரப்போனுநான்கு விருத்தனேமரணனைந்தாம்
பயன்கொடன்பெயரெழுத்தும் பரவியேபார்ப்பதாலே
வியனுடன்றாக்கியெட்டிற் கழித்தெனும்வெற்றிபாரே.

(பொ-ரை.) பஞ்சபடசிகளுக்குரிய அ, இ, உ, எ, ஒ, என்கிற ஐந்தெழுத்துக்களையும் சக்கரத்தில் பொருத்தி இவ்வெழுத்துக்களை முதலாவது இரண்டாவதாக அடைத்தமுறையில் தன்னுடைய பெயரின்முதல எழுத்தைக்சேர்க்கின் அதுமுதல் எழுத்தாகவே காணில் அதுபாலப் பொருத்தமென்றும், அது இரண்டாவது எழுத்தானல் குமாரப் பொருத்தமென்றும், மூன்ருவது எழுத்தானல் அரசப்பொருத்தமென்றும், நான்காவது எழுததானல் விருத்தப் பொருத்தமென்றும், ஐந்தாவது எழுத்தானல் மரணப்பொருத்தமென்றுஞ் சொல்லப்படும் அன்றிவேறு, விதமாகப்பார்த்தால் பாலப்பொருத்தம், குமரப்பொருத்தம், அரசப்பொருத்தம், விருத்தப்பொருத்தம், மரணப்பொருத்தம், என்னும் இவைகளுக்குமுறையே பன்னிரண்டு உயிர் எழுத்துகளுமாகும் இப்பன்னிரண்டு எழுத்துகளோடு பாட்டுடைத் தலைவனுடைய பெயரெழுத்தை பாலஸ்தானமாகக்கொண்டு எண்ணினல் முதல்மூன்றும் நன்மைத்தரும் பின்னைய மூன்றும் தீமையைத்தரும் கடைசியிலுள்ள நான்கும் ஐந்தும் ஆகா ஆகையால் தன்னுடைய பூர்வநாமத்தில் அந்தமரண எழுத்தைநீக்கி மிகுதிநின்ற எழுத்துக்களை எண்ணி ஏழில்பெருக்கி எட்டில் கழித்துநின்ற சேடத்தை உணர்ந்தால் உயர்ந்தபெயர் பொருந்தும். எ-று. 10

நாமயோனிப் பொருத்தம்.

பேரெழுத்தெண்ணியேழிற் பெருக்கியேயெட்டிற்கீந்து
பாரமாய்நின்றசேடம் பருந்துமுன்னுகவெண்ணி
நேரதேயோனியென்றுநின்றது பகையதாகும்
எரதாங்கரிமுன்னெண்ணி யியல்புடன்யோனிகாணே.

(பொ-ரை) நாமத்தின் பேரை எண்ணி அவ்வெழுத்துக்களை ஏழாற்பெருக்கி எட்டால்வகுத்து மிகுதியாய்நின்ற சேடத்தைக் கருடன் முன்னுக எண்ணி அதனல் ஒன்று நின்றது பகையாகும் இப்படியே ஒவ்வொருயோனிகளையும் சரியாய் நிதானிக்கவேண்டும். எ-று.

இருவருள்வெற்றிப் பொருத்தம்.

ஒருவரையொருவர்வெல்ல வுபாயத்தையறியவேண்டி
லிருவர்தம்பெயரி லுள்ளவிய லெழுத்ததனையெண்ணிப்
பெருகியபத்தினாலே பெருக்கியேயெட்டிற்கீயச்
சிறியவர்பெரியவர்க்குத்தோற்பது திண்ணந்தானே.

(பொ-ரை.) ஒருவரை ஒருவர் ஜெயிக்க வேண்டுமென்று எண்ணினால் இரண்டுபேருடைய பேரினது எழுத்துகளைத்தனித்தனியே எண்ணி அவ்வெழுத்துத் தொகையைப்பத்தினால்பெருக்கி எட்டால் வகுத்து சிறிய தொகையாக வரும்பேருடையவர் பெரிய தொகையாகவரும் பேருடையவர்க்குத் தோற்றுவிடுவதுஉறுதியாகும். எ-று

அருக்கனிலை-கலிவிருத்தம்.

அருக்கநிலையாங்கருட னனதொருபூனைச்
செருக்கினருஞ்சிங்கமொரு செங்கதிரனேநாய்
கருக்கும் விழிநாக மெலிகாரரனைமுயலும்
இருக்குமிடமாய்ந்துபல னேயுரைசெய்வீரே

(பொ-ரை.) கருடன், பூனை, சிங்கம், நாய், பாம்பு, எலி, யானை முயல் என்னும் இந்த எட்டுயோனிகளும் இருக்கின்ற நிலைகளையுணர்ந்து பலாபலனை சொல்லுவீராக. எ-று. 13

பக்ஷி வலிவு.

சித்திரைமூன்றுமாதம் சிற்றெலிபூனையாகும்
மற்றொருமூன்றுமாதம் வருமுசல்நாயதாகும்
ஐப்பசிமூன்றுமாதமரி யெதிரானையாகும்
தையொருமூன்றுமாதஞ் சர்பமுங்கருடனாமே

(பொ-ரை.) எலி, பூனை இவ்விரண்டு யோனிகளுக்கும் சித்திரை, வைகாசி, ஆனி, என்னும் மூன்று மாதங்களும் முயல் நாய் என்னும் இவ்விரண்டு யோனிகளுக்கும் ஆடி, ஆவணி, புரட்டாசி என்னும் மூன்று மாதங்களும் சிங்கம், யானை என்னும் இவ்விரண்டுயோனிகளுக்கும் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்னும் மூன்று மாதங்களும், பாம்பு, கருடன் என்னும் இவ்விரண்டுயோனிகளுக்கும், தை, மாசி, பங்குனி என்னும் மூன்று மாதங்களும் வலிவுள்ளவைகளென்றுணரக் கடவர். எ-று. 14

இச்செயுள் ஒன்பதும் ஒருதொடர்

உதாரணக்கவிகள்.

மண்டலபுருடன் சொன்ன நிகண்டில்
12-வது பலபெயர்க் கூட்டத்தொகுதியிலிருந் தெடுத்தெழுதியது

பூர்வபக்ஷம்.

அறுசீர்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அகரமேவாதியாக வைந்துகுற்றெழுத்தாமே
புகர்வல்லூறாந்தைகாக்கை பொற்கோழியொடுகலாபி
தொகுமுண்டிபோக்குவேந்து தூக்கவேசாக்குஞ்சாவாம்
பகருமைந்தெழுத்தில்யாது பற்றினுமதுவேமுன்னும்

(பொ-ரை.) அ, இ, உ, எ, ஒ, என்னும் இவ்வைந்துகுற்றெழுத்துகளும், எழுத்துநிற்கும் வரிசைப்படியே, வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், என்னும் ஐந்து பட்சிகளாகும் இப்பட்சிகள் பூர்வபட்சத்தில், ஊண், நடை, அரசு, தூக்கம், மரணம் என்னும் தொழில்களைப்பெறும், வாதுசெய்தாலும் இவ்வைந்தெழுத்தின், மார்க்கமேயாகும். எ-று. 15

அமரபக்ஷம்.

பிற்பக்கமாகில்வேறு பேதிக்குமாதேவென்னில்
அற்புகவுண்டிசாவே யரிதுயிலரசுபோக்கு
பொற்புருமரணந்தூக்க மில்லாதபொழுதையோர்ந்து
பற்பலசெய்யுட்டானே பகர்ந்திடின்மிகுந்தநன்மை.

(பொ-ரை.) அமரபட்சமாயிருந்தால் வேறுவகையாக வித்தியாசப்படுமோவென்றால் ஆகும் அது ஊண், மரணம், தூக்கம் அரசு நடை என்றுமாறும் எப்படியிருந்தாலும் மரணம், தூக்கம் என்னும் இரண்டு தொழில்கள் இல்லாதபோது பலவகையான காரியங்களைச் செய்தால் மிகுந்தநன்மை உண்டாகும். எ-று. 16

இச்செயுள் இரண்டும் ஒருதொடர்

உதாரணக் கவிகள்.

பக்ஷமிரண்டிற்கும் பக்ஷிபாகமிலே

முதற்பக்க	உண்டி	நடை	அரசு	தூக்கம்	சாவு	பிற்பக்க
மாகிய	அ வல்லூறு	இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்	மாகிய
பூர்வபட்சம்	நடை	அரசு	தூக்கம்	சாவு	உண்டி	அமரபக்ஷம்

இதற்குமேற்கோள் பன்னிரண்டாவது பலபெயர்க்கூட்டத்தொகுதி.

காலச்சக்கரம்.

இதன்மத்தியில் சிறுவட்டத்திலுள்ள பக்ஷிகளில் எந்தெந்த வாரங்களுக்கு எந்தெந்தப்பட்சிக ளுண்டாகின்றதோ அந்தபட்சி சாதியாகப் பெருவட்டத்திலுள்ள உண்டியாதி மரணமீருக வலப்புரமே சுழற்றிவரில் பூர்வபக்ஷம் திதி 15-க்கு வாரம் 7-க்கும் பகல் கவிக்குச் சரியாகவும், உண்டியாதி நித்திரை ஈருக ஒன்றுவிட்டு ஒன்றுமாறிச் சுழற்றிவரில், இராக்கவிக்குச் சரியாகவும் வரும் உண்டியாதி நடையீருக இடப்புரமே சுழற்றிவரில் அமரபட்சம் பகல்கவிக்குச் சரியாகவும், உண்டியாதி அரசீருக ஒன்றுமாறி சுழற்றிவரில் இராகவிக்குச் சரியாகவரும்.

பூர்வபட்சம்.



அமரபட்சம்.

நாள் 1-க்கு நாழிகை 60-ஆகவும் சாமம் 10 ஆகவும் சாமம் 1-க்கு நாழிகை 6-ஆகவுமாம், இவற்றுள் பகல்நாழிகை 30-க்குச்சமம் 5-என்றும் இராநாழிகை 30-க்கு சாமம் 5-என்றும் ருதுக்களின் அகசுப்பிரகாரம் பிரித்துணர்ந்து கொள்ளத்தகும்:—இந்நூல் முழுதும் பார்த்துப் பிரமைகொள்ளுவதிலும் இந்நூற்பயன் சூக்ஷ்மமாக இச்சக்ரத்தினல் கண்டுதெளிதலே நன்மை பயக்கும்.

முதல் அதிகாரம் முற்றிற்று.

குருவே துணை.

இரண்டாம் அதிகாரம்.

வளர்பிறையாகிய பூர்வபக்ஷத்திற்கு

பகல்.

வாரங்கள் 7-க்கும் ஊண்பக்ஷிகள்.

அறுசீர்க்கழிநெடிலடி{யாசிரியவிருத்தம்.

செவ்வாயருக்கன்வல்லூறுண் சிறந்ததிங்கள்புதனுந்தை
கவ்வார்வியாழம்காரணடங் கருதும்வெள்ளிகோழியதாம்
பவ்வார்சனியின்மயிலூணும் வளரும்பகலுக்காராய்ந்து
மிவ்வாரிந்நூற்குறுமுனியு மியம்புங்கடலாருலகுக்கே.

(பொ-ரை.) செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுகிழமைகளில் வல்லூறு ஊணுகும், திங்கட்கிழமை, புதனகிழமைகளில், ஆந்தைஊணுகும், வியாழக்கிழமையில் காகம் ஊணுகும், வெள்ளிக்கிழமையில் கோழி ஊணுகும், சனிக்கிழமையில் மயில் ஊணுகும், இவ்விதம் பூர்வபட்சத்திற்காகுமென்று நன்குயாராய்ந்து இக் கடல்சூழுலகினர்க்கு அகஸ்தியர் சொன்னுர். எ-று. 1

வாரங்கள் 7-க்கும் படுபக்ஷிகள்.

அருக்கன்வெள்ளிமுனிமரண மணிசேர்செம்பொற்காரியுட
னெருக்கும்வல்லூறேமரண நெறியாங்காகமதிமரணஞ்
செருக்குஞ்செவ்வாய்கோழியதாஞ் சேர்ந்தபுந்திமயின்மரணங்
கருக்குங்குழலாய்முற்பக்கங் கடிகையறுபான்சாவாமே.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் நாளொன்றுக்கு அறுபது நாழிகையும் மரணமாயிருக்கிற படுபட்சிகளாவன கறுத்த கூந்தலையுடையவளே! ஞாயிறு, வெள்ளி, இவ்விரண்டு கிழமைகளில் ஆந்தை மரணம், வியாழம், சனி இந்தகிழமைகளில் வல்லூறு மரணமாகும் திங்கட்கிழமையில் காகம் மரணமாகும் செவ்வாய்க்கிழமையில் கோழிமரணமாகும், புதன்கிழமையில் மயில் மரணமாகும். எ-று. 2

நேரிசைவெண்பா பக்ஷிகளின்செய்கை.

உண்டுநடந்துமுலகாண்டு நீத்திரையாய்த்
தண்டமுறமுற் பகலிற்சாவாகும் உண்டு
மரசாயிறந்து மநேகவழிநடந்து
மிரவாலுறங்கு மிடை.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் பட்சிகள் உண்டும், நடந்தும், அரசாண்டு, தூங்கியும், மரணமாயும்மிருக்கும், அமரபட்சத்தில், உண்டும். அரசாயிருந்தும், இறந்தும், நடத்தும், தூங்கியுமிருக்கும். எ-று. 3

வாரங்கள் 7-க்கும் பகற்சாமங்கள் 5-க்கும் பகுத்தமைத்தல்

அக்ஷரம் 5-பக்ஷி 5-சாமம் 5-க்கும் பயனிலை

ஞாயிறு செவ்வாய்பகல்.

வல்லூறமுண்ணவாந்தை வழிநடக்க
நல்லசிறகாகமது நாடாளப்-பொல்லா
வுறக்கமதுகோழியொன் றேடியரீங்கே
யிறக்குமயிலென்றே யியம்பு.

(பொ-ரை.) ஞாயிறு, செவ்வாய், இந்தக் கிழமைகளில் பகலில் வல்லூறானது உண்ணவும், ஆந்தையானது நடையிலிருக்கவும், காகமானது அரசாகவும், கோழி யானது தூக்கமாகவும், மயிலானது செத்துமிருக்குமென்று, பெண்காள் நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள் என்றவாறு.

சனி பகல்.

காந்தமயிலுண்ணக்கதித்தகுரல் வல்லூறு
தோந்தமுடனேநடக்கத் தூய்மொழியீ-ராந்தை
யாசுபதியா மருங்காகந்தூங்கச்
சரசம்பொற்கோழியதுசாம்.

(பொ-ரை) சனிக்கிழமைகளில் மயிலானது உண்ணவும் வல்லூறு நடக்கவும் ஆந்தை அரசாகவும், காகம் தூங்கவும், கோழிசாவவும் விதியாம். எ-று. 5

வெள்ளி பகல்.

கோழியமுதுண்ணக் குதித்துமயினடக்க
வாருமரசனு வல்லூறு-தோழிகே
ளாந்தையுறங்கவருங் காகந்தானிறக்க
மாந்தர்க்கழகால் மதி

(பொ-ரை.) வெள்ளிக்கிழமைகளில் கோழி உண்ணவும் மயில்நடக்கவும், வல்லூறு அரசாளவும், ஆநதை தூங்கவும், காகம்மரணமாகவும் விதியாம். எ-று. 6

வியாழம் பகல்.

காரண்டமூண்ணக கருங்கோழிதானடக்க
வேருண்டமாமயிலும் வேந்தாகுஞ் சீரண்டும்
வல்லூறுதுங்க வலுவாந்தைதானிறக்கச்
சொல்லூறுகாட்டுந் தொகை.

(பொ-ரை) வியாழக்கிழமைகளில் காகம் உண்ணவும், கோழியானது நடக்கவும், மயிலானது அரசாகவும், வல்லூறானது தூங்கவும், ஆந்தை மரணமாகவும் விதியாம் இவ்வாறு விதிப்பதே தொகையாம். என்றவாறு.

திங்கள் புதன்பகல்.

ஆந்தையமுதுண்ணவருங்காகந்தானடக்கப்
போயந்திருந்தகோழியதுபூபதியாஞ் சாந்த
மயிலுமுறங்க மடியுமேவல்லூறு
மயிலப்புதுமையெனப் பார்.

(பொ-ரை) திங்கட்கிழமை, புதன்கிழமைகளில் பகலில் ஆந்தையானது உண்ணவும் காகமானது நடக்கவும் கோழி அரசாளவும் மயிலானது தூங்கவும், வல்லூறு மரணமாகவும் விதியாம். எ-று 8

பூர்வபட்சத்து பகல்.

திதி 15-க்கும் வாரங்கள் 7-க்கும் வாரம் 1-க்குப்பகல்
நாழிகை 30-க்கு சாமம் 5-ஆகவும் சாமம் 1-க்கு
நாழிகை 6-ஆகவும் பகுத்தமைத்தல்

வாக்கியசக்கரம் பூர்வபட்சம் பகல்.

வாக்கியம்.	வார	உண்டி	நடை	அரசு	தூக்கம்	சாவு
அ-ரி-து-எ-தோ	ஞாயி செவ்	அ வல்லூர்	இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்
ஒ-தா-தி-யு-தே	சனி	ஒ மயில்	அ வல்லூர்	இ ஆந்தை	உ காகம்	எ கோழி
எ-தோ-வா-திய	வெள்ளி	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்	இ ஆந்தை	உ காகம்
ஊ-ரே-தோநாரி	வியாழம்	உ காகம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்	இ ஆந்தை
இ-து-நேரேமா	திங்க புதன்	இ ஆந்தை	உ ஆந்தை	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்

வாரங்கள் எ-க்கும் பகல்பக்ஷி.

முதல்சாமத்தில் உதிக்கின்றபட்சி உண்டு 2-ம்சாமத்தில் நடந்து 3-ம்சாமத்தில் அரசாகி 4-ம் சாமத்தில் தூங்கி 5-ம் சாமத்தில் சாகும் அன்றியும் இவற்றின் சாமம் 1-க்கு நாழிகை 6-க்கு அந்தர புக்தி பார்க்குமிடத்தில் உண்டி கவ-நடை 1½-அரசு 2-தூக்கம் ¾-சாவு ½-ஆ சாமந்தோறும் நிச்சயித்துக்கொள்ளவும்.

எழுத்து முறைச் சக்கரம்.

ஞாயிறு-செவ்வாய்.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	அ	இ	உ	எ	ஒ
2	ஒ	அ	இ	உ	எ
3	எ	ஒ	அ	இ	உ
4	உ	எ	ஒ	அ	இ
5	இ	உ	எ	ஒ	அ

சனி.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	ஒ	அ	இ	உ	எ
2	எ	ஒ	அ	இ	உ
3	உ	எ	ஒ	அ	இ
4	இ	உ	எ	ஒ	அ
5	அ	இ	உ	எ	ஒ

வெள்ளி.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	எ	ஒ	அ	இ	உ
2	உ	எ	ஒ	அ	இ
3	இ	உ	எ	ஒ	அ
4	அ	இ	உ	எ	ஒ
5	ஒ	அ	இ	உ	எ

வியாழம்.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	உ	எ	ஒ	அ	இ
2	இ	உ	எ	ஒ	அ
3	அ	இ	உ	எ	ஒ
4	ஒ	அ	இ	உ	எ
5	எ	ஒ	அ	இ	உ

திங்கள்-புதன்.

சாமம்	உண்டி	நடை	அரசு	தூக்கம்	சாவு
1	இ	உ	எ	ஒ	அ
2	அ	இ	உ	எ	ஒ
3	ஒ	அ	இ	உ	எ
4	எ	ஒ	அ	இ	உ
5	உ	எ	ஒ	அ	இ

பூர்வபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

ஞாயிறு-செவ்வாய்,

சாமம்	அ வல்லூ	இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
3	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
4	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
5	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

சனி.

சாமம்	ஒ மயில்	அ வல்லூ	இ ஆந்தை	உ காகம்	எ கோழி
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
3	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
4	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
5	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

வெள்ளி.

சாமம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்	இ ஆந்தை	உ காகம்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
3	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
4	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
5	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

வியாழம்.

சாமம்	உ காகம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்	இ ஆந்தை
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
3	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
4	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
5	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

திங்கள்-புதன்.

சாமம்	இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூர்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
3	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
4	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
5	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்

இரண்டாமதிகாரம் முற்றிற்று.

முதலாவது செய்யுள் தொகை 20
இரண்டாவது செய்யுள் தொகை 8 } ஆ செய்யுள்தொகை-28

முதலாவது சக்கரத்தொகை 12
இரண்டாவது சக்கரத்தொகை 11 } ஆ சக்கரத்தொகை - 23

குருவே துணை.

மூன்றும் அதிகாரம்.

பூர்வபட்சம் வாரங்கள் 7-க்கும்.

இராக்கவி சொக்கக் கலிப்பா

ஊண் பக்ஷிகள்.

ஞாயிறுசெவ்வாய்காரண்ட நல்லபுந்திமதிகோழி
மாயப்பொன்னேமயிலாகும் வளரும்வெள்ளிவல்லூறும்
ஓபாவாந்தைசனியுண்ணு முயருங்கவ்கு லுணர்கென்ன
ஆயும்வேதக்குறுமுனிவ னருளாலிசைத்தவரும்பொருளே.

(பொ-ரை) பூர்வபட்சத்தின் ஞாயிறு, செவ்வாய் இந்தக்கிழமைகளில் இரவில் காகத்தின் ஊணும், புதன்கிழமை திங்கட்கிழமை இவைகளின் இரவில் கோழி ஊணுகும், வியாழக்கிழமையில் மயிலின் ஊணுகும், வெள்ளிக்கிழமையில் வல்லூறின் ஊணுகும், 'சனிக்கிழமையில ஆந்தையின் ஊணுதும், என்று, அகஸ்தியமுனிவர் கருணையினல் சொன்னர். எ-று. 1

நேரிசைவெண்பா கடைநிலைப்பட்சிகள்.

அந்திதனிச்செவ்வா யருக்கனருங்காகம்
புந்திமதிகோழிபோன் மயிலாம்—பைந்தொடியீர்
சுக்கிரனும்வல்லூறு தூயசனியாமாந்தை
பக்கிநின்ற திந்தப்படி.

(பொ-ரை.) காகமானது செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும், கோழியானது புதனகிழமை, திஙகட்கிழமைகளிலும், மயில்வியாழக்கிழமையிலும் வலலூறு வெள்ளிசகிழமையிலும், ஆந்தை சனிககிழமையிலும், வரிசைககிரமமாயிருக்கும், இவ்விதிலையபசியவளையலணிந்த பெணணே ! நீ உணர்வாயாக. எ-று. 2

வாரஙகள் 7-க்கும் இராச்சாமஙகள் 5-க்கும்

பகுத்தமைத்தல்.

அக்ஷரம் 5-பட்சி 5-சாமம் 5-க்கும் பயனிலை

ஞாயிறு செவ்வாய் இரவு நேரிசை வெண்பா.

காகமுதுண்ணக் காராந்தைதானரசராய்
வாகானவல்லூறு மாண்டுவிழத்-தோகாய்கேள்
போகாமயினக்கப் பொற்கோழிகண்டுயிலப்
பாகமுடனுய்ந்தறிந்து பார்.

(பொ-ரை. தோகையையுடைய மயிலன்னுளே! ஞாயிறு செவ் வாய் இரவுகளில் காகமானது உண்ணவும், ஆந்தை அரசாளவும், வல் லூறு மரணமாகவும், மயில்நடக்கவும், கோழி தூங்கவும் இருத்தல் விதி யாம் இவ்விதியை நீ பக்குவமாக ஆராய்ந்துபார். எ-று. 3

திங்கள் புதன் இரவு.

கோழியமுதுண்ணக்கூர்வாய்சமரசமாய்ச்
*சேழியதாமாந்தையது செத்துவிடுந்-தோழிகேள்
வல்லூறுமேகுமே மாமயிற்றூங்குமே
சல்லாபமிக்குமேதான்

(பொ-ரை.) கோழி! நான் சொல்வதைக் கேள்! திங்கட்கிழமை புதன்கிழமை, இவைகளின் இரவில் கோழியானது உண்ணவும், காகம் அரசாளவும், ஆந்தை மரணமாகவும், வல்லூறு நடையாகவும் மயில் தூக்கமாகவுமிருக்கும் இதுவே அப்பட்சிகளின் சல்லபமாகும். எ-று.

வியாழம் இரவு.

தோகையமுதுண்ணச் சொற்கோழிதாவரசாய்க்
காகமதுசெத்துவிழக் கண்டோமே-ஆகையினு
லாந்தையதுநடக்கும் வல்லூறுந்தூங்குமெனச்
சாந்தமுலையாயறிந்து சார்.

(பொ-ரை.) மிருதுதன்மையான முலையையுடைய பெண்ணே! நீ நான்சொல்லுவதைஆராய்ந்துபார் வியாழக்கிழமையின் இரவில் மயில் உண்ணவும், கோழி அரசளவும் காகம் மரணமாகவும் ஆந்தை நடக்க வும் வல்லூறு தூங்கவும் இருத்தல் விதியாம். எ-று. 5

* நீட்டல் விகாரம்.

வெள்ளி இரவு.

வல்லூறுமுண்ண மாமயிலுந்தானரசாய்ப்
பொல்லாதகோழியது போயிறக்க-நல்லாய்கேள்
காரண்டந்தானடக்கக் கண்டுயிலுமேயாந்தை
சீரண்டு மாலுண்டுசேர்

(பொ-ரை.) நன்மையுள்ளபெண்ணே! கேள் வெள்ளிக் கிழமை இரவில் வல்லூறு உண்ணவும், மயில் அரசாளவும், கோழி மரணமாகவும், காகம் நடக்கவும், ஆந்தை தூங்கவும் விதியாம். எ-று. 6

ஆந்தை யமுதுண்ணும் வல்லூறரசுசெயுஞ்
சேர்ந்தமயிலதுவுஞ் செத்துவிழும் ஏந்திழையீர்
கோழியதுநடக்குஞ் சொம்பார்ந்தகாகமது
வீழும்விழிதுயின்று மேல்

(பொ-ரை.) தாங்கிய ஆபரணங்களை யுடையவர்களே! சனிக்கிழமை இரவில் ஆந்தை உண்ணவும் வல்லூறு அரசாளவும், மயில் மரணமாகவும், கோழி நடக்கவும், காகம் தூங்கவும் விதியாம். எ-று. 7

பூர்வபக்ஷத்திரவுக்கு வ ரப்பக்ஷிவகுப்பு.

முதல் சாமத்திலுகிக்கின்றபக்ஷி உண்டு உ-ம் சாமத்தில் அரசனுதி 3-ம்சாமத்தில்செத்து 4-ம் சாமத்தில் நடந்து 5-ம்சாமத்தில் தூங்குமெனக் காண்க.

வாக்கியச்சக்கரம்.

	வாக்கியம்	வாரங்கள்	உண்டி	அரசு	சாவு	நடை	தூக்கம்
பூர்வபக்ஷம் இரவு.	கூ-ரி-யபோதோ	ஞாயி செவ்	உ காகம்	இ ஆந்தை	அவல் லூறு	ஒ மயில்	எ கோழி
	தேடுவி-மா-தோ	திங்க புதன்	எ கோழி	உ காகம்	இ ஆந்தை	அ-வல் லூறு	ஒ மயில்
	போதேகூடி-வா	வியாழ	ஒ மயில்	எ கோழி	உ காகம்	இ ஆந்தை	அ-வல் லூறு
	மா-தோ-தேடுவி	வெள்ளி	அ-வல் லூறு	ஒ மயில்	எ கோழி	உ காகம்	இ ஆந்தை
	விற-ஞே-கே-ழு	சனி	இ ஆந்தை	அ-வல் லூறு	ஒ மயில்	எ கோழி	உ காகம்

வாரங்கள் எ-க்கும் இராப்பட்சி.

இவற்றுள் ஜாமாந்தர புக்திபார்க்குமிடத்தில் பூர்வபக்ஷம் பகலைப் போலவே இரவுக்கு ஜாமம் 1-க்கு நாழிகை 6-க்கும் உண்டி $1\frac{1}{4}$-நடை $1\frac{1}{2}$-அரசு 2-தூக்கம் $\frac{3}{4}$-சாவு $\frac{1}{2}$-ஆக தொழில் மாறுமல் வருமென்று நிச்சயித்தல்.

எழுத்து முறைச் சக்கரம்.

திங்கள்-புதன்.

சாமம்	ஊண்	அரசு	சாவு	நடை	தூ
1	உ	இ	அ	ஒ	எ
2	எ	உ	இ	அ	ஒ
3	ஒ	எ	உ	இ	அ
4	அ	ஒ	எ	உ	இ
5	இ	அ	ஒ	எ	உ

ஞாயிறு-செவ்வாய்.

சாமம்	ஊண்	அரசு	சாவு	நடை	தூ
1	எ	உ	இ	அ	ஒ
2	ஒ	எ	உ	இ	அ
3	அ	ஒ	எ	உ	இ
4	இ	அ	ஒ	எ	உ
5	உ	இ	அ	ஒ	எ

வியாழம்.

சாமம்	ஊண்	அரசு	சாவு	நடை	தூ
1	ஒ	எ	உ	இ	அ
2	அ	ஒ	எ	உ	இ
3	இ	அ	ஒ	எ	உ
4	உ	இ	அ	ஒ	எ
5	எ	உ	இ	அ	ஒ

வெள்ளி.

சாமம்	ஊண்	அரசு	சாவு	நடை	தூ
1	அ	ஒ	எ	உ	இ
2	இ	அ	ஒ	எ	உ
3	உ	இ	அ	ஒ	எ
4	எ	உ	இ	அ	ஒ
5	ஒ	எ	உ	இ	அ

சனி. வேற்றுமுறை.

சாமம்	ஊண்	அரசு	சாவு	நடை	நித்தி
1	இ	அ	ஒ	எ	உ
2	உ	இ	அ	ஒ	எ
3	எ	உ	இ	அ	ஒ
4	ஒ	எ	உ	இ	அ
5	அ	ஒ	எ	உ	இ

	ஊண்	அரசு	சாவு	நடை	நித்தி
உண்	உ	இ	அ	ஒ	எ
நடை	ஒ	எ	உ	இ	அ
அரசு	இ	அ	ஒ	எ	உ
துயி	எ	உ	இ	அ	ஒ
சாவு	அ	ஒ	எ	உ	இ

பூர்வபட்சம் பகல்முறைச் சக்கரம்.

ஞாயிறு-செவ்வாய்.

சாமம்	காகம்	ஆந்	வல்	மயில்	கோழி
1	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
2	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
3	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
4	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
5	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

திங்கள்-புதன்.

சாமம்	கோழி	காகம்	ஆந்	வல்	மயில்
1	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
2	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
3	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
4	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
5	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

வால்மீகர் ஆரூடசாஸதிரம்
150-பாடல் மூலம் உறை
சக்கரங்களுடன் 0 8
மேற்டி 40 பாடல் 0 3

போகர்பஞ்சபக்ஷி சாஸ்திரம்
மூலம் உறை 0 14
விநாடிபஞ்சபட்சிசாஸதிரம்
மூலம் உறை 1 4

டி. சாரதா புத்தகசாலை மின்ட் போஸ்டு, மதராஸ்.

வியாழம்.

சாமம்	மயில்	கோழி	காகம்	ஆந்	வல்
1	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
2	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
3	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
4	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
5	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

வெள்ளி.

சாமம்	வல்	மயில்	கோழி	காகம்	ஆந்
1	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
2	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
3	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
4	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
5	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

சனி.

சாமம்	ஆந்தை	வல்லூர்	மயில்	கோழி	காகம்
1	ஊண்	அரசு	சாவு	நடை	துயில்
2	அரசு	சாவு	நடை	துயில்	ஊண்
3	சாவு	நடை	துயில்	ஊண்	அரசு
4	நடை	துயில்	ஊண்	அரசு	சாவு
5	துயில்	ஊண்	அரசு	சாவு	நடை

குருவே துணை.

நான்காம் அதிகாரம்.

தேய்பிறையாகிய அமரபட்சத்துக்கு பகல்

வாரங்கள் 7 க்கும் ஊண்பக்ஷி,

நேரிசைவெண்பா.

திங்கட்சனிமயிலாஞ் சேயருக்கன்கோழியதாம்
பொங்குபுதன்காகம் போசனமா—மங்கையே
அந்தணனுக்காந்தை யணிபுகர்க்கும்வல்லூறு
சந்ததமும்பிற்பகற்கே சாற்று

(பொ-ரை.) பெண்ணே! (அமரபட்சத்தின்) திங்கட்கிழமை சனிக்கிழமை இவைகளின் பகலில் மயிலானது உண்ணும் செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமை இவைகளின் பகலில் கோழியானது உண்ணும் புதன்கிழமையின் பகலில் காகம்உண்ணும், வியாழக்கிழமையின் பகலில் ஆந்தைஉண்ணும். வெள்ளிக்கிழமையின் பகலில் வல்லூறு உண்ணும், இவ்விதியை எக்காலமும், அமரபட்சத்துக்கே சொல்லக்கடவாய். எ-று. 1

இராப்பகல் நாழிகை 60-க்கும் படுபக்ஷி.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கூறிடுந்திங்களாந்தை குலவுசேய்வல்லூறுகு
மீறியவருக்கன்காகம் வெள்ளியும்—புதனுமஞ்ஞை
யேறியசனிவியாழங் கோழியாமியம்புங்காலை
யாறுபத்தாகுங்கன்ன லதிற்சாகுமமரபக்கம்.

(பொ-ரை.) அமரபக்ஷம் இராத்திரி அறுபதுநாழிகைகளும் திங்கட்கிழமையில் ஆந்தையும், செவ்வாய்கிழமையில் வல்லூறும், ஞாயிற்றுக்கிழமைகளில் காகமும், வெள்ளிக்கிழமை, புதன்கிழமைகளில் மயிலும் சனிக்கிழமை, வியாழக்கிழமைகளில் கோழியும் படுபக்ஷிகளாம் எனக் கூறப்படும். எ-று. 2

பக்ஷிகளின் செய்கை.

நேரிசைவெண்பா.

உண்டுடனேசெத்து முறங்கியரசாண்டும்
விண்டுநடக்கும் விழிமடவீ—ரன்றிரவில்
உண்டுமுறங்கு முடனேநடந்திறக்குங்
கண்டரசனுகுமெனக் காண்.

(பொ-ரை.) விழிகளையுடைய மடமாதர்களே! பகலில் உண்டும் செத்தும், தூங்கியும் அரசாண்டும், நடந்துவரும், இராத்திரியில் உண்டும், தூங்கியும், நடந்தும், செத்தும், அரசாண்டும், வருமென்று காண்பீர்களாக. எ-று. 3

வாரங்கள் 7-க்கும் பகல் சாமங்கள் 5-க்கும்

பகுத்தமைத்தல்.

அக்ஷரம் 5-சாமம் 5-பக்ஷி 5-க்கும் பயனிலே

திங்கள், சனிபகல்.

வாரியோர்மயிலுண்ண மாலாகுமாந்தை
திரியாதோதேசமெல்லாஞ் சென்று—பெரிய
வாரணமேமண்ணுள வல்லூறுதானுறங்கக்
காரணத்தாற்காக்சைசாங் காண்.

(பொ-ரை.) திங்கட்கிழமை. சனிக்கிழமைகளின் பகலில் சித்திர வரிகள் பொருந்திய மயில்உண்ணவும். ஆந்தை நடக்கவும் கோழி, அரசாளவும், வல்லூறு தூங்கவும் காக்கைசாவவும், ஆகும், எ-று. 4

வியாழம் பகல்.

கண்டாந்தையுண்ணக் கருங்கோழிதானடக்க
வண்டாயுன்வல்லூறு மன்னவனாய்—விண்ட
விழிமூடுமேகாகம் வீணாகமஞ்ஞை
பழிதேடவேயிறக்கும் பார்

(பொ-ரை.) வியாழக்கிழமையில் ஆந்தைஉண்ணவும், கோழி நடக்கவும், வல்லூறு அரசாளவும், காகம் தூங்கவும், மஞ்ஞை இறக்கவும் ஆகும் இதை நீஆராய்ந்துபார். எ-று. 5

செவ்வாய், ஞாயிறுபகல்.

சொற்கோழியுண்ணத் தொடர்ந்தேகும்வல்லூறு
நற்காகநன்றாக நாடாளப்—பொற்காவின்
மண்ணின்மயிலுறங்க மாலாந்தையேமரணம்
எண்ணுமறிவா லெடு

(பொ-ரை.) செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளின் பகலில் கோழி உண்ணவும் வல்லூறுநடக்கவும், காகம்அரசாளவும். மயில் உறங்கவும் ஆந்தைமரணமாகவும் ஆமென்று நினைக்கின்ற அறிவினால் ஆய்ந்தெடு. எ-று. 6

வெள்ளி பகல்.

வந்தபிறபக்கத்தில் வல்லூறுமுண்ணவே
முந்துகருங்காக முடனேகும் அந்தமயி
லாளுமேபூமியது வாந்தையேகண்டுபிலு
மாளுமேகோழியதேவந்து

(பொ-ரை) அமரபக்கம் வெள்ளிக்கிழமை பகலில்வல்லூறு உண்ணவும் காகம் நடக்கவும் மயில் அரசாளவும், ஆந்தை தூங்கவும். கோழி மரணமும் ஆகும், எ-று. 7

புதன்பகல்.

தண்காகமுண்ணத் தனிமயிலுந்தானடக்க
மண்காவலாந்தையது வந்தாள—பெண்கொடியே
கோழியுறங்கக் குலவலியானேசாக
வாழிபுதனுக்கெனவே வை.

(பொ-ரை.) பெண்கொடியே! புதன்கிழமை பகலில் காகம் உண்ணவும் மயில் நடக்கவும், ஆந்தை அரசாளவும், கோழி தூங்கவும், வல்லூறு சாகவும், நீ இதை உணர்வாயாக, எ-று. 6

அமரபட்சம் பகல்.

திதி 15-க்கும் வாரங்கள் 7-க்கும் வாரம் 1-க்குப்பகல்
நாழிகை 30-க்கு சாமம் 5-ஆகவும் சாமம் 1-க்கு
நாழிகை 6-ஆகவும் பகுத்தமைத்தல்.

வாக்கியசக்கரம். அமரபட்சம்.

வாக்கியம்.	வார	உண்டி	சாவு	தூக்கம்	அரசு	நடை
ஒ-மி-தே-வா-யு	திங்க சனி	ஒ மயில்	இ ஆந்தை	எ கோழி	அ வல்லூர்	உ காகம்
ஊரோ-இதேவா	புதன்	உ காகம்	ஒ மயில்	இ ஆந்தை	எ கோழி	அ வல்லூர்
ஆ-றா-ழ்ரு-தீரே	வெள்ளி	அ வல்லூர்	உ காகம்	ஒ மயில்	இ ஆந்தை	எ கோழி
ஏ-தமூ-மோ-தி	ஞாயி செவ்	எ கோழி	அ வல்லூர்	உ காகம்	ஒ மயில்	இ ஆந்தை
ஈ-தே-வ-ரூமோ	வியாழம்	இ ஆந்தை	எ கோழி	அ வல்லூர்	உ காகம்	ஒ மயில்

வாரங்கள் 7-க்கும் பகல்பக்ஷி

முதல் சாமத்திலுதிக்கின்ற பக்ஷி-உண்டு, 2-சாமத்தில் செத்து 3ம்-சாமத்தில் தூங்கி, 4-ம் சாமத்தில் அரசனாகி, 5-ம்சாமத்தில்- நடக்கும். அன்றியும் சாமாந்தரபுக்தியில் பூர்வபக்ஷம் பகலைப்போலவே ஊண்-$1\frac{1}{4}$, நடை-$1\frac{1}{2}$ அரசு 2 தூக்கம்-$\frac{3}{4}$, சாவு-$\frac{1}{2}$ ஆக நாழிகை 6-க்கும் தொழில்மாறாமல் வருமெனக்காண்க.

எழுத்துமுறைச் சக்கரம்.

திங்கள்-சனி.

சாமம்	ஊண்	நடை	அரசு	நித்தி	சாவு
1	எ	அ	எ	அ	உ
2	அ	உ	அ	உ	ஒ
3	உ	ஒ	உ	ஒ	இ
4	ஒ	இ	ஒ	இ	எ
5	இ	எ	இ	எ	அ

வியாழம்.

சாமம்	ஊண்	நடை	அரசு	நித்தி	சாவு
1	இ	எ	அ	உ	ஒ
2	எ	அ	உ	ஒ	இ
3	அ	உ	ஒ	இ	எ
4	உ	ஒ	இ	எ	அ
5	ஒ	இ	எ	அ	உ

ஞாயிறு-செவ்வாய்.

சாமம்	ஊண்	நடை	அரசு	நித்தி	சாவு
1	எ	அ	உ	ஒ	இ
2	அ	உ	ஒ	இ	எ
3	உ	ஒ	இ	எ	அ
4	ஒ	இ	எ	அ	உ
5	இ	எ	அ	உ	ஒ

வெள்ளி.

சாமம்	ஊண்	நடை	அரசு	நித்தி	சாவு
1	அ	உ	ஒ	இ	எ
2	உ	ஒ	இ	எ	அ
3	ஒ	இ	எ	அ	உ
4	இ	எ	அ	உ	ஒ
5	எ	அ	உ	ஒ	இ

புதன்.					
சா	உண்	நடை	அரசு	தூக்	சாவு
1	உ	ஒ	இ	எ	அ
2	ஒ	இ	எ	அ	உ
3	இ	எ	அ	உ	ஒ
4	எ	அ	உ	ஒ	இ
5	அ	உ	ஒ	இ	எ

வேற்றுமுறை.					
தொழில்	உண்	நடை	அரசு	தூக்	சா
உண்	ஒ	இ	எ	அ	உ
சாவு	எ	அ	உ	ஒ	இ
துயி	உ	ஒ	இ	எ	அ
அர	இ	எ	அ	உ	ஒ
நடை	அ	உ	ஒ	இ	எ

அமரபக்ஷம் பகல் தொழில்முறைச் சக்கரம்.

திங்கள்-சனி.

சாமம்	ஒ மயில்	இ-ஆந்தை	எ கோழி	அ-வல்லூர்	உ-காகம்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
3	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
4	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
5	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்

வியாழம்.

சாமம்	இ-ஆந்தை	எ கோழி	அ-வல்லூர்	உ காகம்	ஒ மயில்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
3	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
4	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
5	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்

ஞாயிறு-செவ்வாய்.

சாமம்	எ சோழி	அ-வல்லூ	உ காகம்	ஒ மயில்	இ-ஆந்தை
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
3	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
4	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
5	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்

வெள்ளி.

சாமம்	அ-வல்லூ	உ காகம்	ஒ மயில்	இ-ஆந்தை	எ கோழி
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
3	துயில்	துயில்	ஊண்	நடை	அரசு
4	அரசு	அரசு	சாவு	ஊண்	நடை
5	நடை	சாவு	துயில்	சாவு	ஊண்

புதன்.

சாமம்	உ காகம்	ஒ மயில்	இ ஆந்தை	எ கோழி	அ வல்லூர்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
3	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
4	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை
5	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்

நான்காமதிகாரம் முற்றிற்று.

மூன்றாவதுசெய்யுள் தொகை -35 }
நான்காவதுசெய்யுள் தொகை - 8 } ஆ செய்யுள் தொகை-43

முன்றாவது சக்கரத்தொகை 36 }
நான்காவது சக்கரத்தொகை 12 } ஆ சக்கரத்தொகை-48

குருவே துணை.

ஐந்தாம் அதிகாரம்.

அமரபட்சம் வாரங்கள் 7-க்கும் இராக்கவி

உண் பக்ஷிகள்.

அறுசீர்க்கழி நெடிலடி யாகிரிய விருத்தம்.

மந்தன் சோமன் கோழியினூண் மானேவெள்ளிமயிலுண்ணும்
புந்தியாந்தைப் போசனமாம் பொன்னிற்காக மிரையருந்தும்
சிந்தைமகிழச் சேயிரவி தினத்தேவல்லூ றமுதுசெயு
மந்தித்தோன்றும் பிற்பக்கத்தடைவே சொன்னே மறிநன்றே.

(பொ-ரை) அமரபட்சத்கில் சனிக்கிழமை திங்கட்கிழமைகளில் இராத்திரியில் கோழியின் ஊணுகும், வெள்ளிக்கிழமையின் இராத்திரியில் மயிலின் ஊணுகும், புதன்கிழமையின் இராத்திரியில் ஆந்தையின் ஊணுகும், வியாழக்கிழமையின் இராத்திரியில் காகத்தின் ஊணுகும், செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளின் இராத்திரிகளில் வல்லூறின்ஊணுகும், இதுவே மேற்சொன்ன பட்சத்திற்குக்கிரமமாம், ஆகையால் நீ இதை அறிந்து கொண்டால் நன்மையாகும். எ-று. 1

கடை பக்ஷிகள்.

வாரணம் பொன்னே காரி மயில் புகர்புதனே மிக்கச்
சிராணிகாகம்வெய்யோன் சிறந்தமா முனியாந் திங்கள்
பேரணிவலியன் செவ்வாய்ப் பிற் பக்கத்திர விற்றங்கு
மேரணிகுழலாயென்று மிடமறிந்தியும்புவாயே.

(பொ-ரை.) வியாழக்கிழமையிலும் சனிக்கிழமையிலும் கோழியும், வெள்ளிக்கிழமையிலும், புதன்கிழமையிலும், மயிலும், ஞாயிற்றுக்கிழமையில் காகமும், திங்கட்கிழமையில் ஆந்தையும், செவ்வாய்க்கிழமையில் வல்லூறும், அமரபட்சத்தின் இராத்திரியில் கடைப்பட்சிகளாகும் ஆகையால் அழகிய கூந்தலையுடையவளே! நீ எப்பொழுதும் இவ்விடங்களையறிந்து சொல்லுவாய். எ-று. 2

வாரங்கள் 7-க்கும் இராச்சாமங்கள் 4-க்கும்

பகுத்தமைத்தல்.

அக்ஷரம் 5, பட்சி 5, சாமம் 5க்கும் பயனிலை

திங்கள், சனி இரவு.

நேரிசை வெண்பா

சேவல்பொசிக்கத்திரியுமே யாந்தையது
மாவிற்புவியாளுமா மயிலுங்-கூவி
யுறங்குமேகாக்கை யுடனிறக்குமேவலியான்
கறங்குமேகக்கலையான்காண்

(பொ-ரை.) திங்கட்கிழமை, சனிக்கிழமைகளின் இராத்திரிகளில் கோழி உண்ணவும், ஆந்தைநடக்கவும், மயில் அரசுசெய்யவும் காக்கை உறங்கவும் வல்லூறு மரணமாகவும் விதியாம் இதை நீ உணர்வகையாக. என்றவாறு. 3

வெள்ளி இரவு.

அல்லின்மயிலுண்ணவார்ந்து நடக்குங்காகம்
வலம்புவியாளும் வாரணமு-மில்லுறங்கு
மாந்தையதுசாகுமன்ன நடைக்கன்னன்மொழி
யேந்திழையாயென்னே இடர்.

(பொ-ரை.) வெள்ளிக்கிழமை இராத்திரியில் மயில் உண்ணவும், காகம் நடக்கவும், வல்லூறு அரசாளவும், கோழிதூங்கவும், ஆந்தைசாவவும்விதியாம் ஆகையால் அன்னம் போலும் நடையையும். கரும்பு போலும் சொல்லையுமுடைய ஆபரணமணிந்த பெண்ணரசே நீ இதை அறிந்து கொண்டால் என்னதுன்பம் ஒன்றுமில்லை. எ-று. 4

புதன் இரவு.

வகுத்த முனியுண்ண மஞ்ஞைபது நடக்கச்
செகத்திற்கொடியரசு செய்யவே நகைத்துத்
தூங்குமேவல்லூறு துஞ்சுமேசெஞ்சேவல்
மாங்குயிலேயென்னுமதி.

(பொ-ரை.) புதன்கிழமை இராத்திரியில் ஆந்தை உண்ணவும்! மயில் நடக்கவும், காகம் அரசு செய்யவும், வல்லூறு தூங்கவும், சேவல் சாவவும் விதியாமென்று மாமரத்துக்குயிலன்னவளே! நீ எண்ணுவாயாக. எ-று. 5

வியாழம் இரவு.

செப்பக்காரண்டந்தனிறின்னநடக்கும்வலியான்
தப்பிலாகோழிகரையாளும்-ஒப்பிலா

மாலாந்தைகண்டுயிலும் வாழ்மயிலுஞ்சாவாகுஞ்
சேலார்விழிமடவீர் செப்பு.

(பொ-ரை.) வியாழக்கிழமை இராத்திரி காகம் உண்ணவும் வல்லூறு நடக்கவும், கோழி அரசாளவும், ஆந்தை தூங்கவும், மயில் சாவவும் விதியாம் இஃதை சேல்கண்டையெனுங்கண்களையுடைய பெண்ணே! நீ சொல்லுவாய். எ-று. 6

செவ்வாய், ஞாயிறு இரவு.

வல்லூறினிதுண்ண வார்கோழியேநடக்க
நல்லாந்தை வந்திருந்து நாடாளப்-பொல்லாத்
தூக்கமுறுமயிலாஞ் சொல்லவிழுங்கான்
முக்கமலைப்பொடியாந் தான்.

(பொ-ரை.) செவ்வாய்க்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளின் இராத்திரிகளில் வல்லூறு உண்ணவும், கோழிநடக்கவும், ஆந்தை அரசாளவும், மயில் தூங்கவும் காகம் சாவவும் விதியாம், அக்காலங்களில் எதிர்க்க மலையும் பொடியாகும். எ-று. 7

அமரபட்சத்திரவுக்கு வாரப்பட்சி வகுப்பு

முதல்சாமத்தி லுதிக்கின்றபட்சி உண்டு 2-ம் சாமத்தில் தூங்கி
3-ம்சாமத்தில் நடந்து 4-ம்சாமத்தில் செத்து
5-ம்சாமத்தில் அரசுசெய்யுமெனக்காண்க.

வாக்கியச்சக்கரம் அமரபட்சம் இரவு.

வாக்கியம்.	வார	உண்டி	நடை	அரசு	தூக்கம்	சாவு
பேணிகொடு வா	திங்க சனி	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ வல்லூர்
கொடுவா பேணி	வெள் ளி	ஒ மயில்	உ காகம்	அ வல்லூர்	எ கோழி	இ ஆந்தை
ஆ-ரே-நீ-ரோ-டு	செவ் ஞாயி	அ வல்லூர்	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்
நீபோ-கூட-வே	புதன்	இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ வல்லூர்	எ கோழி
கூடவே நீ-போ	வியா ழம்	உ காகம்	அ வல்லூர்	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்

வாரங்கள் 7-க்கும் இராப்பட்சி.

இதனுள் சாமாந்தரபுக்திபார்க்கு மிடத்தில் பூர்வபக்ஷம் பகலைப் போலவே தொழில் சாமம் 1-க்கு உண் $1\frac{1}{4}$. நடை $1\frac{1}{2}$, அரசு 2, தூக்கம் $\frac{3}{4}$, சாவு $\frac{1}{2}$. ஆக நாழிகை 6-ஆகவும் கூடியசாமம் 5-க்கும் தொழிற்செய்கைகெட்டு மாறிவருமெனக் காண்க.

எழுத்து முறைச் சக்கரம்.

திங்கள்-சனி.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	எ	இ	ஒ	உ	அ
2	ஒ	உ	அ	எ	இ
3	அ	எ	இ	ஒ	உ
4	இ	ஒ	உ	அ	எ
5	உ	அ	எ	இ	ஒ

வெள்ளி.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	ஒ	உ	அ	எ	இ
2	அ	எ	இ	ஒ	உ
3	இ	ஒ	உ	அ	எ
4	உ	அ	எ	இ	ஒ
5	எ	இ	ஒ	உ	அ

செவ்வாய்-ஞாயிறு.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	அ	எ	இ	ஒ	உ
2	இ	ஒ	உ	அ	எ
3	உ	அ	எ	இ	ஒ
4	எ	இ	ஒ	உ	அ
5	ஒ	உ	அ	எ	இ

புதன்.

சாமம்	ஊண்	நடை	அரசு	தூ	சாவு
1	இ	ஒ	உ	அ	எ
2	உ	அ	எ	இ	ஒ
3	எ	இ	ஒ	உ	அ
4	ஒ	உ	அ	எ	இ
5	அ	எ	இ	ஒ	உ

வியாழம்.

சாமம்	உண்டி	நடை	அரசு	தூக்கம்	சாவு
1	உ	அ	எ	இ	ஒ
2	எ	இ	ஒ	உ	அ
3	ஒ	உ	அ	எ	இ
4	அ	எ	இ	ஒ	உ
5	இ	ஒ	உ	அ	எ

தொழின்முறைச் சக்கரம்.

திங்கள்-சனி.

சாமம்	எ கோழி	இ-ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ-வல்லூர்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	துயில்	சர்வு	ஊண்	நடை	அரசு
3	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
4	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
5	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை

வெள்ளி.

சாமம்	ஒ மயில்	உ காகம்	அ-வல்லூர்	எ கோழி	இ-ஆந்தை
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
3	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
4	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
5	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை

செவ்வாய்-ஞாயிறு.

சாமம்	அ-வல்லூர்	எ கோழி	இ-ஆந்தை	ஒ மயில்	உ-காகம்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
3	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
4	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
5	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை

புதன்.

சாமம்	இ-ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ-வல்லூர்	எ கோழி
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
3	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
4	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
5	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை

வியாழம்.

சாமம்	உ காகம்	அ-வல்லூறு	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்
1	ஊண்	நடை	அரசு	துயில்	சாவு
2	துயில்	சாவு	ஊண்	நடை	அரசு
3	நடை	அரசு	துயில்	சாவு	ஊண்
4	சாவு	ஊண்	நடை	அரசு	துயில்
5	அரசு	துயில்	சாவு	ஊண்	நடை

குருவே துணை.

ஆறும் அதிகாரம்.

பூர்வபட்சம்.

பக்ஷிகளின் செய்கை பயன்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உண்டியின் பலன்.

போசனமாகில்பதிவாழும்போனோர் மீள்வார்போங்கவலை
காசினிவாழுமழைபொழியுங்களவு மில்லைக்கதிர்விளையும்
பேசிற்கன்னியேறுகும்பிணியுந்தீரும் பெண்பெறுவாள்
வாசிசெழும்பொன்வாணிபமா மன்னரைவெல்வாய்மாங்குயிலே.

(பொ-ரை.) மாமரத்திலுள்ள குயிலன்னே! பூர்வபட்சத்தில்பட்சிகளுக்கு உணவு காலமானால் அரசன் வாழ்வான், வெளியேபோனவர்கள் திரும்பி வருவார்கள், துன்பங்களெல்லாம் நீங்கும் உலகத்தார் க்ஷேமமடைவார்கள் மழைபொழியும, திருடு நடவாது, பயிர்விளையும் கன்னிகள்நன்மையை யடைவார்கள், நோய்நீங்கும் பெண்மகவைப்பெறுவாள் பொன்சேரும், வர்த்தகலாப முண்டாம், அரசர்களையும் ஜெயிப்பாய். எ-று. 1

நடையின்பலன்.

யாத்திரையாகினிலைகுலையுமொன்னார் வெல்வரிருநிதிபோங்
காத்திரமில்லாக்கதிர்விளையுங்கன்னியர் வாழ்க்கைநன்றுங்கா
மாத்திரள்செல்லும்பொருள்கூடா வேட்கைதவழ்ந்துமணங்கூடா
சூத்திரஞ்சொன்னபடியாலேசொன்னார் பெரியோர்சுரிகுழலே.

(பொ-ரை.) சுகந்தகூந்தலை யுடையாளே! பூர்வ பட்சத்தில்பட்சிகளுக்கு நடைக்காலமானால் இருக்குமிடம் அழிந்து போம், பகைவர் வெற்றி யடைவார்கள்செல்வம்நாசமாம், சொற்பபயிர் விளைவுண்டாம் பெண்கள் வாழ்வு நன்மையாயிராது பசுக் கூட்டங்கள் நஷ்டப்படும் செல்வஞ்சேராது கலியாணம் தவிர்ந்துபோம் இவ்விஷயங்களை வேத சூத்திரம் சொன்னபடியே பெரியோர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்றவாறு. 2

அரசின் பலன்.

அரசேசெய்யிற்புவிபெறு மரசராலேபலனெய்து
முரசுமதிரும்வரிசையுடன் மூண்டகருமந்தான்விலகும்
பரிசும்பெரியோர்திறலிடுவர் பழையபிணிபோம்பயமில்லே
புரைபோங்களவுந்தான்காணும் போக்குமில்லேப்புரிகுழலே.

(பொ-ரை.) சுருண்ட கூந்தலையுடையாளே? பூர்வபட்சத்தில் பட்சிகளுக்கு அரசுகாலமானுல் பூமிபலனுண்டாகும் இராஜாக்களால் பிரயோசனமுண்டாம் சகலவாத்தியங்களுடன் எந்தக்காரியமும் கைகூடும் சன்மானமுண்டாம் பெரியோர்கள் வாழ்த்துவார்கள். பழமையாயிருந்தநோய் தீரும், பயமில்லே போகமுண்டாம், களவுண்டாம் ஆனுல் போக்கில்லே. எ-று. ௪

தூங்கும் பலன்.

தூங்குமாகினேய்மாறு தூரம்போனுர்தாமீளார்
ஆங்கேகருமநன்ருக காவரிவைவாழ்க்கைத்தாழ்வாகுந்
தீங்கேயல்லான்மழைபொழியாச் செந்நெல்விளையாச்செய்குறிமீர்
ஓங்கிமணமுந்தாராதே யுண்மையாகவுரைத்தோமே.

(பொ-ரை) பூர்வபட்சத்தில் பட்சிகளுக்கு தூக்ககாலமானுல் பிணிவிலகாது, வெளியேபோனவர்கள் திரும்பி வரமாட்டார்கள், எடுத்தகாரியங்களெல்லாம் தீமையே விளைவுக்கும், பெண்வாழ்வுகுறையும் கெடுதியேயல்லாமல் மழைபொழிவதில்லே, நெற்பயிர்விளையாது, விவாகமும்நடைபெருது இவைகளை நாம்உண்மையாகச் சொன்னேம்எ-று.

துஞ்சும் பலன்.

துஞ்சமாகிற்சாவுசொலுந் துலேயாப்பிணியுந்தானெய்தும்
நெஞ்சிநினைந்தபொருள்கூடா நிதியுங்காணுர்நிலேகுலேவார்
வஞ்சநோயுமிகவுண்டா மனையாள்வெறுக்கிலுறவாகாள்
கஞ்சமலரார்குழலாளே கருத்தாயுரைத்தபடியறியே.

(பொ-ரை.) தாமரைமலர் முடித்த கூந்தலையுடையாளே!பூர்வபட்சத்தில் பட்சிகளுக்கு மரணகாலமானுல் சாவுண்டாம், ஒழியாதநோய் வந்து சேரும், மனத்தில் நினைத்தபொருள் கைகூடாது, செல்வம் கேடாகும் ஸ்தானப் பிரதிஷ்டை யடைவார், மிகவும் நோயுண்டாகும், பெண்சாதி கோபித்தால் மறுபடியும் சினேகிக்காள், இவ்விஷயங்கள் கவனத்துடன் சொல்லப்பட்டனவென்று அறிவாயாக எ-று. 5

இதுவுமது அமரபட்சம்.

போசனத்தின் பலன்.

கெடுதியுமுடனேகாணார் கிளையுடன்வாழ்வுபேராம்
கடுகியபிணியுந்தீரும் கலக்கமோசற்றுமில்லை
அடைமழைபெருகவுண்டா மகமேறநிற்குந்தன்மை
முடுகியபயணமில்லை பொழிந்தபின்னுண்ணுங்காலே

(பொ ரை) அமரபட்சத்தில் பட்சிகளின் உணவுபலமானால்உடனே கெடுதியுண்டாகமாட்டாது, சுற்றத்தாரும் வாழ்வும் லாபமாய் நோய்விலகும், துக்கம் சற்றேனுமில்லை பெருமழையுண்டாம். வீட்டில்சுபகாரியங்கள் நிறைவேரும் பயணமில்லை எ-று. 6

யாத்திரையின் பலன்.

வெற்றியும்சுகமுமுண்டாம் வியாதியும்மாற்றும்பின்பு
பற்றியகருமந்தானும் பயமில்லைபகமுந்தாழார்
உற்றதேர்கெடுதிகாணு ருறுமழையுண்டுதூரத்
துற்றவர்வரவுங்கூடச் சொல்லும்பின்னடக்கத்தோன்றில்

(பொ-ரை.) அமரபட்சத்தில் பட்சிகளின் நடைகாலமானால் வெற்றி உண்டாம், பயமில்லை, வீடுவாசல் விர்த்தியாகும் கெடுதிஉண்டாகமாட்டாது மழைபெய்யும் வெளியே சென்றவர்கள் வந்துசேர்வார்கள் என்று சொல்லவும் எ-று. 7

இராச்சியத்தின் பலன்.

ஜெயமொடுசுகமுமுண்டு சிறந்ததோர்பயணந்தன்னில்
புயலிடுமழையுமற்பம் புவிதனிற்கலக்கமில்லை
இயல்பினுற்பெறலாம்வெற்றி யிலாபமும்நீடுமாகும்
பயம்விளையாதுநாளு மரசதாம்பறவையாகில்

(பொ-ரை.) அமரபட்சத்தில் பட்சிகளின் அரசகாலமானால் ஜெயம், சுகம், இவைகளுண்டாம் போகிறபயனத்தில் சொற்பமழை யுண்டாகும் உலகத்தில் கலகமிராது ஜெயம்பெறலாம் இல்லம் விர்த்தியாகும் பயமுண்டாக மாட்டாது என்றுணரவும் என்றவாறு. 8

அனந்தலின் பலன்.

உன்னிடிற்பிணியுமல்லா லொருபிணியதிகமாகும்
மன்னினும்மழையோவில்லை வையத்தின்கெடுதிகாணும்

துன்னியநெஞ்சிற்ருேடங் தோன்றிடுங்கருமஞ்செய்யும்
பன்னியேதிக்கும்பக்ஷி பயனுடனுறங்குமாகில்.

(பொ-ரை.) அமரபக்ஷத்தில் பட்சிகளின் தூக்ககாலமானல்சரீர நோய் முன்னிருந்ததை பார்க்கிலும் அதிகமாகும் மழைபெய்யாது எல்லாம் கெடுதியாகவேமுடியும் மனசில்தோஷமுண்டாகும் செய்யுங் காரியங்கள் தீங்காகவேமுடியும் எ-று. 9

மோட்சத்தின் பலன்.

சாவினிற்பயமுமுண்டு கலகமாங்கருமமெல்லாம்
தீவினைபடுமற்றன்றிச் செய்யுநல்வினைகளாகாச்
சாவினில்விழுந்தபக்ஷி தனித்துவந்துதிப்பதாலே
பூவினிற்சிறந்தமாதே புகன்றனர்புள்ளினாலே.

(பொ-ரை) அமரபட்சத்தில் பட்சிகளின் மரணகாலமானல்பய முண்டாகும் கலகமுண்டாம், தீக்கருமமே மேன்மேலும்விர்த்தியாகும் எதுவும் நன்மையாகமாட்டாதென்று பெரியவர்கள் சொன்னர்களெ ன்றவாறு. 10

சூக்குமப்பட்சி.

(நேரிசை வெண்பா)

ஓதுகிலோமர்பக்ஷி யொன்றுண்ணுமொன்றுயிர்போம்
ஏதுமிலாவொன்றையி லேகுமே—நீதிபுனே
நன்றியுடனென்றரையி நாடறியத்தானுறங்கும்
ஒன்றுமுதலாள்வதுலகு.

(பொ-ரை.) சூக்குமபட்சிகளில் ஒருநாழிகை ஊணும், ஒருநாழிகை மரணமும், ஒன்றரை நாழிகை நடையும், ஒன்றரைநாழிகை தூக்கமும் ஒருநாழிகை அரசு ஆகும் என்றவாறு. 11

வயதின் பலன்.

போசனத்தில்மூத்தோனும் போய்நடக்கிலிளையோனும்
ஆசனத்தினெடியோனு மாயவனே—மாசற்றுத்
தூங்குமவன்குள்ளன் றுஞ்சிடுமேயாமாகில்
ஆங்கிருவரோ ரான்றி.

(பொ ரை.) போசனக்காலத்தில் மூத்தவனும், நடைக்காலத்தில் இளையவனும், அரசுகாலத்தில் நீண்டவனும், தூங்குங்காலத்தில் குள் ளனும், சாவுங்காலத்தில் ஒரேவயதென்றறிந்துகொள் எ-று. 12

அங்கிஷ பலன்.

உண்கின்றான்பாலனுயர் நடையானேகுமரன்
பண்பாமரசனே பாராள்வா-னண்புபெரு
முற்றுந்துயில்கிழவன் மோனமுடிந்தோன்சாவோன்
பற்றுந்தவத்தின் பலன்.

(பொ-ரை.) உண்கிறவன் பாலனும், நடக்கிறவன் குமரனும் உலகாள்பவன் அரசனும் தூங்குகிறவன் கிழவனும், மௌனமுற்றோன் செத்தவனும் ஆகக்கொள்வதே உயர்ந்ததவத்தின்பலனும் எ-று. 13

உருவ நிதானப் பலன்.

அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்.

ஊணினி லுயர்ந்தோன்வெல்வ னுயர்நடைகுள்ளன்வெல்வன்
காணுறுவெகுரோமத்தன் கடுகோராச்சியத்தில்வெல்வன்
தானருந்தூக்கந்தன்னி லிருவருள்வலுத்தோன்வெல்வன்
வேணுமோமரணந்தன்னி லிருவருள்வலுத்தோன்வெல்வன்.

(பொ-ரை.) ஊணில் உயர்ந்தவனும், நடையில் குள்ளனும், அரசில்கெட்ட சரீரமுள்ளவனும், தூக்கத்தில் பலமுள்ளவனும், மரணத்தில் இருவரில் பலமுள்ளவனும் ஜெயிப்பார்கள், எ-று. 14

வலுவின் பலன்.

நேரிசை வெண்பா.

ஊணினடைவலிது நடையிலரசுறுதி
நாணியுறங்கிடவு நன்றாகாப் பேணி
விலகுகுழலாளே யிறப்பும் பொல்லாதென்
றுலகு புகழவரை.

(பொ-ரை.) உணவைப்பார்க்கிலும் நடையும்,நடையைப்பார்க்கிலும் அரசும், வலியுடையதாம், தூக்கம் நன்மையுடையதாகாது, சாவு பொல்லாதென்று சொல்லுவாய், எ-று. 15

வெற்றியின் பலன்.

உண்பானடப்பானை வெல்வனடப்பானுந்
தன்பாலரசனையுந் தானழிப்பான் மன்காத்
திருப்பான்றுயில்வானை வெல்லத்துயில்வோன்
மரிப்பானை வெல்வன்மதி.

(பொ-ரை.) உண்பவன் நடப்பவனை வெல்வான், நடப்பவனும் அரசனை அழிப்பான், அரசன் தூங்குபவனைவெல்வான், தூங்குபவன் சாவானை வெல்வான் என்றுநினை, எ-று. 16

இருவருள் வெல்லுஞ் செய்கைப் பலன்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நல்லூணுகிற்கிழவன்வெல்வனடையே யாகிலிளவன்வெல்வன்
செல்லத்தூக்கமமாகிற் சிறந்தோன்மிகவும்வென்றிடுவன்
எல்லாமரசேயாமாகி லிளையோன்வெல்வானெந்நாளும்
பொல்லாச்சாவேயாமாகிற் போனுரிருவர்மீளாரே.

(பொ-ரை,) ஊணுனல் கிழவன் வெல்வன் நடையானல் பாலியன் வெல்வன், தூக்கமானல் சிறந்தவன் வெல்வன், அரசாகில் இளைஞன் வெல்வன், இந்நாளும் பொல்லாத சாவானுல் இருவரும் மீளமாட்டார்கள் எ-று. 17

பருவசிதானப்பலன்.

உரைத்திடுமிருவர்பேரு மொருபக்ஷியுண்ணுமாகில்
நரைத்திடுமவனேவெல்வ னடையினினெடியோன்வெல்வன்
கருத்தரசிளையோன்வெல்வன் கடுங்குட்ள்ன் துயிலில்வெல்வன்
மரித்திடச்சரியாமென்றே மாதவருரைத்தார்மாதே.

(பொ-ரை.) இரண்டுபேர்பெயரும் ஒருபட்சியாய்உண்ணுமானல் அவர்களில் கிழவனே வெல்வன், நடையினில் நீண்டவன் வெல்வன் அரசினில் இளைஞன் வெல்வன் தூக்கத்தில்குள்ளன்வெல்வன், சாவில் சரியானவன் வெல்வன் என்று தவமுடையவர்கள் சொன்னர்கள் என்றவாறு. 18

ஓட்டுஞ் செய்கைப்பலன்.

நேரிசை வெண்பா.

உண்பானடப்பானை யோட்டுமிருவர்களும்
பண்மாம்பதியைப் பரிந்தோட்டும் - பெண்பாவாய்
துஞ்சினோர்க்கஞ்சுந்துயில்வோனையாவருமே
யஞ்சலென்றழைத்திடுவராம்.

(பொ-ரை.) உண்பவன் நடப்பவனை ஜெயிப்பான் இவ்விருவரும் தூக்குகிவறனுக்குப் பயப்படுவார்கள், தூங்குகிறவனை யாவரும்பயப்படாதேயென்று சொல்லி யழைப்பார்கள் எ-று. 19

ஆரும் அதிகாரம் முற்றிற்று.

ஐந்தாவது செய்யுள்தொகை	56	ஆக செய்யுள் தொகை	75
சக்கரத்தொகை	56		
ஆறுவதுசெயயுள்தொகை	19	ஆக சக்கரத் தொகை	56

உ

குருவே துணை.

ஏழாம் அதிகாரம்.

பூர்வபக்ஷம் நிறப்பக்ஷி.

நேரிசை வெண்பா.

வல்லூறுபொன்னிறமாம் வாழாந்தைவெள்ளியதாம்
செல்லாருங்காகஞ் சிவப்பாகு-நல்லாய்கேள்
கோழியுருபச்சை குளிர்ந்தமயில்கருப்பாம்
நாழிகைமணக்க நவில்.

(பொ-ரை) பெண்ணே! பூர்வபக்ஷத்தில் வல்லூறு பொன்னிறமாம், ஆந்தைவெள்ளிநிறமாம், காகம் சிகப்புநிறமாம், கோழிபச்சைநிறமாம் மயில் கருப்புநிறமாம், நாழிகையின் கணக்குப்படி சொல் எ-று. 1

அமரபட்சம் நிறப்பக்ஷி.

ஆந்தைசிவப்பாமணிக் காகம்பொன்னிறமாம்
வாய்த்தபச்சைவண்ண மயிலாகும்-ஏந்திழையீர்
வெள்ளையாங்கோழி விளங்குவரிகருப்பு
வல்லூறுக் கொண்டுமதி.

(பொ-ரை.) அமரபட்சத்தில் ஆந்தை சிவப்பாகும், காகம், பொன்னிரமாகும், மயில் பச்சையாம், கோழி வெண்மையாம், வல்லூறு கருப்பாம் எ-று. 2

பூர்வபட்சம் சாதிபக்ஷி.

வல்லூறுபார்ப்பான் வளராந்தைதான்வணிகன்
செல்லாருங்காகஞ் செகத்தரசன்-நல்லாய்கேள்
கோழியாம்வேளாளன் கூறுமயில்சண்டாளன்
ஆழியா னூலாய்ந்தறி.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் வல்லூறு பிராமணசாதியும், ஆந்தை வணிகஜாதியும், காகம் க்ஷத்திரியஜாதியும், கோழி வேளாளஜாதியும் மயில் சண்டாளஜாதியும் ஆமென்று நூலாய்ந்துணர் எ-று. 3

அமரபட்சம் சாதிபக்ஷி.

பொன்மறையோனும்வலி யான்போந்தைவேந்தனும்
துன்னுமொழிகாகந் துலைவணிகன்-மன்னும்
உழுகலத்தோன்கோழியே யோதுங்கான்மஞ்ஞை
இழிகுலத்தோனென்றே யிசை.

(பொ-ரை.) அமரபட்சத்தில் வல்லூறு பிராமணனுகும், ஆந்தை அரசனுகும், காகம் வணிகனும் கோழி வேளாளனும், மயில் இழிந்த சாதியாம் என்று சொல்லுவாய் எ-று. 4

பட்சம் 2-க்கும் தாதுமூல சீவபக்ஷி.

வல்லூறுமூலம் வளராந்தைசீவனுஞ்
சல்லாபமாங்காகந் தாதுவாம்-பொல்லாத
கோழிமூலச்சீவன் கோலமயிற்றுதுவொடு
வாழுமூலஞ் சொல்லிவை.

(பொ-ரை.) வல்லூறு மூலமாம், ஆந்தை சீவனும், காகம் தாதுவாம், கோழி மூலசீவனும் அழகு பொருந்திய மயில் தாதுமூலமாம் என்று சொல்லுவாய் என்றவாறு. 5

போகர்நிகண்டு பாஷாணபட்சி.

எண்சீர்க்கழி நெடிலடிலாசிரிய விருத்தம்.

பஞ்சபட்சிபாஷாணம் பகரக்கேளு
பாவியதோரைம்புலனும் பஞ்சதாது
செஞ்சிவப்பாஞ்சித்திரத்தின் பட்சியாகுஞ்
சிறந்திட்டபஞ்சவண்ணத் தாதுவாகும்
மஞ்சணிறமகமாயி பறங்கிப்பாவை
மகத்தானகுப்பிக்குள் சமைந்தகன்னி
கொஞ்சநிறமிரவிக்குள் கூர்ந்தவேமங்
குதரடியானுமமெலாம் பட்சியாமே.

(பொ-ரை.) பஞ்சபக்ஷிகளின் பாஷாணங்களைச் சொல்லக் கேட்பாயாக சிவப்பானது சித்திரத்தின் பட்சியாகும் இதுவே பஞ்ச வர்ணங்களுக்குத் தாதுவாகும். மகமாயிபறங்கிப்பாவை குப்பிக்குள் ளிருந்தகன்னி இவைகளே நாமங்களாம். எ-று. 6

பூர்வபட்சம் பூதபக்ஷி.

நேரிசை வெண்பா.

வல்லூறுதேயுவாம் வல்லாந்தைவாயுவாம்
பொல்லாக்கருங்காகம் பூமியதாம்-வல்லாய்கேள்
நீராகும்கோழி நீலமயிலாகாயம்
காரார் குழலாய்கனி.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் ஐம்பூதங்களில் வல்லூறு தேயு பூதமாம், ஆந்தை வாயுபூதமாம், காகம்பிருதிவி பூதமாம், கோழி அப்பு பூதமாம், மயில் ஆகாயபூதம் இவைகளைப்பெண்ணே அறிவாயாக எ-று

அமரபட்சம் பூதப்பக்ஷி.

அரியபுவிவல்லூறப்பாகுமாந்தை
கரியதொருகாகங் கனலாகும்-பெரியகால்
தேனேசரிந்தொழுகுஞ் செஞ்சூட்டுவாரணந்தான்
வானேயகல மயில்.

(பொ-ரை.) அமரபட்சத்தில் வல்லூர் பிருதிவி பூதமாகும் ஆந்தை அப்புபூதமாகும், காகம் தேயுபூதமாகும், கோழி ஆகாயபூதமாகும் மயில் வாயுபூதமாகும் என்றவாறு. 8

முடுகு பக்ஷி.

காகமுழுமுடுகுவல் லூறுமுக்காலாம்
ஆகறுமாந்தையறைமுடுகாம்-வேகமுறும்
கோழியதுகான்முடுகு கோலமயிலரைக்கால்
வாழுமுடுகறிந்துவை.

(பொ-ரை.) காகமானது முழுமுடுகும், வல்லூரானது முக்கால் முடுகும், ஆந்தை அறை முடுகும், கோழி கால் முடுகும், மயில் அறைக்கால் முடுகுமாம் எ-று. 9

மாய்க்கும் பக்ஷி.

மயிலுக்கு மாற்றுன் வலிதாந்தை கோழியாம்
இயல்வலி தாங்கோழி யிரண்டுங் - கயலாகும்
முன்வலிது வல்லூறு நான்கினுக்குங் காக்கை
பின்வலி தாகுங்காண் பெயர்ந்து.

(பொ - ரை.) மயிலுக்கு வல்லூறு வலிமையுடையது ஆந்தைக்கு கோழி வலிமையுடையது, கோழி முதலிய இரண்டும் அப்படி வலிதாயினும் வல்லூறு முதலிய நான்கும் வலிமை யுடையதாம், காக்கை பின்வலிமை யுடையதாம், எ-று. 10

ப கை ப் ப க்ஷி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மயிற்பகைவல்லூறுந்தை கோழிக்கு மதுவேயாகுஞ்
செயிர்ப்பகைவலியற்காந்தைக் குவலியன்றீயான்
இயற்றியவலியனல்லா லெல்லாம்வல்லூறினுக்கே
உயிர்ப்பகையாகுமற்ற தொழிந்தவை யுறவாமன்னே.

(பொ-ரை,) மயிலுக்குப் பகை வல்லூறு, ஆந்தைக்குப் பகை கோழி, வல்லூறுக்கு ஆந்தையும் ஆந்தைக்கு வல்லூறும் கொடிய தாம் ஆந்தையே வல்லூறுக்குப்பகை மற்றவைகளெல்லாம் உறவாகும் என்றவாறு. 11

உ ற வு ப க்ஷி.

நேரிசை வெண்பா.

மயிலுறவுவல்லூறு வன்காக்கைக் கோழி
செயலாகவல்லூறுஞ் சேர்க்காகம்-அயில்விழியாய்
கோழியுறவுமயில் கொள்ளுமென வுரைத்தார்
ஏழியினூல்வல்லோ ரிசைந்து.

(பொ-ரை.) வேற்போன்ற கண்களையுடையாளே! மயிலுக்கு வல்லூறும், காக்கைக்குக்கோழியும்,வல்லூறுக்குகாகமும், கோழிக்கு மயிலும் உறவாகுமென்று சாத்திர தேர்ச்சி யடைந்தவர் பொருத்த மாகச் சொன்னார்கள், எ-று. 12

கா ல ப் ப க்ஷி.

ஆந்தைமயின்முக்கால் மானதொரு வாரணந்தான்
சேர்ந்தநிகழ்காலஞ் செப்பிடுமே வாய்ந்ததொரு
வல்லூறுகாகம் வருங்காலம் காட்டுமே
வல்லோருரைத்த வகை.

(பொ-ரை.) ஆந்தையும் மயிலும் இறந்தகாலமும், கோழி நிகழ் காலமும், வல்லூறு காகமும் எதிர்காலமும் காட்டும், எ-று. 13

கோ ண ப் ப க்ஷி.

வல்லூறுநீள்வட்ட மாலாந்தை யைங்கோணம்
அல்லாருங்காக மறுகோணம் மெல்லிநல்லாய்
கோழியது நாற்கோணங் கோலமயின்முக்கோணம்
ஊழியான்சொன்ன வுரை.

(பொ-ரை.) வல்லூறு நீளிடவட்டமும், ஆந்தை ஐங்கோணமும் காகம் ஆறுகோண ம், கோழி நாற்கோணமும், மயில் முக்கோண மூமாகும், எ-று. 14

வல்லூறு. ஆந்தை. காகம். கோழி. மயில்.



சுவைப்பக்ஷி.

தித்திக்குமாந்தை சிறிபுளிப்புக் கோழியதாம்
எத்துங்கருங்காக மினிதுவர்ப்பாம் பத்திநகை
வல்லூறுகாக மயில்கைக்கு மென்பரே
அல்லார்குழலா யறி.

(பொ-ரை.) ஆந்தை தித்திக்கும் கோழி சிறுபுளிப்பாகும், காகம் துவர்ப்பாகும், வல்லூறு காரமாம், மயில் கைக்கும் என்று பெண்ணே! முன்னோர்கள் சொல்லுவார்கள், எ-று. 15

நீலபக்ஷி.

வல்லூறுபாலை வளராந்தைவண் குறிஞ்சி
நல்லாருங்காக நடமருதம் மெல்லியரே
வாரணமேமுல்லை வளருமயினெய்தல்
ஆரணத்தோ சொல்லாலறி.

(பொ-ரை.) வல்லூறு பாலை நிலமும், ஆந்தை குறிஞ்சி நிலமும் காகம் மருதநிலமும், கோழி முல்லைநிலமும், மயில் நெய்தல் நிலமு மென்றறியவும், எ-று. 16

இடப்பக்ஷி.

வல்லூறுவண்மை வண்காகநீர்க்காலம்
நல்லதிறலாந்தையது நாற்காலாம் சொல்லக்
குறுங்கோழி கொம்பாங் குலவுமயில்பட்சி
பெருங்காணிவையாய்ந்து பேசு.

(பொ-ரை.) வல்லூறு வளப்பானவிடமும், காகம் நீர்க்காலிலும் ஆந்தை நாற்காலிலும், கோழி கொம்பிலும், மயில் காணியிலுமிருக்கும் எ-று. 17

பஞ்சலோகப் பக்ஷி.

வல்லூறுபொன்னும் வளராந்தைவெள்ளியதாம்
நெல்லாருங்காக நிறஞ்செப்பாம் பொல்லாத
கோழியதுவெண்கலமாங் கோலமயிலிரும்பாம்
வாழிமடவார் வகை.

(பொ-ரை.) பெண்களே! பஞ்சலோகப்பட்சிகளின் வகைஎப்படியென்றால், வல்லூறு பொன்னாகும், வளர்கின்ற ஆந்தையானது வெள்ளியாகும், காகமானது செம்பாகும், பொல்லாத கோழியானது வெண்கலமாகும், அழகிய மயிலானது இரும்பாகும் எ-று. 18

வினையப்பக்ஷி.

வல்லூறுவருகின்றான் மாமறையோன்றூரவந்தான்
நெல்லிகருங்காக நிற்கின்றான்-மெல்லியரே
கோழியேமீண்டான் குலவுமயிலுமரை
நாழிகையிலேவருவா னடு.

(பொ-ரை.) பஞ்சபட்சிகளின் தொழிலைச்சொல்லுமிடத்து வல்லூறானால் வருகின்றான் எனவும், ஆந்தையானால் தூரவந்தான் எனவும், காகமானால் நிற்கின்றான் எனவும், கோழியானால் வந்துவிட்டான் எனவும், மயிலானால் இன்னும் அரைநாழிகையில் வருவான் எனவும் சொல்லுக எ-று. 19

கெடுதியறிகுறி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மன்னன்வல்லூறன் மனிதர்கைப்புகுந்ததென்க
வெண்ணியவாந்தையாகி லொண்டொடி யெடுத்தாளென்க
உண்ணிடுங்காகமாகி லொருவனேகொண்டானென்க
வண்ணமார்கோழியானும் பூமியின் மயில்தான்பெண்ணே

(பொ-ரை.) கெடுதியறிகிற குறியைச் சொல்லுமிடத்து வல்லூறானால் மனிதர்களுடையகையில் அகப்பட்டுக்கொண்டதெனவும், ஆந்தையானால் ஒருபெண் எடுத்திருக்கிறாள் எனவும், காகமானால் ஒருவனே எடுத்தான் எனவும், கோழியானால் ஆண் எனவும், மயிலானால் பெண்ணெனவும் சொல்லுக. எ-று. 20

இனப்பக்ஷி.

நேரிசை வெண்பா.

வல்லூறுகாகமயின் மூன்றுமாணுகும்
நல்லதிரவுகோனுஞ் சொன்னும்-பொல்லாத
ஆந்தைபொற்கோழி பெண்ணுமிதேதோழி
சேர்ந்தறிந்து சொல்லுந்திரம்.

(பொ-ரை.) சாதிப்பட்சி:—வல்லூறு, காகம், மயில், இந்தமூன்றும் ஆணுகும், ஆந்தை கோழி இந்தஇரண்டும் பெண்ணுகும்என்று தோழி நீ அறிந்து சொல்லுவாய். எ-று. 21

பூர்வபட்சம் திசைப்பக்ஷி.

உரைகிழக்குவல்லூறு பாராந்தைதெற்காம்
விரையுங்கருங்காக மேற்காம்-புரைதீரக்
கொத்தியிரைவிழுங்குங் கோழிவடக்காகு
மத்திபத்தி னிற்குமயில்.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் திசைப்பட்சியாவது:—கிழக்குவல்லூறும் தெற்கு ஆந்தையும், மேற்கு காகமும் வடக்கு கோழியும், மத்திமயிலுமாகும். எ-று. 22

அமரபட்சம் திசைப்பக்ஷி.

பச்சைமயின்மேற்காம் பாரில்வடக்காந்தையாம்
மிக்ககிழக்காகும் வல்லூறு-மெச்சுநல்ல
தெற்காகுங்காகமது தேனர்விழிமடவாய்
பொற்கோழிமத்திபமாம் போற்று.

(பொ-ரை.) அமரபட்சத்தில் திசைப்பட்சியாவன:—மேற்கு மயிலும், வடக்கு ஆந்தையும், கிழக்கு வல்லூறும், தெற்கு காகமும் மத்திகோழியுமாகும் எ-று. 23

இதுவுமது-உவாக்கால திசைபக்ஷி.

மத்திபத்தில்வல்லூறு வாழாந்தைதெற்காகும்
உற்றநிதிகிழக்கே யொண்காகம்-சாற்றிடமே
தெற்காகுங்கோழி சிறந்தமயின்மேற்காகும்
எக்காலுஞ்சாற்றுதற்கா மீடு.

(பொ-ரை) பௌரணைகால திசைப்பட்சியாவன :—மத்தியத்தில் வல்லூறும், தெற்கு ஆந்தையும், கிழக்கு காகமும், தெற்கு கோழியும், மேற்கு மயிலுமென்று சொல்லுதற்காகும், எ-று. 24

வேறு சித்தர் நூல் ஐந்தெழுத்துச் சக்கரம்.

ஈசான்யங்கன்னி யெதிர்வடக்கக்கினிமேல்
வாசாவாய்வோடெரியும் வளர்கிழக்காம் - பேசரிய
அக்கினியிற் கன்னியுளவாம் ஆ-இ ஊ-ஏ-ஒ

(பொ-ரை) ஐந்தெழுத்துச் சக்கரமாவது ஈசான்யம், கன்னியும் வடக்கு அக்கினியும், வாய்வோடு எரியும், கிழக்காம் பெரிய அக்கினியில் கன்னி உண்டாம். ஆ, இ, ஊ, ஏ, ஒ, என்று சக்கரத்தில் ஐந்தெழுத்தும் போடவேண்டும், எ-று. 25

இதன் பயன் மேலோர்க்கன்றி மற்றையோர்க்கு விள்ளாமையால் விளம்பிலம்.

ஏழாம் அதிகாரம் முற்றிற்று.

ஆறாவது செய்யுள் தொகை	70	ஆ செய்யுள் தொகை	95
ஏழாவது செய்யுள் தொகை	25		
ஆறாவது சக்கரத் தொகை	56	ஆ சக்கரத்தொகை	57
ஏழாவது சக்கரத் தொகை	1		

சோதிட புத்தகங்கள்.

சாதக சிந்தாமணி (திக்குகடிதம் அட்டை பயிண்டு)	8 0
ஷை (திக்குகடிதம் கலிகா பயிண்டு)	2 0 0
ஷை (கிளேஸ்கடிதம் கலிகாபயிண்டு)	2 8 0
சோதிடகிரக சிந்தாமணி என்னும் பெரிய வருஷாதிநூல் (திக்குகடிதம் அட்டைபயிண்டு)	0 12 0
ஷை (திக்கு கடிதம் கலிகாபயிண்டு)	1 0 0
கமலமாமுனி ரேகை சாஸ்திரம் (மூலமும்-உரையும்)	1 0 0
போகர் பஞ்சபட்சி சாஸ்திரம் (மூலமும்-உரையும்)	0 14 0
சாதகாலங்காரம் மூலம்	0 12 0
சிற்பசாஸ்திரமென்னும் பெரிய மனையடி சாஸ்திரம் (திக்கு கடிதம் கலிகாபயிண்டு)	2 0 0

டி. சாரதா புத்தகசாலை, நெ-23, பழனியப்பன் தெரு, மின்டு பிட்டி, மதராஸ்

உ

குருவே துணை.

எட்டாம் அதிகாரம்

நிமித்தங் கேட்போருடைய வாய்மொழியின் சப்தா ஷரத்தைப் பட்சிபாக்கி அவர்கள் நிலையில் தொடுகுறியும் ஆய்ந்து பலன் சொல்லு கைக்கு வகுத்துரைத்தல்.

அகாரச்சத்தம்.

நேரிசை வெண்பா.

காணு மகாரப்பே ராளுடைய கண்டமுதல்
காணுஞ் சிரசாந்தை கைகாகம் - பேணிக்
கோழி யுடம்புமயின் முன்பின்னாகும் வலியான்
தாழுமிரு சரணந்தான் இ-உ-எ-ஒ-அ.

(பொ-ரை) அகாரப்பேருடையவர்களுடைய கண்டமுதல்கணக்கிட்டுப் பார்க்கும்போது ஆந்தை சிரசும், காகம் கையும், கோழி உடம்பும், மயில் முன்னும் பின்னும் வல்லூறு இருகால்களும் ஆகும் எ-று. 1

இகாரச் சத்தம்.

தானுமி காரப்பே ராளுடைய கண்டமுதல்
காணூர் தலைகாகங் கைக்கோழி - மானுய்
உடனேயின் முன்பின் வல்லூறுங் காலாந்தை
மடலே புரிவாய் வகு. உ-எ-ஒ-அ-இ.

(பொ-ரை) இகரப்பேருடையவர்களுக்கு காகம் தலையும், கோழி கையும், மயில் உடலும், வல்லூறுமுன்னும்பின்னும், ஆந்தை காலும் ஆகும். எ-று. 2

உகாரச் சத்தம்.

அண்டு முகாரப் போகுநாள் சென்னிமுதல்
கண்டமாங்கோழியுந்து கைமயிலாம்—உண்ட
வல்லூறுடன் முன்பின் வாழுமே யாந்தையது
நல்லகால் காகமாய்நாட்டு எ-ஒ-அ-இ-உ

(பொ-ரை.) உகாரப்பேருடையவர்களுக்கு தலைமுதல் கழுத்து வரைக்கும் கோழியும், கைமயிலும் உடம்புவல்லூறும் முன்னும்பின்னும் ஆந்தையும், கால் காகமுமாமென்று சொல்லுக. எ-று. 3

எகாரச்சத்தம்.

நாட்டுமெகாரப்பே ராளுடையசென்னிமுதல்
ஊட்டுங்கைவல்லூ றுடலாந்தை-காட்டிடுமுன்
பின்னருங்காகம் பொருத்தமேதோர் கோழிக்கால்
நன்னாவலரே நவில். ஒ-அ-இ-உ-எ.

(பொ-ரை.) எகாரப்பேருடையவர்களுக்கு தலைமயிலும், கைவல்லூறும், உடல் ஆந்தையும், முன்னும்பின்னுங்காகமும், கால்கோழியுமாமென்று நாவலர்களே! நீங்கள் சொல்லுங்கள். எ-று. 4

ஒகாரச்சத்தம்.

நவிலுமொகாரப்பேர் நாள்சேர்தலைவலியான்
கவலுங்கையாந்தையுடல் காகமே புவியிலே
தேனேமுன்பின்கோழி தேவர்க்கெலாமடுக்கு
மானேமயில்காண் மதி. அ-இ-உ-எ-ஒ.

(பொ-ரை.) ஒகாரப்பேருடையவர்களுக்கு வல்லூறு தலையும், ஆந்தைகையும், காகம் உடலமும், கோழி முன்னும்பின்னும், மயில் காலுமாகும். எ-று. 5

அமுர்தஸ்தான அலங்காரம்.

பூர்வபக்ஷம் அமரபட்சங்களுக்கு அமிர்தநிலை பேற்றமு மிரக்கமும் ஆகியதிதிகளினால் அறியத்தக்க பாதாதிகேசம்

பிரதமை - அடி.

(நேரிசை வெண்பா.)

* காலடியாம்வல்லூறு கணைக்காலுமாந்தையும்
மேலெழுந்ததாளும்வெண் காகமாம்-மாலார்
படிக்குறங்குகோழியாம் பணவல்குன்மாதே
முடிக்குமயிலென்றே மொழி,

(பொ-ரை.) பாம்பின்படம்போலும் நிதம்பஸ்தானத்தையுடைய பெண்ணே! பூர்வபட்ச அமரபட்சங்களுக்கு பிரதமையில் அமிர்தநிலையானது வல்லூறுக்கு காலடியினும் ஆந்தைக்கு கணைக்காலிலும், காகத்திற்கு முழந்தாளிலும், கோழிக்கு தொடையிலும், மயிலுக்கு சிரசிலுமிருக்குமென்று அறிவாயாக. எ-று. 6

* குற்றுகரந்தள்ளித் தளை பிரிக்கவும்.

துதிகை பாடு.

அறியும்பாடுவல்லூ ருகுமாங்தோழி
முறியாந்தை மேற்கண்டை முன்னே-சரியா
அணிமுழந்தாள்காக மதுதொடையே கோழி
மணிகுய்ய மஞ்ஞை யெனவை.

(பொ-ரை.) துதிகைத்திதியில் வல்லூறு பாடிலும், ஆந்தைக்குக்கெண்டைக்காலிலும்,காகத்திற்கு முழந்தாளிலும்,கோழிக்குதொடையிலும். மயிலுக்கு அபான ஸ்தானத்திலுமென்றனர். எ-று. 7

திரிதிகை-கணைக்கால்.

கணைக்காலாம்வல்லூறு கால்கெண்டையாந்தை
பணைக்குமுழந்தாள் பகர்காகம்-கணித்த
தொடையாகுங்கோழி துய்யமயின்மெல்லி
கடையு மடைதுணையாங் காண்.

(பொ-ரை,) திரிதிகைத்திதியில் வல்லூறுக்கு கணைக்காலிலும், ஆந்தைக்கு கெண்டைக்காலிலும், காகத்திற்கு முழங்காலிலும், கோழிக்குத் தொடையிலும், மயிலுக்கு கடைக்காலிலு மாமென்றுரைக்கக்கடவாய் எ-று. 8

சதுர்த்தசி-முழந்தாள் இடை.

வல்லூறிடுப்பு வளர்முதுகு தானுந்தை
கல்லாதமேன்முதுகு காக்கையாம்-சொல்லரிய
கோழிபிடரிமயில் கைப்பட்டைக்கூறியதன்
தோழி யினியதெனச் சொல்.

(பொ-ரை.) சதுர்த்தசிதிதியில் வல்லூருக்கு இடுப்பும், ஆந்தைக்கு முதுகும், காக்கைக்கு மேல்முதுகும், கோழிக்கு கழுத்தும், மயிலுக்கு கையுமாமென்று இனிமையாகச்சொல். எ-று. 9

பஞ்சமி துடை-உந்தி.

வல்லூறேயுந்தி வயிறுந்தை மார்புகோடி
அல்லாருமென்முலையா குங்கோழி-தொல்லுலகில்
வண்ணமயில்கைக்கீழா மட்டவிழுங்கார்குழலாய்
பண்ணவர்கள்சொன் ஞர் பரிந்து.

(பொ-ரை.) பஞ்சமிதிதியில் வல்லூறுக்கு உந்தியும் ஆந்தைக்குவயிறும், காகத்திற்குமார்பும், கோழிக்குஸ்தனமும் மயிலுக்கு கையும் ஆகுமென்று பெரியவர்கள் சொன்ஞர்கள். எ-று. 10

சஷ்டி நிதம்பம் கீழ்வயிறு.

கீழ்வயிறு வல்லூறு கேள்வயிறு மாந்தையாம்
வாழ்மார்புங் காகமெனும் வாணுதலாய் - தாழ்வில்
வழுவிலாக் கோழி மயிலிருப்பிடம் வல்லீர்
தெழுவிலா வென்றே யியம்பு.

(பொ-ரை) சஷ்டி திதியில் வல்லூறுக்கு கீழ்வயிறும், ஆந்தைக்கு வயிறும், காகத்திற்கு மார்பும், கோழிக்கு விலாவும், மயிலுக்கு இடது பக்கமுமாமென்று சொல்லுவாய், எ-று. 11

சப்தமி இடை கீழ் முதுகு,

* கீழ்முதுகு வல்லூறு கிளர்மேன் முதுகாந்தை
வாழ்பிடரிக் காகமாம் வாணுதலாய் - கோழி
வலவிலா தோகை மயிலா மிடம்வலத்தே
இலவிலா வென்றே யியம்பு.

(பொ-ரை) சப்தமி திதியில் வல்லூருக்குக் கீழ் முதுகும், ஆந்தைக்கு மேல் முதுகும், காகத்திற்குக் கழுத்தும், கோழிக்கு நெற்றியும், மயிலுக்கு விலாவுமென்று சொல்லுவாயாக, எ-று. 12

அஷ்டமி உந்தி வயிறு.

வல்லூறு தான்வயிறும் வல்லாந்தை மார்பாகுஞ்
சொல்லிய காக முதுவாகும் - புல்லியே
கோழி யிடைவிலாக் கோலமிரு மாமயிலே
தோழிவல விலாச் சொல்.

(இ-ள்) அஷ்டமி திதியில் வல்லூறுக்கு வயிறும், ஆந்தைக்கு மார்பும், காகத்திற்கு முதுகும், கோழிக்கு இடது விலாவும், மயிலுக்கு வலது விலாவுமாமென்று சொல்லு, எ-று. 13

நவமி வயிறு மார்பு.

கிழியாத மார்வலியான் கவைதோ ளிரண்டாந்தை
முழுதுடன் முன்காகம் பின்கோழி - பழுதரவே
காலாகு மஞ்ஞையெனக் காமுகர்க்குக் காசினியில்
மேலான நூலிதென்று மேவு,

(பொ-ரை) நவமி திதியில் வல்லூறுக்கு மார்பும், ஆந்தைக்கு இரண்டு தோள்களும், காகத்திற்கு முன் சரீரமும், கோழிக்குப் பின் சரீரமும், மயிலுக்கு காலும் ஆமென்று சொல்லுவாய், எ-று. 14

---

* குற்றுகரந் தள்ளித் தளை பார்க்கவும்.

தசமி கை.

கையிரண்டும் வல்லூறு கழுத்துமே லாந்தை
மெய்யுடைமுன் காகம் பின்கோழிப் - பையத்
தொடையிரண்டுந் தோகைமயிற் றூயமொழி யாராய்ந்து
வடிவமென்று மானிடர்க்கு வை.

(பொ-ரை.) தசமி திதியில் வல்லூறுக்கு இரண்டு கைகளும் ஆந்தைக்குமேலும், காகத்திற்கு முன் உடம்பும், கோழிக்குப்பின் உடம்பும் மயிலுக்கு இரண்டு தொடைகளுமாமென்று தூய்மையான சொல்லையுடைய பெண்ணே! மனிதர்களுக்குச் சொல், எ-று. 15

ஏகாதசி பாளியங்கை.

பாளியான் வல்லூறு பருமுன்கை யாந்தைக்
காலு முழங்கைக் கருங்காகம் - காலைக்கே
மெண்டை யாங்கோழி கிளர்தோண் மயிலாகும்
தண்டமிழ் வல்லாய்நீ சாற்று.

(பொ-ரை) ஏகாதசி திதியில் வல்லூறுக்கு பாளியானும், ஆந்தைக்கு முன்கையும், காகத்திற்கு முழங்கையும், கோழிக்குக் கெண்டைக்காலும், மயிலுக்குத் தோளுமாகு மென்றுசொல், எ-று. 16

துவாதசி விரல்.

மூட்டுவிரல் வல்லூறு முழுவிரலா மாந்தையது
கேட்டவிரல் காகமா நேரிழையீர் - காட்டாணி
மோதிரமாங் கோழி முன்கண்டு தோகையதாம்
ஆதரவாய் சொன்னோ மறி.

(பொ-ரை) துவாதசி திதியில் வல்லூறுக்கு மூட்டு விரலும், ஆந்தைக்கு முழு விரலும், காகத்திற்கு நீண்ட விரலும், கோழிக்கு மோதிரவிரலும், மயிலுக்குச் சுண்டு விரலுமாமென்றுணர்வாய் எ-று.

திரயோதசி கழுத்து.

வல்லூறு வன்கழுத்து வல்லாந்தை வாயாகும்
மெல்லிய லுங்காகம் விழியிரண்டாம் - சொல்லிய
கோழியது நெற்றி குலவுமயில் கூந்தல்
ஆழியுல கத்தா யறி.

(பொ-ரை) திரயோதசி திதியில் வல்லூறு கழுத்தும், ஆந்தைக்கு வாயும், காகத்திற்கு இரண்டு கண்களும், கோழிக்கு நெற்றியும், மயிலுக்கு கூந்தலுமாமென்றுணர்வாய், எ-று. 18

சதுர்த்தசி தலை.

செய்யதலை வல்லூறு சீரார் முதுகாந்தை
கையிரண்டுங் காகமாங் கண்டாயே - மொய்குழலாய்
நாபியாங் கோழி நலமான தாளிரண்டுந்
தோகைமயி லென்றே சொல்.

(பொ-ரை) சதுர்த்தி திதியில் வல்லூறுக்குத் தலையும், ஆந்தைக்கு முதுகும், காகத்திற்கு இரண்டு கைகளும், கோழிக்கு உந்தியும் மயிலுக்கு இரண்டு கால்களுமாகும், எ-று. 19

பூரணைக் கூந்தல்.

கூந்தன்மயி லாகுங் கோழியே நெற்றியதாம்
வாய்ந்தசெவி கண்மூக்கு வாழ்காகம் - ஏந்திழையீர்
வாயாகு மாந்தை மணிக்கழுத்தே வல்லூறு
மாயா துரைக்கும் வகை.

(பொ-ரை) பௌரணை திதியில் மயிலுக்கு கூந்தலும், கோழிக்கு செவியும், காகத்திற்கு கண்களும், மூக்கும், ஆந்தைக்கு வாயும், வல்லூறுக்கு கழுத்துமாகு மென்று சொல், எ-று. 20

இச்செயுள் 15-ம் அங்காமுர்தமன்றியும்
தொடு குறிக்குஞ் சொல்லப்படும்.

திதிப்பக்ஷி.

கோழிக்கு நாலுநாள் குவலயத்திலே மிக்க
வாழுமட வல்லூறுக் கைந்தேநாள் - தோழிகேள்
காக மிரண்டாங் காராந்தை மூன்றாகும்
தோகைமயி லொன்றென்றே சொல்.

(பொ-ரை) கோழிக்கு நான்கு திதிகளும், வல்லூறுக்கு ஐந்து திதிகளும், காகத்திற்கு இரண்டு திதிகளும், ஆந்தைக்கு மூன்று திதிகளும், மயிலுக்கு ஒரு திதியும் நாளளவாமென்று சொல், எ-று.

நக்ஷத்திரப்பக்ஷி.

ஆதிய சுவமுட லைந்துநாள் வல்லூறு
கோதிலா வாறுநாள் கொம்பாந்தை - தீதிலா
உத்திரங்கொண் டைந்துநா ளொன்காகமாங்கோழி
பதநுஷமோணமயில் பார்.

(பொ-ரை.) அஸ்வினிமுதல் ஐந்து நட்சத்திரங்கள் வல்லூறுக்கும் திருவாதிரைமுதல் ஆறு நட்சத்திரங்கள் ஆந்தைக்கும், உத்திரம்முதல் ஐந்து நடசத்திரங்கள் காகத்திற்கும், அனுஷமுதல் பத்து நட்சத்திரங்கள் கோழிக்கும், ஓணநட்சத்திரம் மயிலுக்குமாமென்று பார்ப்பாயாக, எ-று. 22

இதுவுமது ஆருடக் கணிதப்பட்சி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அஞ்சுடன்வல் லூறுண்ணு மாறுடனாந்தையென்போர்
துஞ்சிலாக் காகமைந்தாஞ் சுகம்பெறு மவையேகோழி
நெஞ்சினில் மயிற்றொன்று நினைந்தநாண் முதலாயெண்ணிக்
கொஞ்சிவை யகத்திற்பேசக் குலவுமி னிருபத்தேழே

(பொ-ரை) முதல் ஐந்தில் வல்லூறு உண்ணும், இரண்டாவது ஆறில் ஆந்தை உண்ணும், மூன்றாவது ஐந்தில் காகம் உண்ணும், நான்காவது ஐந்தில் கோழி உண்ணும், ஐந்தாவது ஆறில் மயில்உண்ணும், இப்படியே நன்றாய் வாழ்ந்திருப்பார்கள் எ-று. 23

இதுவுமது உள்ளமுடையான் சூடாமணிச்சோதிடம்.

வாழ்பரி முதலாவைந்தும் வல்லூறு திரைமுன்னாளும்
சூழ்வனே யாந்தையாகுந் துய்யவுத் திரமுன்னைந்தும்
தாழ்விலா யாந்தையாகுந் தடம்பனை முதலாமைந்தும்
கோழியா மோனமோதி யாறுமே யிலாங்கூற.

(பொ-ரை) இருபத்தேழு நட்சத்திரங்களில் அஸ்வினி முதல் ஐந்தில் வல்லூறும், புனர்பூசம் முதல் ஆறில் ஆந்தையும், உத்திர முதல் ஐந்தில் காகமும், அனுஷம் முதல் ஐந்தில் கோழியும், திருவோணம்முதல் ஆறில் மயிலுமாமென்று உணர்வாய், எ-று. 24

பூர்வபட்சம் இராசிப்பட்சி,

நேரிசை வெண்பா.

ஆடரிதேள் வல்லூறுன் தனுமீன் காகம்
கூடுதுலா மேறுங் கோழியதாங் — தேடரிய
நண்டரிவை தண்டாந்தை நன்மகரங் கும்பமிவை
கண்டமயி லென்றோதிக் காண்.

(பொ-ரை) பூர்வ பட்சத்தில் பன்னிரண்டு ராசிகளில் மேஷம் சிங்கம் விருச்சிகம் இம்மூன்றும் வல்லூறுக்கும், தனுசு மீனம் இவ்விரண்டும் காகத்துக்கும், துலாவும் ரிஷபமும் கோழிக்கும், கர்க்கட

கம் கன்னி மிதுனம் இம்மூன்றும் ஆந்தைக்கும், மகர கும்பம் இவ் விரண்டும் மயிலுக்குமென்று பெண்ணே உணர்வாய் எ-று. 25

அமரபட்சம் இராசிப்பக்ஷி.

ஆனமயில்கடக மாடுதேளாகுங்கா
ஞனதரிவையரி யாங்கோழி—மானேகேள்
காகமதுகாதுகுடங் கைச்சிலைமீன்யாழாந்தை
பாகவல்லூறேறுநிறை பார்.

(பொ-ரை.) அமரபட்சத்தில் பன்னிரண்டு ராசிகளில் கடகம் மேஷம் விருச்சிகம் இம்மூன்றும் மயிலுக்கும், கன்னி சிங்கம் இவ் விரண்டும் கோழிக்கும், மிதுனம் மகரம் கும்பம்தனுசு இந்நான்கும் காகத்திற்கும், மீனம், துலாம் இவ்விரண்டும், ஆந்தைக்கும் மேஷம் வல்லூறுக்கு மாகும், எ-று. 26

இதுவுமது உள்ளமுடையான் சூடாமணிச் சோதிடம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மேடமொடு தேளரியும் விரும்பிய வல்லூறுகும்
மிக்ககடகம் மிதுன மெல்லியலு மாந்தை
கூடுசிலைமீனமொடு கொண்டகருங்காகம்
கோலும் விடையும் பெரிய கோழி யெனலாகும்
நீடுகுடமாமகர நீலமயிலாகும்
நின்றிடு மிராசிதனி லிப்பறவைதாமும்
பீடுபடையமாதவ வகத்தியர் சொன்னூலிற்
பேசிடுமிதாகமமி ஞானிகர்மாதே.

(பொ-ரை.) மேஷம், விருச்சிகம், சிங்கம், இம்மூன்றும் வல்லூறுக்கும், கடகம் மிதுனம் கன்னி இவ்விரண்டும், ஆந்தையாகும் தனுசு மீனம், இவ்விரண்டும் காகமாகும், துலாம், ரிஷபம் இவ் விரண்டும் கோழியாகும், கும்பம், மகரம் இவ்விரண்டும் மயிலாகும், இந்த ராசிகளில் இவ்விதமாக அகஸ்தியர் சொன்ன நூல் முறையி லுள்ளது இதன்படி அறிந்துரைக்க வேண்டும் எ-று. 27

எட்டாம் அதிகாரம்

முற்றிற்று.

ஏழாவது செய்யுள் தொகை	95	ஆ௸ செய்யுள் தொகை	122
எட்டாவது செய்யுள்தொகை	27		
சக்கரத் தொகை	67	ஆ௸ சக்கரத் தொகை	67

உ

குருவே துணை.

ஒன்பதாம் அதிகாரம்.

பக்ஷிகளின் கணித விலக்கணம்.

வல்லூறு.

நேரிசை வெண்பா.

பேதையாம் வல்லூறு பேசாது மூன்றரையும்
ஓதிய வொன்றரையி லுண்டேகும் - மாதேகேள்
அஞ்சு மரையினிலொன் றுமே யரசுநிலைச்
செஞ்சொற் றுணிவாற் றெளி.

(பொ-ரை) வல்லூறென்னும் பட்சிக்கு நாழிகை யளவினைச் சொன்னால் அதற்கென்று ஏற்பட்டிருக்கும் ஆறுநாழிகையில் முதல் ஒன்றரை நாழிகை நித்திரைசெய்யும் இரண்டாவது ஒன்றரை நாழிகை போஜனஞ்செய்யும், மூன்றாவது ஒன்றரை நாழிகை நடக்கும், நான்காவது அரைநாழிகை மரணமாயிருக்கும், ஐந்தாவது ஒரு நாழிகை அரசு செய்யும், இது சாஸ்திரத்தின் துணிவால் தெரிந்துக் கொள்ள வேண்டும், எ-று. 1

ஆந்தை.

துணைப்பிரிந்துதேடுந் துணைச்செயலொன்றரை
உணவறிந் தொன்றரையி லுண்ணும் - பிணியாலே
கூர்ந்தூங்க வீராந்தற் கோறனெய் தென்பரே
ஆந்தைக் கரசரையி லாம்.

(பொ-ரை) ஆந்தையென்னும் பட்சியின் நாழிகை ஆறுக்கு முதல் ஒன்றரை நாழிகையில் நடையும், இரண்டாவது ஒன்றரை நாழிகையில் போசனமும், மூன்றாவது இரண்டு நாழிகையில் நித்திரையும், நான்காவது அரைநாழிகையில் மரணமும், ஐந்தாவது அரைநாழிகையில் அரசும் ஆகும் என்று சொல்லுவார்கள், எ-று. 2

காகம்.

துஞ்சும்போ தொன்றரையாந் துய்யநடை யிரண்டு
மிஞ்சி யரசாளு மேலொன்று - வஞ்சியரே
சேக்கையே நீக்கச் சிறுபோசன மொன்றாம்
காக்கைக்கே சொன்னார் கணி.

(பொ-ரை.) காக்கை என்னும் பட்சியின் நாழிகை ஆறுக்கு முதல் ஒன்றரை நாழிகையில் மரணமும், இரண்டாவது, இரண்டு நாழிகையில் நடையும், மூன்றுவது ஒரு நாழிகையில் அரசும், நான் காவது ஒரு நாழிகையில் உணவும், ஐந்தாவது அரை நாழிகையில் தூக்கமுமா மென்று சொன்னுர்கள். ஆராய்ந்துபார், எ-று. 3

கோ ழி.

குற்றமிலா வொன்றரையிற் கோழி துணை கூடு
மற்றுமோ ரொன்றையில் வாய்ப்பூசும்—வெற்றி
யரசாளுமூன்றி லழியுமே யொன்று
நிறையாவ தொன்றுய் நினை.

(பொ-ரை.) கோழி என்னும் பட்சியின் நாழிகை ஆறுக்கு முதல் ஒன்றரை நாழிகையில் நடையும், இரண்டாவது ஒன்றரை நாழிகையில் உணவும், மூன்றுவது ஒருநாழிகையில் அரசும், நான் காவது ஒரு நாழிகையில் மரணமும், ஐந்தாவது ஒருநாழிகையில் தூக்கமு மாகுமென்று நீ நினைத்துக்கொள், எ-று. 4

ம யி ல்.

எடுக்குங்கடி கை யிரண்டரையுமாக
நடக்குமறை யிரண்டின் வல்லூண்—அடுக்கும்
அரசாளுமொன்றி லடங்கித்திரை யொன்றில்
நரைசா வென்றென்றே நவில்.

(பொ-ரை.) மயில் என்னும் பட்சியின் நாழிகை ஆறுக்கு முதல் இரண்டரை நாழிகையில் நடையும், இரண்டாவது அரை நாழிகையில் உணவும் மூன்றுவது ஒரு நாழிகையில் அரசும் நான் காவது ஒரு நாழிகையில் தூக்கமும் ஐந்தாவது ஒரு நாழிகையில் மரணமு மாகுமென்று சொல்லுவாய், எ-று. 5

பக்ஷி நாழிகை மாற்று.

அஞ்சு பறவையுமோ மாறுகடிகை யினும்
வஞ்சவுண்டு துஞ்சிடுமென் றெண்ணுதே—வஞ்சியரே
ஒன்றென்றே நாளாறு கடிகையினிலே யுண்ணும்
என்றென்றே சொன்னு ரெமக்கு.

(பொ-ரை.) ஐந்து பட்சிகளும் ஒன்றுக ஆறு நாழிகையிலும் உண்டும், செத்து மிருக்குமென் றெண்ண வேண்டாம் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பட்சியே உண்ணுதல் முதலிய செய்கைகளைச் செய்வனவாம், எ-று. 6

பக்ஷிபாகம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சேனதிசைகள்திசை சீரதாகச்
சிங்கத்திசையானை திசை செப்பொணுத
பூனைதிசையாவுதிசை யெலியினேடு
பொருந்துமுயற்றிசை யெட்டும் பொலியும்பட்சி
மோனமென்றுஞ் சூக்ஷமதிசை நாளதாக
முன்றினமே பிராணதிசை யுண்மையாகப்
பானன்மொழிமடமாதே பட்சிபாகம்
பகர்ந்திடுவரைந்தொழிலின் பலன்கடாமே.

(பொ-ரை.) கருடதிசை, பாம்புதிசை, சிங்கதிசை, யானை திசை, பூனைதிசை, நாய்திசை, எலிதிசை, முயல்திசை யென்னும் எட்டுத் திசைகளிலும் ஐந்து பட்சிகளும் விளங்குந் தன்மையைக் கண்டு மோன மென்றும், சூட்சம மென்றும், பிராணதிசை யென்றும், பெண்ணே! பலன் சொல்லுவார்கள், எ-று. 7

மகரதிசை யாண்டு.

உண்டிநடையைந்தாகி யிருபதைந்தா
முழுதூக்கஞ்சாவாணு லைந்ததாகும்
கண்டவிருபதினைந்து மாகக்கூட்டி
மகரதிசைநாலுண் டந்திரதிசையாந்திங்கள்
விண்டநாள்சூக்ஷமதிசை பிராணதிசைநாள்
விளங்கியபஞ்சாங்க முறையேவல்லாற்
அண்டருக்குமேலாகு மாயுள்காணு
ரலைகடல்சூழவனியெல்லா மறிவதாமே.

(பொ-ரை) உண்டியும்நடையுமானல் இருபத்தைந்தாண்டும் தூக்கம் சாவுமானல் இருபதாண்டும், இரண்டையுஞ்சேர்த்து மகரதிசை முதலியவைகளாகப் பிரித்து சொல்லுவோர் பஞ்சாங்க முறைமையில் வல்லவர்களாவார்கள், அவர்களே சகலலோக மர்மங்களையு முணர்பவ ராகையால் தேவர்களுக்கும் உயர்ந்தவர்களாவார்கள், எ-று, 8

உறவுபட்சி.

மயிலுக்கு	கோழியும்-காகமும்-உறவு
காகத்துக்கு	மயிலும்-கோழியும்-வல்லூறும்-உறவு
வல்லூறுக்கு	காகமுறவு
கோழிக்கு	மயிலும்-காகமும்-உறவு
ஆந்தைக்கு	கோழியும்-மயிலும்-வல்லூறும்-உறவு

மற்றவையெல்லாம் பகை - இவை ஆத்தும சிநேகம்.

பகைபக்ஷி.

மயிலுக்கும்-கோழிக்கும் வல்லூறும்-ஆந்தையும்பகை
காகத்துக்கு ஆந்தைபகை
ஆந்தைக்கு காகம்பகை
வல்லூறுக்கு காகமொழிய மற்றவையெல்லாம் பகை
சொல்லாதவைகளெல்லாம் உறவு இவை உயிர்ப்பகை

இராசி யடையாளம்.

மகரம் கன்னி மிதுனம் - கருப்பு. விருச்சிகம் கும்பம் மீனம் - பசுமை. இடபம் துலாம் கடகம் வெள்ளை. மேஷம் தனுசு சிங்கம் - செம்மை.

இராசிக்கிரகநிறம்.

பாம்பு சனி மகரம் மிதுனம் கன்னி இவை கறுப்பு
புதன் மீனம் கும்பம் விருச்சிகம் இவை பச்சை
திங்கள் ஞாயிறு வெள்ளி இடபம் துலாம் கடகம் இவைவெள்ளை
செவ்வாய் மேஷம் தனுசு சிங்கம் இவை சிகப்பு
வியாழம் பொன்னிறமென்று சொல்லப்படும்.

இராசியாதி பதிப்பொருத்தம்.

சிங்கம் சூரியனுக்கு தனுசு பிரகஸ்பதிக்கு
இடபம் சந்திரனுக்கு துலாம் சுக்கிரனுக்கு
மேஷம் அங்காரகனுக்கு கும்பம் சனிக்கு
கன்னி புதனுக்கு மூலத்திரிகோணமெனப்படும்

கிரகமாவது.

சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது இவை 9-ம் நவக்கிரகங்களாம்.

கிரக சத்துருவம்.

சூரியனுக்குப்பகை சுக்கிரன் சனி இராகு கேது
சந்திரனுக்குப்பகை இராகு கேது
செவ்வாய்க்குப்பகை புதன் இராகு கேது
புதனுக்குப்பகை சனி
குருவுக்குப்பகை சுக்கிரன் புதன்
சுக்கிரனுக்குப்பகை சூரியன் சந்திரன்
சனி இராகு கேதுகளுக்குப்பகை சூரியன் சந்திரன் செவ்வாய் சத்துருத்துவமெனப்படும்.

கிரக மித்துருவம்.

சூரியனுக்குறவு	செவ்வாய் சந்திரன் குரு
சந்திரனுக்குறவு	சூரியன் புதன்
செவ்வாய்க்குறவு	சூரியன் சந்திரன் குரு
புதனுக்குறவு	சுக்கிரன் சூரியன்
குருவுக்குறவு	சூரியன் சந்திரன் செவ்வாய்
சுக்கிரனுக்குறவு	புதன் இராகு கேது
சனிக்குறவு	சுக்கிரன் புதன், இராகு கேது
இராகு கேதுகளுக்குறவு	சனி சுக்கிரன்

மித்துருவமெனப்படும்.

கிரக சமத்துவம்.

சூரியனுக்குச்சமம்	புதன்
சந்திரனுக்குச்சமம்	செவ்வாய் சுக்கிரன் குரு சனி
செவ்வாய்க்குச்சமம்	சுக்கிரன் சனி
புதனுக்குச்சமம்	செவ்வாய் சனி குரு இராகு கேது
குருவுக்குச்சமம்	சனி இராகு கேது
சுக்கிரனுக்குச்சமம்	செவ்வாய் குரு
சனிக்குச்சமம்	குரு
இராகு கேதுவுக்குச்சமம்	புதனும் குருவும்

சமத்துவதமெனப்படும்.

கிரக அடையாளம்.

சனி, இராகு-கருமை. புதன் பசுமை-குரு பொன்மை-சுக்கிரன், சந்திரன் வெண்மை - செவ்வாய் சூரியன், கேது - செம்மைநிற மெனப்படும்.

கிரக வலிமை.

புதனுக்குவலிமை	செவ்வாய்
செவ்வாய்க்குவலிமை	சனி
சனிக்குவலிமை	குரு
குருவுக்குவலிமை	சுக்கிரன்
சுக்கிரனுக்குவலிமை	சந்திரன்
சந்திரனுக்கு வலிமை	சூரியன்
சூரியனுக்குவலிமை	இராகுகேது எனப்படும்

நட்டமுட்டி சிந்தனையிலிருந் தெடுத் தெழுதியவை

நட்சத்திர வேதைப்பொருத்தம்

பரணிக்கு-கேட்டையும் கார்த்திகைக்கு-அனுஷமும், உரோகணிக்கு-விசாகமும், மிருகசீரிடத்திற்கு-சுவாதியும், திருவாதிரைக்கு-அவிட்டமும், புநர்பூசத்திற்கு - திருவோணமும், பூசத்திற்கு உத்திராடமும், ஆயிலியத்திற்கு-பூராடமும், உத்திரத்திற்கு - உத்திரட்டாதியும், அத்தத்திற்கு-பூரட்டாதியும், சித்திரைக்கு - சதயமும், இரேவதிக்கு பூரமும், வேதையாகையால் இவை நீங்கலாய்மற்றைய நக்ஷத்திரங்களுக்கு உறவாமெனக் கொள்கவென்பதாம்.

யோனிப் பகை.

யானைக்குப்பகை-சிங்கம்	பாம்புக்குப்பகை-குரங்கு
பசுவுக்குப்பகை-புலி	எலிக்குப்பகை-பூனை
குதிரைக்குப்பகை-எருமை	மானுக்குப்பகை-நாய்
ஆட்டுக்குப்பகை-நாய்	மற்றவையெல்லாமுறவெனப்படும்

ஆண் பெண் விருக்ஷம்.

வைரமுள்ளவைகளெல்லாம் ஆண்விருக்ஷம் -பாலுள்ளவையெல்லாம் பெண்விருக்ஷம் ஆல்-அரசு-அத்தி-மாதளை மகிழ் பலா மா இலுப்பை சண்பகம் எருக்கு வஞ்சி நாவல் இப்பன்னிரண்டும் பால்பொருந்தியன வாகையால் பெண்ணெனச் சொல்லப்படும். மற்றவைகள் வைரம்பொருந்திய விருக்ஷங்கள் ஆணெனச் சொல்லப்படும்.

இ ரா சி வ சி ய ம்.

மேஷத்துக்கு	சிங்கம் வசியம்
இடபத்துக்கு	துலாமும் கடகமும் வசியம்
மிதுனத்துக்கு	கன்னி வசியம்
கடகத்துக்கு	தனுசும் விருச்சிகமும் வசியம்
சிங்கத்துக்கு	துலாம் வசியம்
கன்னிக்கு	மிதுனமும் மீனமும் வசியம்
துலாத்துக்கு	மகரம் வசியம்
விருச்சிகத்துக்கு	கடகமும் கன்னியும் வசியம்
தனுசுக்கு	மீனம் வசியம்
மகரத்துக்கு	மேஷமும் கும்பமும் வசியம்

கும்பத்துக்கு மேஷ வசியம்
மீனத்துக்கு மகரம்வசியம்
சொல்லாதவையெல்லாம் பகையெனப்படும்

இராசித்திக்கு.

மேஷம் இடபம் கிழக்கு மிதுனம் தென்கிழக்கு
கடகம் சிங்கம் தெற்கு கன்னி தென்மேற்கு
துலாம் விருச்சிகம் மேற்கு தனுசு வடமேற்கு
மகரம் கும்பம் வடக்கு மீனம் வடகிழக்கு

தறிக்கால்.

மேஷம் முதற்கால் மிதுனத்தில் கடைக்காலையுண்ணும் 2-ம் கால் 3-ம் காலையுண்ணும் 3-ம் கால் 2-ம் காலையுண்ணும் 4ம்கால்முதற்காலை யுண்ணும் இப்படியே மற்ற விராசிகளு முண்ணும்.

இராசிநோக்கு.

மேஷம் கடகம் துலாம் மகரம் இவை சரராசிகள் 11 வது இராசிகளை நோக்கும். இடபம் விருச்சிகம்கும்பம் சிங்கம் இவைஸ்திரராசிகள், 9-வது இராசிகளை நோக்கும் தனுசு மிதுனம் கன்னி மீனம்இவை உபயவிராசிகள், 7-வது இராசிகளை நோக்கும்.

மேஷம் முதற்கால் கும்பம் 4-ம் காலை நோக்கும், 2-ம் கால் 3-ம் காலை $\frac{1}{3}$ நோக்கு நோக்கும், 3-ம்கால் 2-ம் காலை $\frac{3}{4}$-நோக்குநோக்கும் 4 ம்கால் முதற்காலை முழுநோக்கு நோக்கும் இப்படியே இராசிகளெல்லாம் நோக்குமென்றறிவது.

கவிப்புக் கொள்ளும்படி

சிறுகால் யாதொரு விராசியுதிப்பது $2\frac{1}{2}$ நாழிகைதன்னை தானே கவிக்கும். இராண்டாமிராசிமற்ற இரண்டரை நாழிகையும் கவிக்கும். இப்படி 12 இராசிகளும் 30 நாழிகையும் இடமேவந்து கவிக்கும் எனப்படும்.

வினவிநின்ற விராசி ஆரூடமென்பது அப்பொழுது உதிக்கின்ற விராசியையுதையமென்றறிக. பாம்பும் வெள்ளியும் வியாழமும் உச்சிக் கோளென்றறிக, புதனும் திங்களும் இவை நிலைக்கோள் ஆதித்தனும் செவ்வாயும் சனியும் இவைபூமிக்கோளெனப்படும் இவற்றால் உச்சத்திற்கேட்டது இடைநிலத்திலே கேட்டது பூமியிற் கேட்டதென்றும் மற்றுள்ளவைகளும் இவ்வகையாலறிக.

திரிவித கிரகங்கள்.

சந்திரன்-செவ்வாய்-இராகு கேது	சரக்கிரகங்கள்
சூரியன் சுக்கிரன்	ஸ்திரக்கிரகங்கள்
புதன் குரு சனி	உபயக்கிரகங்கள்

கிரக நோக்கு.

கிரகங்களெல்லாம் தாமிருக்குமிடத்துக்கு 7-ம் இடத்தைப்பார்க்கும் விசேஷமாக சனி 3-10-செவ்வாய் 4-8-குரு 5-9-இராகுகேது 3-11-ம் இடத்தைப் பார்க்கும் 3-ம் இடம் 10-ம் இடம் கால் பார்வை 4-8-ம் இடம் அரைபார்வை 5-9-ம் இடம் முக்கால் பார்வை 7-ம் இடமும் தாமிருக்குமிடமும் முழுப்பார்வை பார்க்கும். அன்றியும் சூரியன்-இராகு-கேது-செவ்வாய்-சனி இவை குரூரக்கிரகங்கள் குரு சந்திரன்-சுக்கிரன்-புதன்-இவை-சுபக்கிரகங்கள் அமரபட்சத்துச்சந்திரனும் சனிசம்பந்த குருவும் பாபக்கிரகங்கள் எனப்படும்.

ஜாதி இராசிக்கிரகம்.

மீனம்-விருச்சிகம்-கடகம்-வியாழம்-திங்கள் இவை	பிராமணஜாதி
சிங்கம்-மேஷம்-தனுசு-செவ்வாய்-ஞாயிறு இவை	க்ஷத்திரியஜாதி
மிதுனம்-துலாம்-கும்பம்-புதன் இவை	வைசியஜாதி
இடபம்-கன்னி-மகரம்-வெள்ளி இவை	சூத்திரஜாதி

சனிபஞ்சமன் இராகுகேது புலையசாதி யெனப்படும்

கிரகத்திற்கு அட்சரம்.

கிழக்கு-ஞாயிறு, தென்கிழக்கு-செவ்வாய், தெற்கு-வியாழம், தென்மேற்கு-புதன், மேற்கு-வெள்ளி, வடமேற்கு-சனி, வடக்கு-சந்திரன் வடகிழக்கு, இராகு-கேது, இவர்கள் இந்ததிக்கில் அவரவர்கள், வாரங்களில் 7½-நாழிகை உதித்திருப்பார்களெனப்படும், யோனியும் பதாகையும் 3¾-நாழிகை பெறும் தெய்வம்-1¾-நாழிகை பெறும், அன்றியும் அட்சரங்களாவன, அ-ஆ-கிழக்கு, இ-ஈ-தென்கிழக்கு, உ-ஊ-தெற்கு, இ-அ-எ-ஏ-தென்மேற்கு, அ-இ-ஐ-மேற்கு, உ-அ-ஒ-ஓ-வடமேற்கு. அ-உ-ஔ-வடக்கு, 0 ஃ-வடகிழக்கு, இப்படி நின்று 2⅓-நாழிகைபெறும் கிரகங்களுக்கு அக்ஷரமாவன-க-ங-செவ்வாய், ச-ஞ-வெள்ளி, ட-ண-புதன், த-ந-வியாழம், ப-ம-சனி, ய-ர சூரியன், ல-வ-சந்திரன், ழ-ள-இராகு, ற-ன-கேது. இவ்வக்ஷரங்கள் கோட்களுக்கென்றும் இவர்கள் நின்ற திக்குகளுக்கென்றறிவது இவ்வக்ஷரங்களார் கேட்ட உகுக்கள் பெறும் காரியங் கொள்ளப்போவார் மற்றுள்ளவையும் பெறுவார்.

கிரக நக்ஷத்திரம்.

சூரியன் சந்திரன் செவ்வாய் இராகு குருசனி புதன்கேது சுக்கிரன், இவ்வொன்பது பேருக்கும் கார்த்திகைமுதல் பூரம் வரையிற் கொள்ளில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நக்ஷத்திரமாகும் மற்றவைகளுக்கு மிவ்விடையே பார்த்துக்கொள்ளவும்.

மாதம்.	முதற்பக்கத்துக்கு நாழிகை.	நடுப் பக்கத்துக்கு நாழிகை.	பிற் பக்கத்துக்கு நாழிகை.
சித்திரை, ஆவணி	1	½	0
வைகாசி, புரட்டாசி	0	½	1
ஆனி, ஐப்பசி	1	1½	2
கார்த்திகை	2	2½	3
மார்கழி	3	3½	4
தை	4	3½	3
மாசி	3	2½	2
ஆடி, பங்குனி	2	1½	1

விருத்தம்.

தையிருபத்தெட்டரை மேற்றனுசு கும்பம், தான்கால்மீன் விருச்சிகமே முக்காலாகும், மைதுலேயுமிருமுக்கால் ரிஷபங்கன்னி,வருமிரண்டோ டொருகாலு மிதுனஞ்சிங்கம், எய்யுமிரண்டேமுக்கால் கடக மூன்றும், இயம்பினது பகலகசுகடிகையாகும், ஐயமதியறுபதிலேசெல்லுபோக, அன்றிரவுக்குள்ளதைநீ யறிந்துக்கொள்ளே.

(பொ-ரை.) இருபத்தெட்டரை நாழிகைக்குமேல் தனுசும்,கும்பமுமாம், அதன்மேல் கால்சேர்ந்தால் மீனமாம், முக்கால் சேர்ந்தால் விருச்சிகமாகும், ஒன்றரைசேர்ந்தால் மேஷம், துலாம், ரிஷபம் கன்னிகளாம், இரண்டேகால் சேர்ந்தால் மிதுனமாம், இரண்டேமுக்கால் சிங்கமாம், மூன்று காகமாம் இப்படி சொன்னது பகலிரவுகளின் நாழிகைகளாம். அறுபது நாழிகையில் செல்லுபோக இராத்திரிக்குள் உணர்ந்துகொள், எ-று.

இப்படியாக அவச்சாயையென்னும் பாதச்சாயை யெல்லா மீறும் கூட்டல் கழித்தல் அரை அடிபெறும்.

நேரிசை வெண்பா.

ஒன்றரையொன்றே காலென்றுமுக்காலரையாம்
நின்றதுகையை நிலைநிறுத்தி நன்றாக
வட்டமொக்கவேகூட்டி மாளிகைக்குள்ளேயிருந்து
தொட்டவிரனுருகையாய்ச் சொல்.

(பொ-ரை.) ஐந்து வட்டமிட்டு அதில் ஒன்றரை ஒன்றேகால் ஒன்று முக்கால் அரை என்றுபோட்டு அதில் எதைத் தொடுகின்றார்களோ அதுவே நாழிகையென்று சொல்லு, எ-று. 10

சுட்டுவிரண் மடக்கிச் சூரியனைத் தன்வலமாய்
எட்டுவிரலை யிரட்டித்து
அடியளந்துபார்ப்பதன்முன் னாராய்ந்துசொல்லும்
குடியறிந்தெந்நாளுங் கூறு.

(பொ-ரை.) சுட்டுவிரலைமடக்கி சூரியனைவலமாக எண்ணிவிரல்களை இரட்டித்து அடியையளர்ந்து பார்ப்பதற்கு முன்னமே ஆராய்ந்து பார்த்து எப்போதும் சொல்லுவாயாக, எ-று. 11

ஒன்பதாவது அதிகாரம்

முற்றிற்று.

எட்டாவது செய்யுள் தொகை	122	ஆகூ செய்யுள் தொகை	133
ஒன்பதாவது செய்யுள் தொகை	11		
எட்டாவது சக்கரத் தொகை	57		
ஒன்பதாவது சக்கரத்தொகை	1	ஆகூ சக்கரத் தொகை	58

உ

குருவே துணை.

பத்தாம் அதிகாரம்.

மச்சமுனி எண்ணூற்றிலிருந்தெடுத்தெழுதியவை.

அஷ்டகருமவிதி.

இது பூர்வ பக்ஷத்துக்கு நிறப்பக்ஷி.

செம்மைபொன் னிறங்கறுப்புச் சிறுகறுப் புடனேவெள்ளை
மெய்ம்மயி லாந்தைகாகங் கோழிவல் லூறுமைந்தே.

(பொ-ரை.) பூர்வபட்சத்தில் மயிலுக்கு செம்மை நிறமும், ஆந்தைக்குபொன்னிறமும், காகத்துக்குகறுப்புநிறமும் கோழிக்கு கொஞ்சங்கறுப்புநிறமும், வல்லூறுக்கு வெள்ளைநிறமுமுண்டாகும் எ-று. 1

இது அமரபட்சத்துக்கு நிறப்பக்ஷி.

வெள்ளிபொன் சிவப்புப்பச்சை மேவிய கருப்போடைந்து
உள்ளதே வயலூற்றுந்தை கொடிகோழி மயிலுமைந்தே.

(பொ-ரை.) அமரபட்சத்தில் வல்லூறுக்கு வெள்ளிநிறமும், ஆந்தைக்கு பொன்னிறமும்,காகத்திற்கு சிவப்புநிறமும் கோழிக்குபச்சைநிறமும், மயிலுக்கு கறுப்பு நிறமுமுண்டாகும் எ-று. 2

செய்வினைப் பொருத்தம்

ஓதவேகீழ்த்திசைக்கு வெள்ளியாகு முத்திரமுமஷ்டமியுங் கூடநன்று
நீடவேயக்கினிக்கு மந்தவார மிரேவதியுமஷ்டமி மெத்தநன்று
சூடவேமறலிக்கு மாதிவாரந் துவாதசியும்பூசமடா மெத்தநன்று
வடவேநிருதிமதி சித்திரைகூட மகமாயிலியும் பூரணையுநன்றதாமே.

(பொ-ரை.) கிழக்குத்திக்குக்கு வெள்ளிக்கிழமையும், உத்திரநட்சத்திரமும், அஷ்டமிதிதியும், அக்கினி திக்குக்கு சனிக்கிழமையும் ரேவதிநட்சத்திரமும், அஷ்டமிதிதியும். எமதிக்குக்கு ஞாயிற்றுக்கிழமையும் துவாதசிதிதியும், பூரநட்சத்திரமும், நிருதிதிக்குக்கு திங்கட்கிழமையும் சித்திரை மகம் ஆயிலியம் என்னும் நட்சத்திரங்களும் பௌர்ணமிதிதியும் நன்மையுடையவைகளாம், எ-று. 3

இ து வு ம து.

ஆறுலு மேற்றிசைக்கு மங்களவாரம் அமரபக்ஷத் தட்டமியும் விசாகநன்று, போறுலும்வாய்விக்குப்புந்திகூடும் புனர்பூசமாயிலியம்பஞ்சமியுநன்று, மேஞ்ஞளுமட்டதிசை வியாழஞ்சோதி விளங்கியசதுர்த்தசிமெத்தநன்று, கோணுமீசனிலே வெள்ளி கூடியே மூப்பூர தோஷநன்றே.

(பொ-ரை.) மேற்கு திக்குக்கு செவ்வாய்க் கிழமையும் அபரபட்சத்து அஷ்டமிதிதியும், விசாக நட்சத்திரமும், அக்கினி திக்கு சனிக்கிழமையும் இரேவதி நட்சத்திரமும், அஷ்டமிதிதியும், எமன் திக்குக்கு ஞாயிற்றுக்கிழமையும் துவாதசிதிதியும் பூசநட்சத்திரமும், நிருதி திக்குக்கு திங்கட் கிழமையும் சித்திரை, மகம், ஆயிலியம் என்னும் நட்சத்திரங்களும், பௌரணை திதியும் நன்மையுடையவைகளாம்' என்றவாறு.

(பொ-ரை.) மேற்குத்திக்குக்கு செவ்வாய்கிழமையும் அமரபட்சத்து அஷ்டமிதிதியும் விசாகநட்சத்திரமும், வாயுதிக்குக்கு புதன் கிழமையும், புனர்பூசம் ஆயிலியம் என்னும் நட்சத்திரங்களும் பஞ்சமி திதியும், மறலிதிசைக்கு வியாயக் கிழமையும் சோதி நட்சத்திரமும், சதுர்த்தசிதிதியும், ஈசான்ய திக்குக்கு வெள்ளிக்கிழமையும் மூப்பூரமும் நன்மையுடையவைகளாம், எ-று. 5

செ ய் க ரு ம நி லே.

தோஷங்கள்கீழ்த்திசைக்கு மரணமாகும்
சொன்னபடியக்கினிக்கு மரணமாகும்
பாசங்கடென்றிசைக்கு முகாரமாகும்
பகர்நிரும்தனிலுண்டு பண்பதாகும்
தேசங்கள்மேற்றிசைக்கு நடையதாகும்
செயமானவாயுவுக்குத் தூக்கமாகும்
நாசங்கள்வடக்காகு மீசனுக்கு
நன்ருகும்போதுபக்ஷி யைந்துமாமே.

(பொ-ரை.) கீழ்த்திசைக்கும் அக்கினுக்கும் மரணமாகும் தெற்குக்கு அரசாகும், நிருதிக்கு ஊணுகும், மேற்குக்கு நடையாகும், வாய்வுக்கு தூக்கமாகும் ஈசான்யத்துக்கு வடக்கு நன்மையைக்கொடுக்கின்றபோதும் பட்சிகள் ஐந்தின் செய்கைகள் இவைகளாம் என்றவாறு. 6

திக்குப்பூச்சி.

ஐஞ்சாயங்கிழ்சிவப் பெரிக்குக்கூடத்
தந்தகனுர்கருப்பாகு நிருதிகூடத்
துஞ்சாமற் பச்சையது வேற்கோபத்துஞ்
சொன்னகறுப்பதுவாழ்வு மூலைக்காகும்
மஞ்சாரும்பொன்மயமே வடக்குக்கப்பால்
வளர்வெள்ளிமலையீசன் வரையதாகும்
பஞ்சமமாம்வண்ணமிந்தப் படியேபோட்டுப்
பாரமெனும்பூசைபண்ணி பக்ஷிபாரே

(பொ-ரை.) நிறமாவன:--கிழக்குக்குசிவப்பும், எமனுக்கு கறுப்பும் நிருதிக்கு பச்சையும், மேற்குக்கு கறுப்பும் வாய்வுக்குமஞ்சளும், வடக்குக்கு வெள்ளையும் ஆகும். ஆகையால், இவ்விதமே போட்டுப் பூசைபண்ணி பட்சிகளை ஆராய்ந்துபார். எ-று. 7

பக்ஷிப்பொருத்தம்.

வல்லூறுக்கும் ஆந்தைக்கும்.

பட்சியிலேமுதல்பட்சி யானுனன்று
பண்ணுறங்கிநடந்தாலுந் துஞ்சினுலும்
உச்சியேயாகியே யுண்டிட்டாலும்
உச்சமடாபட்சிமிச்சம் வல்லூராகும்
கச்சியிவேயாந்தையென்று லாகாதப்பா
கன்மானவூணரசா ணுனன்றே
கொச்சியிலேநடையுறக்கஞ் சாவென்றுலே
கூடாதேயாந்தைவலு வில்லைத்தானே.

(பொ-ரை.) ஐந்து பட்சிகளில் முதல்பட்சியானுல் மிகவும் நல்லது உறங்கினுலும், நடந்தாலும், மரணமானுலும், உண்டாலும், வல்லூறு உச்சமாகும், ஆந்தை யென்றுல் ஆகமாட்டாது, உண்டி அரசு இவைகளிருந்தால், நன்மை, நடை, தூக்கம், மரணம் இவைகளில் ஆந்தைக்கு வலிவில்லை, எ-று. 8

காகத்துக்கும் - கோழிக்கும்.

வலிவாகுங்காகமங்கே யுதித்ததானுல்
வல்லூறுபோதாது காகமிச்சம்
வலுவாகமணமுட னரசானுலும்
மாடமிசைநடந்தாலு முறங்கினுலும்

வலுவாகவுண்டாலே யதிகலரபம்
மதிகோழிவிதியாக வுதிப்பதாலே
வலுவாகுமற்றவெல்லா மிரண்டாம்பக்ஷம்
வாரணத்தை யாந்தையைப்போல் வைத்துப்போடே.

(பொ-ரை.) காகம் முதல் பட்சியானல் நிரம்பவும் வலிவாகும் வல்லூறுக்கு அவ்வளவாக வலிவுபோதாது காகமே மேம்பட்டதாகும் மரணம். அரசு, நடை, தூக்கம், ஊண் இவைகளில் எதுவானாலும் இரண்டாம் பட்சமாகும் கோழியை ஆந்தையைப்போல் வைத்துப் போட வேண்டும், எ-று. 9

மயிலுக்கு.

வைத்தமயில்செத்தாலு முறங்கினாலு
மண்ணுண்டுநடந்துணினு மஞ்சாதப்பா
செத்தமயில்கிடந்தாலுமரவமஞ்சுஞ்
செகந்தனிலேயிதுமிச்சஞ் செப்பக்கேளு
அத்தமதுகைகூடு மரசர்தோற்பா
ரணிபெறலாகுநலமா மவையும்ஞானம்
மற்றவெல்லாம்போதாது மயிலுக்கப்பா
மகத்தானபறவைசெய்யும்வகையைக்கேளே

(பொ-ரை.) மயிலானது மரணமானலும், தூங்கினலும், அரசாண்டாலும் நடந்தாலும் உண்டாலும் பயப்படாது. மயில் செத்துக்கிடந்தாலும், அழகுகைகூடும். அரசர் தோல்வி யடைவார்கள். செல்வம் பெறலாம், மற்றவைகள் போதாது, இவை பட்சிகள் செய்யும் விதங்களாம், இவைகளை நன்றாய்க் கேட்பாய், எ-று. 10

பூர்வபட்சம்.

வாரப்பக்ஷி செய்கை மூலிகைக் குறிப்பு.

வகையென்ன வளர்பிறைக்குச் செவ்வாய்பானு
வல்லூறினதிகாரம் புதனுந்திங்கள்
துகையாகுமாந்தை யதிகாரமாகும்
சொல்லும்வியாழத்தி னதிகாரங்காகம்
நகையென்னவெள்ளிக்குக் கோழியாகும்
நல்லசனியதிகார மயிலுக்குண்டு
வகையென்னபச்சிலையைப் பகருவோம்யாம்
பட்சிசெல்லாமுண்ணுது பிடுங்கிட்டாலே.

(பொ-ரை.) வளர்பிறையில் செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக் கிழமைகளில் வல்லூறின் அதிகாரமாகும், புதன்கிழமை, திங்கட் கிழமைகளில் ஆந்தையின் அதிகாரமாகும், வியாழக்கிழமையில் காகத் தின் அதிகாரமாகும், வெள்ளிக்கிழமையில் கோழியின் அதிகார மாகும் சனிக்கிழமையில் மயிலின் அதிகாரமாகும் இனி மூலிகை வகையைச்சொல்லுவோம். பிசகினுல் பட்சிகள்உண்ணமாட்டா எ-று

பிடுங்குவதுதினமதுவே மூலிகேளு
பேசாதேயரைக்கீரை முதலாம்பட்சி
ஒடுங்குவதாற்சிறுகீரை இரண்டாம்பட்சி
யுரைத்திட்டோமூக்கரை சாரணைவேர்க்காகம்
நடுங்குவதுக்கரையின்வேர் கோழிக்காகும்
நங்கிலிவேர்மயிலுக்கா நாளுஞ்சேரப்
பிடுங்கிவிட்டுச்சாமத்திற் போட்டுப்போனுல்
புண்ணியனேமாரணமாங் கருமந்தானே.

(பொ-ரை.) வல்லூறுக்கு அரைக்கீரையும், ஆந்தைக்கு சிறு கீரையும் காகத்திற்கு மூக்கிரண்டை சாரணைகளும் கோழிக்கு தகரை யும் மயிலுக்கு சிலுசிலுப்பையும் பிடுங்கிவிட்டு சாமத்தில் போட்டு விட்டுப்போனுல் மரணமாகும், எ-று. 12

கருமமென்னவூணரசு நமக்குநன்று
காரியங்கைகூடுமடா யலக்குமூலம்
வருமளவும்பொசியாது நமக்கண்டான
வழக்குவெல்லும்படைபோனுல் வரலாம்வெற்றி
திருதாகும்பொருதிளிப்பா ராசர்தோற்பார்
நிதிசேரும்பிணிதீரு நேமமுற்றும்
தருமமதுதலைக்கிட்டு மூலத்தாலே
தனிமூலம்பொதுபட்சி கீரைவித்தே.

(பொ-ரை.) ஊணும் அரசும் நல்லது காரியங்கள் கைகூடும் வழக்கு வெல்லாம் ஜெயமடையலாம் அரசர் தோற்பார் செல்வஞ் சேரும் நோய் தீரும், தருமமுண்டாம் என்றறியவும். எ-று. 13

வித்தானவெதிரிகளை வெல்லவேண்டில்
வேருனேண்பேர்மரண நடையுறக்கம்
இத்தானவேளையிலே யதன்பேர்சொல்லி
இசைத்திட்டமூலத்தைச் சாபம்நீக்கிக்

கொத்தோடே பிடுங்கிவிட்டுக் கடக்கப்போடு
  கொடுஞ்சுடலை தனிற்புதைத்து குறிறைக்கூற
அத்தோடே பிணிகொண்டு கிடப்பான்மூங்கை
  யத்தவிட்டே யுறங்கினவேர் புதைக்கக்கேளே.

(பொ-ரை) எதிரிகளை ஜெயிக்க விரும்பினுல் அவன்பேரை மரணம், நடை, தூக்கம் இவ்வேளைகளில் வேர்ச்சாப நீக்கி கொத்தாகப் பிடுங்கி கடகம்போட்டு சுடலையிற்புதைத்து சிறியைச்சொல்ல அவன் நோய்கொண்டு ஊமையைப்போலிருப்பான் அதைவிட்டு உறங்கின வேரைப் புதைக்ககேள், எ-று. 14

கேளப்பா வுறங்கினவேர் புதைக்கும்போது
  கெட்டதடா விருவிழியுங் குருடாச்சப்பா
மீளப்பா மாற்றுரையி மிலையிதற்கு
  விண்ணுளவு மண்ணுளவு மருந்துமில்லை
ஆளப்பாமாரண மூலத்தைத் தாக்க
  வவனுயிரை யதுதாக்க மாட்டாதோபார்
கோளப்பா வரனுலுந் தடுக்கப்போமோ
  குறைவில்பட்சிக் குறியதனைக் கூறுவேனே.

(பொ-ரை) உறங்கினவேர் புதைத்தால் இரண்டு கண்களும் குருடாம் இதற்கு மாற்றில்லை. ஆகாயம் பூமிகளில் இதற்கு மருந்தும் கிடையாது மாரண மூலத்தைச்சொல்ல எவனுலும் தடுக்கமுடியாது. இப்படியே பட்சிகளின் வலிவாகும் எ-று. 15

அமரபட்சக் குறிப்பு.

கூறியதோ ரமரபட்சக் குறியைக்கேளு
  கொடியுண்ணும் புந்தியிலே வியாழமாந்தை
மீறியதோர் வெள்ளியிலே வல்லூறுண்ணும்
  வெறுங்கோழி ஞாயிறுடன் செவ்வாயுண்ணும்
மாறியதோர் சனியுடனே சோமவாரம்
  மயிலுண்ணும் மச்சமுனி வாக்கியத்தை
நேறியதோர் முன்பாகஞ் செய்யக்கேளு
  செப்புவோம் பச்சிலையைத் தேர்ந்துக்கொள்ளே.

(பொ-ரை) அமரபட்சத்தில் புதன் கிழமையில் காகம் உண்ணும் வியாழக்கிழமையில் ஆந்தையுண்ணும், வெள்ளிக்கிழமையில்வல்லூறு உண்ணும், ஞாயிறு, செவ்வாய்க்கிழமையில் கோழி உண்ணும் சனிக் கிழமை திங்கட்கிழமைகளில் மயில் உண்ணும் ஆயினும் இவைகளின் மூலிகைகளைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளுங்கள் எ-று. 16

கொள்ளவே தைவேளை மயிலுக்காகும்
 கோழிக்குத் தான்குப்பை மேனியாகும்
விள்ளுநாய்க் கடுகெருக்கு வல்லூறுக்காம்
 வெருளாந்தை காரையெனு மவுரிக்காகம்
துள்ளிடிலென் முன்போல காரியங்கள்
 சூக்ஷமாய் செய்துக்கொண்டு தொழிலைப்பாரு
கள்ளமே யில்லையடா முனிநூறன்னிற்
 கண்டுபார் பஞ்சபட்சி முறையைத்தானே.

(பொ-ரை) மயிலுக்கு தைவேளையும் கோழிக்கு குப்பை மேனியும், வல்லூறு நாய்க்கடுகும், எருக்கும், ஆந்தைக்கு காரையும் காகத்திற்கு அவுரியும் மூலிகைகளாம், இவைகளை முன்போல் செய்து கொள்வாய் எ-று. 17

முறையோடே நாற்கோண மூட்டும்போது
 முடியடா சிகாரத்தை தலைகீழாக
அறையடா விறைகோண மடுக்கும்போது
 யதனுடனே நகாரத்தை நாட்டிப்பாரு
உறையோட முன்சொன்ன வகையையோத
 வுள்ளபடி பின்சொன்ன வயணம்பாரு
துறையோடே வெளியிட்டுச் சொல்லக்கேளு
 சுகமதுவே நசிமசியென் றுரைக்கலாமே.

(பொ-ரை) கிரமத்துடனே நாற்கோணம் போடும்போது சிகார பீஜத்தை முதல்தொட்டு தலைகீழாகப்போட்டு புத்துடன் நகாரத்தையும் போட்டுப்பார், பிறகு முன்னே சொன்னவிதத்தை உருப்போடச் சொல்லுவதாகும் எ-று. 18

அஷ்டகாமப் பலகை.

<table>
<tr>
<td>ஈசான்யம்
வெள்ளை
வெள்ளி
பூராடம்
பூரதோஷம்
நன்மை</td>
<td>இந்திரன்
சிவப்பு
சுக்கிரவாரம்
உத்திர நட்சத்திரம்
அஷ்டமி திதி
மரணம்</td>
<td>அக்கினி
சிவப்பு
சனி
இரேவதி
அஷ்டமி
மரணம்</td>
</tr>
<tr>
<td>குபேரன்
பொன்மை
வியாழம்
சோதி
சதுர்த்தசி
நாசம்</td>
<td>



</td>
<td>இயமன்
கறுப்பு
ஆதிவாரம்
பூசம்
துவாதசி
அரசு</td>
</tr>
<tr>
<td>வாயு
கருமை
புதன்
புனர்ப்பூசம்
ஆயிலியம்
பஞ்சமி
தூக்கம்</td>
<td>வருணன்
பசுமை
மங்களவாரம்
விசாகம்
அமரபட்சத்தட்டமி
நடை</td>
<td>நிருதி
கருப்பு
திங்கள்
சித்திரைமகம்
ஆயிலியம்
பூரணை
உண்டி</td>
</tr>
</table>

ரேதிரிஷி 300-லிருந் தெடுத்தியது.

ஆதியாய்நின்ற பராபரத்தைப்போற்றி
அகண்டமறைத் தெக்ஷணாமூர்த்தி பாதம்போற்றி
சோதியாய் பதினெட்டுச் சித்தர்பாதம்
தொழுதேத்தி யமுதபக்ஷி யைந்தச்சொல்ல
வாதியாம் வயித்தியனு மாந்திரீகன்
மகத்தான சோதிரிஷி மறையிலேற்றோர்
காதிலே கேட்கவட்ட கருமமாடும்
கணபதியின் பதம்போற்றிக் கருத்தைச்சொல்வேண்.

(பொ-ரை) தலைமையாயிருந்த பராபரம், தட்சிணாமூர்த்தி பதி னெண்சித்தர், இவர்களுடைய பாதங்களை துதித்து பஞ்ச பட்சியைச் சொல்ல கணபதியின் பாதங்களையும் துதிசெய்வேன் எ-று. 19

சொல்லுவேனிந்நூலை முந்நூற்றுள்ளே
சொல்லாத சித்தெல்லாஞ் சொல்லிவிட்டேன்
வெல்லுவாய் சித்தெட்டுக் காதில்சொன்னேன்
மேலான தாம்பட்சி நிலையைக்கேளே
அல்லுவா முதலெழுத்தோ வீரைந்தப்பா
அதுவரையி லஞ்செழுத் ததின்மேற்கேளு
விள்ளுவாய்பதினெட்டா மெழுத்துக்கெல்லாம்
விடுஞ்சாப நீக்கிடவும் விள்ளுந்தானே.

(பொ-ரை) இந்நூல் முந்நூறுக்குள் இனியில்லாச் சித்துக்களைச் சொல்லிவிட்டேன், அஷ்ட சித்துக்களுக்கு ஆதியைச்சொன்னேன், இனி பட்சி நிலையைக் கேட்பாயாக. முதலெழுத்து பத்து அதுவரைக் கும் அஞ்செழுத்தாகும் அதின்மேல் பதினெட்டாவது எழுத்துகளுக் கெல்லாம் சாயநீக்கல் கஷ்டமாய் விளங்கும் எ-று. 20

தானென்பார் பட்சியெல்லா மறிவோமென்பார்
சத்தியமா யட்டசித்துஞ் சார்ந்தோமென்பார்
ஊனென்றதாய்பட்சி யுண்மையெல்லாம்
ஓரெழுத்திற்கண்டறிந்தோ முறுதியென்பார்
வானென்றதத்துவத்தி லாய்ந்தோமென்பார்
வழிதெரியாமூதேவி சண்டாளர்தாம்
கோமென்ற வாசனைக் குணமாய்ப்போற்றி
குறினட்டாற்பலியாது குறிகொள்ளீரே.

(பொ-ரை) சிலர் தானென்பார்கள் பட்சிகளை யெல்லாம் அறி வோமென்பார்கள் அஷ்ட சித்துக்களும் ஆடுவோ மென்பார், பட்சி யின் உண்மை நிலைகளையெல்லாம் ஒரு எழுத்தில் கண்டறிந்தோ மென்பார்கள், தத்துவத்தில் ஆராய்ந்தோ மென்பார்கள், அவர்க ளெல்லாம் வழிதெரியாத மூதேவி சண்டாளர்களாவார்கள் ஆகையால் குருவை போற்றிப் பார்க்காவிட்டால் எவையும் பலிதமாகா, எ-று.

பக்ஷி சாபத்தை நீக்கினவர்

நேரிசை வெண்பா.

மூலத்துதித்து முளைத்ததொரு மூதண்டம்
காலத்தைக்கண்ட தறியீரோ—ஆலத்தை
உண்டானறிய வுளராமதி நிறைந்து
கண்டாரிருணீக்குங் காண்

(பொ-ரை.) மூலத்தில் தோன்றி முளைத்ததான ஒரு மூதண்டம் காலத்தைக் கண்டதை அறியமாட்டீரோ, விஷத்தை உண்டவனை யறியவிருப்பவர் புத்திநிறைந்து இருளை நீக்கிக் கொள்வார்கள், எ-று.

வல்லூற்கு மாந்தைக்கும் வாம்சத்துக்கும்பழியே
சொல்லாத கோழிக்குந் தோகைக்கு—தொல்லாதிப்
பேடையெழுத்தேசாபம் பேர்த்துவிடு மூலிகைக்கும்
வாடையெழுத்தன்றோ வகை.

(பொ-ரை.) வல்லூறுக்கும், ஆந்தைக்கும், காகத்துக்கும், கோழிக்கும், மயிலுக்கும், பேடை எழுத்தே சாபமாற்றும் மூலிகைக்கும் வாடை எழுத்தேயாமென்று உணரக்கடவார், எ-று. 23

காகத்தெழுத்தாற் கடிதாந்தையைக்கட்டி
வாகுற்றகோழி வழிமறித்துப்—பாகுற்ற
வல்லூறைத்தொட்டு வருமயிலைப் பூசிப்பார்
எல்லோருமீடேறு வார்

(பொ-ரை.) காகத்தினுடைய எழுத்தினால் சீக்கிரமாக ஆந்தையைக்கட்டி வலம்பெற்ற கோழியை வழிமறித்து வல்லூறைத் தொட்டு வருகின்ற மயிலைப் பூசைசெய்வார்கள் இதனால் எல்லோரும் பிழைப்பார்கள், எ-று. 24

உலகவாழ்த்து.

கண்டாரேமாந்தரெல்லாங் காசினியிலெந் தெழுத்தும்
வெண்டாமரையாள் விளக்குஞ்சீர்—பண்டாகப்
பூதலத்தினாயுளையும் போதகத்தின் மாமறையும்
மாதவத்தோர்வாய்வழியே வந்து.

(பொ-ரை.) பூர்வத்தில் பூமியினுள்ளாருடைய ஆயுதங்களையும், வேதப் பொருளையும், மாதவத்தினர்களுடைய வாயின் வழியாக ஐந்தெழுத்தையும் சரஸ்வதி தேவியின் திருவருளையும் முன்னிட்டு மனிதர்களெல்லாம் உணர்ந்து கொண்டார்கள், எ-று. 25

பத்தாம் அதிகாரம்

முற்றிற்று.

அகஸ்தியர் பஞ்சபக்ஷி சாஸ்திரம்

முற்றிற்று.

அகஸ்தியமாமுனிவர் திருவடிகளே சரணம்

ஒன்பதாவது செய்யுள் தொகை	133	ஆக செய்யுள் தொகை	-158
பத்தாவது செய்யுள் தொகை	25		
ஒன்பதாவது சக்கரத்தொகை	58	ஆக சக்கரத்தொகை	- 59
பத்தாவது சக்கரத்தொகை	1		

ஆண்பெண் ரேகைசாஸ்திரம்	0	8	சோதிட சூத்திர விளக்க வினாவிடை	0	6
அஸ்தரேகைசாஸ்திரம்	2	0	நந்திவாக்கியம் 1-ம் பாகம்	1	8
இராமதேவர்ரேகைசாஸ்திரம்	1	0	பஞ்சபக்ஷி ரத்தினம்	0	12
ஸ்திரீபுருஷ லக்ஷணகுறி	0	12	சோதிடமுகூர்த்தவிதா	0	12
சாமுத்திரிகாலக்ஷணம்	0	12	சோதிடசில்லரைக்கோர்வை	2	0
அனுபோகஜாதகரகசியம்	0	12	சிற்பசாஸ்திர களஞ்சியம்	2	0
அனுபோகபிரசினை ஆருடம்	0	8	சிற்பநூல்பொக்கிஷம்	1	0
அஷ்டதிக்கு ஆருடம் 5 சேர்ந்தது	0	12	அஸ்தரேகைசாஸ்திரம் 200-படங்களுடன்	2	0
ஆருடசேகரம் 12-சேர்ந்தது	0	12	சப்தரிஷிவாக்கியம் 5500 பாடல் கலிகா பைண்டு	3	8
சோதிட பிரஞ்ஞான தீபி	3	0	மேற்படி 1000-பாடல்	0	12
குமாரசாமியம் திக் கடிதம்	1	8	ஜாதகநுட்பநூல்	0	8
கந்தர் நாடி	0	8	பாக்கிட்சோதிடம்	1	4
சுகர் நாடி	1	4	அனுபோக ஆருடசிந்தாமணி	0	8
ஈஸ்வர நாடி	1	8	கணேச ஆருடதீபிகை	0	12
சோதிடசந்திரநாடி	0	12	சோதிட பாலசிக்ஷை	0	8
கணிதமுருகசேகரம்	1	0			
ஓரா சாஸ்திரம்	1	0			

சி. வே மீனாக்ஷிசுந்தரம் அண்டு கோ.,
34, ஆண்டியப்ப நாய்க்கன் தெருவு, சூளை மதராஸ்.

உ

குருவே துணை.

ஞான சர நூல்.

இஃது
உமையவளுக்குச் சங்கரனார் திருவுளமகிழ்ந்து
அருளிச்செய்தது

காப்பு.

நேரிசை வெண்பா.

வாழ்த்துவாமுள்ளம் வருவிப்பா னெஞ்சமின்பின்
சூழ்த்துவாமேன் மேற்றுதிசெய்வாங்—தாழ்த்த
பரநூலைமுற்றுமறப் பாலித்தருள்கூட்டுஞ்
சரநூலை யோதமுன்னோன் றருள்.

நாமகள் துதி.

உமைமாதுக்கீச னுரைத்த சரநூலில்
அமையாப் பொருளும்மையு மெமையாளும்
புவிமடந்தைபூமடந்தை போதமெஞ்ஞானக்
கவிமடந்தை யிக்கலைக்கோர் காப்பு.

அவையடக்கம் வெண்பா.

செய்யமனந்துணிந்து சீர்முன்னோர் சொற்சரநூ
லையமறவோத வருள்புரியைங்—கையரென்றென்
முன்னிற்பாரென்று மொழிந்தேன்பொற் கற்றுணர்ந்தோர்
மன்னிப்பா·ரென்றுமனு.

இந்நூற்பயன்.

ஆசிரிய விருத்தம்.

சந்திரபானிலக்கணமும் கோளுநாளுந்
தயங்கியபக்கங்கரணமி யோகம்வாரம்
வந்துசொல்லுஞ் சோதிடத்தை யறியதார்கண்
மனநினைவாயறியும்வகை யுளதோவென்ன

விந்தவுடனுயிர்நிலையை யறியாதாருக்
கியாமறிய வியம்பும்வகை யாதோவென்னிற்
பைந்தொடியேயாஞ்சொல்லுஞ் * சரநூற்றன்னைப்
பரிந்துநீபாரென்று பரமன்சொல்வான்.

(இ-ள்.) சந்திரன் சூரியன் கோள் நாள் பக்ஷம் கரணம் யோகம் வாரம் இவை முதலாகச் சொல்லப்பட்ட சோதிட விலக்கணத்தையறியாதவர்கள் தத்த மனநினைவினாலே யறிந்துகொள்ளு மார்க்கம் உள்ளதோ உண்டாயி னருளிச்செய்ய வேண்டுமென்று உமையவள் கேட்க சங்கரனார் (சொல்லுகிறார்) அழகிய வளையல்கள் பூண்ட கைகளையுடைய பெண்ணே யான்சொல்லுஞ் சரநூலாகிய விந்தசாஸ்திரத்தைப் பரிவுடன் பார்ப்பாயாக (பார்க்கில் நன்றுணர்வையென்று) சொல்லுகிறார், எ-று. 1

சொல்லாரு நெடுங்கயிற்றின் வருணமான சூஸ்திரனார் துவக்கெனுமா சீர்மந்தன்னி, நல்லாருமூக்கணங் கயிறுகோத்து நலந்தீங்காய் வருகின்ற நஞ்சுட்கொண்டு, பொல்லாத காலப்பாம் புண்டுமிழ்ந்து பூதலத்தில் பிறந்திருந்து போவாரேனு, மெல்லாருஞ் சரநூரன்னை யிகழாதார் சுரர்மூங்க ரிகழ்வோர்தாமே.

(இ-ள்.) சொல்லப்பட்ட நாற்புரிகூடிய நீண்ட கயிற்றைப்போல் பரம்பரையாய் விர்த்தியாகி வராநின்ற பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராதி வருணாச்சிரமம் பெற்ற இந்த மானிட தேகத்தில் இச்சரம் நாசிகையின் வழியாய் நின்று எருதுக்கு ஒரு மூக்கணாங்கயிறிருந்து ஆட்டுவிப்பதுபோல் நன்மை தீமையென்னு நஞ்சினை யூட்டிவிக்கும் அப்படிப்பட்ட நஞ்சினை யூட்டிக்கொண்டு கொடிய காலனென்னும் பாம்பானது உண்ணவு முமிழவுந்தான் உட்பட்டு இருவினைக் கிசைந்தவராய் பிறந்து மிறந்து போவார்கள்; ஆயினும் நான் சொல்லிவருஞ் சரநூலை இகழாமல் குருமுகாந்திரத்தி லறிந்து அனுபவித்து அந்நெறியி னிற்பவர்கள் யாவரேலும் ஒருங்கே தேவராவார்கள் அப்படி யறிய மாட்டாதவர்கள் ஊமைகளுக்குச் சரியாவார்கள், எ-று. 2

சரம்பார்க்க ஆசனவிதி கூறுகின்றார்.

மூங்கிற்பாய் மிடிகல்லு நோய்மண்டுக்க முறிபலகை நன்மையிலைமுடைந்தபுல்லு, நீங்கிவிடுங்கீர்த்திதழை மனம்நடுக்க நிகரில்கலைத்

* சரம் என்பது காற்று மனம் சிவன் சுவாசம் முத்த பிராணன் ஆவி உயிர் உயிர்ப்பு இவை முதலாகச் சொல்லப்பட்டவைதான் என்றறிக.

தோல்ஞானமிறைபுலித்தோ,லோங்கியசெல்வம்வீடுமுன்குகைப்புலொ ளிர்தூசு நன்மையுயர் படர்தானென்றுங், தூங்கிய தூக்கம்போக்கு நன்மையாகத் துலங்கியவா தனத்திருந்து தோகைசெல்வாம்.

(இ-ள்.) மூங்கிற்றடுக்கு ஆசனம்வறுமை கல்வியாதி, மண் ஆதன் னமில்லாமல் வெறுமணலில் உட்கார்ந்துக்கொண்டால் துக்கம் உடை ந்தஅல்லது அறுப்பட்டபலகை மணை நன்மையில்லை கோரைப்பாயல் கள் முதலிய புற்பாயல்கள் கீர்த்திநாசம் பச்சிலைதழை மனநடுக்கம் மான்தோல் ஞானம் புலித்தோல்செல்வம் தர்ப்பாசனம் மோக்ஷம் வெ ள்ளைவஸ்திரம் தீமையில்லை சித்திராசனம்அல்லதுஇரத்தினக்கம்பளம் நன்மை இவைகளில் நன்மையாக விளங்கும்படியான ஆசனத்திலிரு ந்து சரம்பார்க்கவேண்டும் மற்றுஞ்சொல்லுகிறேன்கேள் மயில்போலு மழகியபெண்ணே எ-று. 3

சரம்பார்க்க மார்க்கம் கூறுகின்றார்.

சொல்லியவா தனங்கள்பல வவற்றுணன்றிற் றுய்யபங்க யாதன மாயிருந்துதோன்று, மல்லலறுத்தேகமண மாக்கியொட்டி யாணபந்த பிராணுயா மங்கள்பண்ணி, யெல்லையிலுந்தியின்கீழா மெழுத்தைப்பற் றிஎழுத்தீபராயிரநாடியிலீரைந்து, நல்லனவா யதின்மூன்று நாடியோ டுநலந்தரும்பே ரவ்வெழுத்தை நவிலப்பாரே

(இ-ள்) முன்கூறப்பட்ட வாதனங்கள் பலவுண்டு அவைகளில் தீங்கில்லாத வோராதனத்திற் பதுமாதன மென்னப்பட்ட அங்கமா யிருந்து பார்க்கும்போது மனதுக்குமிகவும் நினைவினால் அல்லல்வரும் அப்படிவரும் அல்லல்களைநீக்கி வேறுநினைவில்லாமல் ஒரே மனமாக்கி ஒட்டியாண பந்தமென்று சொல்லும் பிராணுயாமஞ்செய்து அதன் மேல் பார்க்கில் எல்லையில்லாத திருவருளுக்கிடமாகிய உந்தியின் கீழு ருக்கு மெழுத்தைத்தொடங்கி எழுபத்தீராயிரம் நாடிகள் இந்தத் தேக த்திலுண்டானவை தெரியும், அந்நாடிகளுள் பத்து நாடிகள் நல்லன வாம். அப்பத்து நாடிகளுள்ளும்மூன்றுநாடி நல்லன அம்மூன்றின்வழி யாய்த்தான் சரம் எளிதிற்காணவோடும் இவையறியப் பெரிதாகிய நன்கினையளிக்குமவ்வெழுத்தைப்பார் மான்போலுங்கண்களையுடைய பெண்ணே எ-று. அன்றியும் இதன் விவரத்துக்கு மற்றும் வருவன வற்றுள் 35-வது கவியைப்பார்க்க. 4

நவ்விவிழியாயிதய கமலந்தன்னில் நன்றுகவசவையுயிர்நடக்கும் போதுஞ், செவ்வியுடன் மீளும்போ திருபத்தோரா யிரத்தறுநூறை ச்செபிக்கி லொருநாளாகு, மவ்வியமூலாதாரஞ் சுவாதிட்டான மணி பூரம் நாகதம் விசுத்தியாக்னே, பவ்வமற யாஞ்சொல்லுஞ் சரநூறன் னைப் பார்ப்பவரே பராபரத்தின் பயன்பார்ப்பாரே.

(இ-ள்.) மான்போலும் விழிகளையுடைய பெண்ணே இருதயகம லத்தில் வழியூடுருவிக்கொண்டு யாதொரு தீங்குமில்லாமல் அசவை யுயிரென்னப்பட்ட இந்தச்சரம் நாசிகையின் வழியாப் போகும்போ தும் 4-அங்குலங்கள்போக மற்றவை செவ்வையாய்த் திரும்பிவரும் போதும் கணித்துப்பார்க்கில் இருபத்தோராயிரத் தறுநூறுதரம் நடக் கும் அது 60-நாழிகைசேர்ந்த ஒருநாளாகும் அப்பரிசெல்லாம் மூலா தாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை என்றுசொல்லப்பட்ட பரநிலையின் பரிசுதான் அங்கிருந்து வுண்டாயி னவெனுங்கருத்து இதைக்காணும் வழியாதெனில் யான்சொல்லுஞ் சரநூலை மயக்கமறப் பார்ப்பதுதான் அப்படிப்பார்ப்பவர் பரமாகவும் அபரமாகவும்விளங்குகின்ற ஒருவஸ்துவினுலுண்டாகும் பிரயோசனத் தையறிந்துகொள்வார். எ-று. 5

சந்திரசூரியர் சுழிமுனை இலக்கணமும் யாத்திரை பலனும் கூறுகின்றார்.

பார்க்கிலிடை யிடமதுவே திங்களாகும் பகலவனும் பின்கலையே வலமதாகும், மேற்கவுரை சுழிமுனைதா னடுவாமங்கி யிடையான சந் திரனே யமுதமாகுந், தீர்க்கமுடன்பொருள்விளக்குங் கரியவண்ணந் திரராசியாமவனே செப்புங்காலை, வேற்றடங்கண் மடமாதே விரும் பிக்கேளாய் விரிவாக விவையனைத்தும் விளங்கச்சொல்வாம்.

(இ-ள்) ஆராய்ந்துபார்க்கில் இடைகலை யென்பதுவே யிடதுபக் கம் நாசியில்வருஞ் சுவாசம், அதுவே சந்திரகலை யெனப்படும். பின் கலையென்பதுவே வலதுபக்கம் நாசியில்வருஞ் சுவாசம், சூரியகலை யெனப்படும். யாவருக்கும் ஒக்க சொல்லுங் காலத்தில் சுழிமுனை யென்பது நடுவாகும், அக்கினியெனப்படும். பின்னும் அந்தச் சந்தி ரனைச் சொல்லுமிடத்தில் அமுதம் தீர்க்கமாக எப்பொருள்களையும்

உண்டாக்குவன் நிறங்கறுத்தவன் ராசியில் ஸ்திரராசி வேல்போலும் கண்ணிணையுடைய பெண்ணே மற்றுமுண்டாகிய வனைத்தும் பரிஷ்காரமாகச் சொல்லவதனை நீவிருப்பமுற்றுக் கேட்பாயாக. எ-று. அன்றியும் அச்சுழிமுனை இரண்டு நாசிகையிலும் பரவியோடும் அதற்குப் பூரணமென்றும் பெயர். 6

இதுவுமது.

சொல்லுங்காற் கதிரவனுஞ் சகவியாபி சுத்தநிறம் வெண்மைசர ராசியாகும், கொல்லுமெலாக் கருமங்கள் கொடியவன்னி கூறுங்கானிறஞ்சிவப்பா முபயராசி, நல்லவிடை தெரிந்துணர்கிற் றிங்கள்பெண்ணும் நலம்பயில்பின்கலைகதிரோன்புருஷனுகுஞ்,செல்லுமிருபதின்காத வழிக்கப்பாலாந் திசைக்கிடமாய்ச் செல்வலமூர் சேரக்கேளே.

(இ-ள்.) சூரியனுடைய குணக்குறிகளைச்சொல்லுமிடத்தில் அந்தச்சூரியன் உலகத்தில் வியாபகமுற்றவன் பரிசுத்தமான வெண்மை நிறத்தையுடையவன் ராசியில் சரராசி; சுழிமுனையென்னும் அக்கினியைச் சொல்லவென்றால் சகல கருமங்களையு மழிக்கும் பொல்லாதுநிறம் அக்கினிச் சிவப்புராசியில் மேற்சொல்லியவிரண்டு ராசியுங்கூடியது இன்னமும் நன்றாய்த் தெரிந்து பார்க்கில் இடைகலை யென்று சொல்லப்பட்டசந்திரன்பெண்பால் பின்கலையென்று சொல்லப்பட்ட அந்தச்சூரியன் ஆண்பால் சுழிமுனை யென்னப்பட்ட அந்த உபயராசியானது அஃறிணைப்பால் அல்லது அலியாகும்; அன்றியும் இருபது காதவழிக்கு மேற்பட்ட தூலவான தேசத்துக்குப் போகும்போது சந்திரகலை யோடும்போது புறப்பட்டுச் சூரியகலை யோடும்போது அத்தேசத்தில்போய்ச் சேரவேண்டியது இன்னமுஞ்சொல்லுகிறேன் கேள். எ-று. 7

சந்திர னிலக்கணம் அதிலும் அச்சந்திரன்
நடக்கும்போது இன்னவை
செய்யலாமென்று
கூறுகிறார்.

கேட்கிலிடந்தூதாடை யணிபொன்பூணற் கிளர்க்குமணமடிமை கொளற் கிழ்நீர்காண்டால், வாழ்க்கைமனை யெடுத்தல்குடி புகுதல்விற்றன் மன்னவரைக் காணலுண்மை மருவல் சாந்தி, வேட்கை தெய்வப்

பதிட்டைசுரம் வெறுப்புதீர்த்தல் வித்தைபெறற் றணம்புதைத்தன் மிகவுமீத, ளுட்கமல மலர்முகத்தாய் நாகந்தீர்த்த னன்றேயா மிமை யெல்லா நயந்துபாரே.

(இ-ள்) சந்திரகலே இடது நாசிகையில் நடக்கும்போது எந்தெந் தக் காரியங்கள் செய்யலாமென்று வினவிக்கேட்கில் அந்த இடகலே யில் ஒருவரைத் தூதனுப்புதல், தூதுதானேபோகுதல், புதியவஸ்திர ந்தரித்தல் ஆபரணுதிகள் பூண்டுகொள்ளல் விவாகஞ்செய்துகொள்ளு தல் தாலிகட்டல் ஒருவனே அடிமையாகப் பெற்றுக்கொள்ளல்கிணறு முதலாகிய குளம் ஏரி வெட்டுதல் வாழும்படியான வீடுமனே வாங்கு தல் ஒருவீட்டிற்குக் குடிபோகுதல் ஒருவஸ்துவை விற்குதல் நூதன மாய் அரசரைக்காணல் தனக்கு ஒருபடி மேற்பட்டவராஞலுஞ் சரி தான் உண்மையாகிய வஸ்துவைச்சார்தல் சாந்திகழித்தல் இஷ்டதெ ய்வப் பிரதிஷ்டை செய்தல் சுரந்தீர்த்தல் வெறுப்புத்தீர்த்தல் ஒருவ னே சமாதானஞ் செய்தல் கல்வி கேட்டுக்கொள்ளுதல் தனந்தானிய முதலிய ஆஸ்திசேர்த்து வைத்தல் தியாகங்கொடுத்தல் பாவவிமோச னஞ் செய்தல் இவையெல்லாம் நன்மையாகும் மற்றக்காரியங்கள் மத் திமமென்றறிக அன்று மலர்ந்த தாமரைப் பூப்போலும் முகத்தினே யுடைய பெண்ணே எ-று. 8

இன்னமும் இதின் செயலறியவென்ருல் 48-வது கவியையும் 47-வது கவியையும் பார்க்கவும்.

சூரியலக்கணம் அதிலும் சூரியனடக்கும்போது இன்னவை செய்யலாமென்று கூறுகிருர்

பார்க்கில் வலத்துபதேசம்வித்தைசேவை படையோட்டால்பயிர் கெட்டுக் களவுசூது, பேர்க்கவொணு வழக்குரைத்தல் கரிபரிதேரூர் தல் இறங்குமெழுத் திடுதல்சங் கீதம்பாடல், வார்த்தைபகை பங்கங் கோள் பசாசுதீர்த்தல் மந்திரஞ்சாதித்தல்மாநந் துணவுறங்கற்,கோத்த புனலாடல்கொல் விடங்கடீர்த்தல் கொடும்பிணித்தம் பணயோகங்குறி க்குங்காலே

(இ-ள்.) வலதுநாசிகையில் சரமோடும்போது எவைசெய்யத்தக் கவையென்று விசாரித்துப் பார்க்கும்போது, குரு உபதேசம் பெரு தல் தாமொருவருக் குபதேசம்பண்ணல் வித்தை பாராயணஞ் செய் தல் வித்தையொருவருக்கோதல் ஒருவனேவணங்கல் எதிரியினுடைய

படைத்துரத்தல் பயிர் விளைத்தல் வியாபாரஞ்செய்தல் திருடல் சூதா டுதல் ஒருவனாலுந் தீர்த்தற்கரிதாகிய வழக்குப்பேசல் யானை குதிரை தேர் இவைகளிலேறி சவாரிபோதல் விளங்கி வரும்படியான எழுத் தெழுதல், சங்கீதம்பாடல். பேசத்தொடங்கல், பகைமை யுண் டாக்கல், ஒருவனை பங்கம்பண்ணல் கோள்சொல்லுதல், பிசாசு ஓட் டுதல், மந்திரசித்தை சாதிக்குதல், மருந்து சாப்பிடுதல், போசனம் புசித்தல், நித்திரைசெய்தல், ஸ்நானஞ்செய்தல், கொல்லுதற் கேதுவா கிய விஷயங்களை நிவர்த்திசெய்தல், கொடிய வியாதியைத்தீர்த்தல் தம் பனயோக சதானஞ்செய்தல், இவைகளையெல்லாங் குறித்தனுபவித் துப் பார்க்கில் நன்மையாகும். எ-று. மற்றுஞ் சூரியசந்திர ரிருவருக் கும் விபரம் 46-ங்கவியையும் 48-ங் கவியையும் பார்க்க 9

சுழிமுனை பூரண சூனியபலன்
கூறுகின்றார்.

காலிரண்டுமொத்தக்காற் சமாதிநன்றாங் கருதியதொன்றாகாது காணுமெனிற்காணு, சீலமிகுந்த தவமுடையாய் நன்மையில்லை தீய னவாங்கருமஞ் சேரக்கூடுஞ், சாலநிறை பூரணத்தில் வழக்குவாது தர் க்கம் போராங்கமன்னர் தம்மைக்காண்டன், மூலமருஞ்சூனியத்திநிறு த்தில் வெல்வர் முயல்வதெல்லாம் கயல்விழியாய் முயலலாமே.

(இ-ள்.) சுழிமுனையாயிரண்டு சரமும்ஒத் தோடுகையில் என்ன செய்யலாமென்றால் சமாதியோகஞ் செய்தல், கருவிகரணங்களோயச் சும்மா விருக்குதல், நன்மை நினைத்தகாரியம் ஒன்றேனுமாகாது அப் போது ஒருவன்வந்து இப்பொரு ளகப்படுமாவென்றால் அது அகப் படாது சீலம்பொருந்திய தவமுடையபெண்ணே இந்தச் சுழிமுனை நடக்கும்போது நன்மையே கிடையாது, கெட்ட காரியங்களெல்லாம் பலிக்கும், இது இங்கனம் நிற்க, சரமூக்கில் எந்தப்புழையில் ஓடுகின்ற தோ அந்தப்பக்கம்பூரணமென்றும் சரம்ஓடாதபக்கம்சூனியமென்றும் பேர் இப்படி குறைவில்லாத பூரண பக்கத்தில் நின்று வழக்கு பேசு கிறவர்களை, தர்க்கம் பண்ணுகிறவர்களை, சண்டை பண்ணுகிறவர்களை, ஒருவன் போய்க்காணுமரசனை, அல்லது தமக்கு மேற்பட்டவனை, இவ்வாறு கூறப்பட்டவர்களை இதனால் காணலாமென்று ஒருகாட்சி யும் இல்லாதபடி சரமோடாத பக்கமாகிய சூனிய பக்கத்தில் நிறுத்தி னால் பூரணபக்கத்தி லிருக்கிறவன் வெல்வான் அல்லாமலும் ஒருவன்

இப்படிப்பட்டவர்களை தனக்குச்சரமோடாத சூனியபக்கத்தில் நிறுத்தினல் அவன் பேச்சேமேலாய் வெல்வன் எவ்வெவற்றை எவ்வெவ்வாறு நாட்டமுற்றறிய வேண்டுமோ அவ்வவ்வாறே யறியலாம், சேல்மீன் போலுங் கண்களையுடைய பெண்ணே என்றவாறு. 10

பிரயாணம் போகும்போது சரம் இசைவு பிசகாயிருந்தால் அதற்கு உபசாந்தங் கூறுகின்ருர்

முயலுங்காற் பூரணத்திலிடத்தி லிரண்டடிபோமுன் வலமென்மூன்றடிபோ மொழியும் யாத்திரைக்கு, கயலடருங் கண்மடவாய் கருமமது முற்றுங்கருது வடக்குங் கிழக்குமிடத் தேபோகி லியலுமொருபகையுண்டாமீளமாட்டா ரிசைந்தவலந் தெற்குமேற்கேகவென்னிற்,புயலடரும் புனல்புகுந்து மரணமாவர் புணர்முலைக்கச்சிறுமிடையாய் போற்றிக்காணே.

(இ-ள்.) பின் 19-ங் கவியில் சொல்லியபடி மேற்றிசையும் தென்றிசையும் சந்திரன்றிசை வடக்கு கிழக்கும் சூனியன்றிசை இது இங்ஙனம் நிற்கச் சொல்லப்பட்ட யாத்திரைபோக நாடியவன் சந்திரனில் சந்திரன் திசையே போகவேண்டியது. சூரியனில் சூரியன்றிசையே போகவேண்டியது அல்லாமலும் முன் ஏழாங்கவியிற் சொல்லியபடி இருபதின்காத வழிக்கப்புறமான ஸ்தலங்களுக்கும் சந்திரனில் புறப்பட்டுச் சூரியனில் ஊர்போய்ச் சேரவேண்டியது அப்படியே சேரத் தருணபேதமாய்ச் சரமுமிசைவு பிசகாய் மாறியோடினல் அதற்குஉபசாந்தம்யாதெனில் சூரியகலையிற் போகவேண்டியதிக்கின் யாத்திரைக்குச் சந்திரகலையா யிருந்தால் அந்தச்சந்திரன் சுவாசத்தை ஏறவுள்ளேயிழுத்துப் பூரணமாக்கி இந்தக்காலையே இரண்டுதர முன்னிட்டு வைத்து பின்சுதாவாய் நடந்து வழியில் கொஞ்சதூரம் நிற்காமல் போகவேண்டியது. (இதுசாந்தி) சந்திரன் பலன் கெட்டுப்போகும் தீமையில்லை சந்திரகலையிற் போகவேண்டிய திசையின் யாத்திரைக்குச் சூரியகலையா யிருந்தால் சூரியன் சுவாசத்தை ஏற வுள்ளேயிழுத்து அக்காலையே மூன்றடி முன்னிடவைத்துப் பின்பு சுதாவாய் நடந்து வழியில் கொஞ்சதூரம் நிற்காமல் போகவேண்டியதுஇது அதற்குச்சாந்தி சூரியன் பலன்கெட்டுப்போகும் தீமையில்லை சேல்போலுங் கண்களை

யுடைய பெண்ணே போகிறகாரியஞ் செயமாகும் இப்படி யல்லாமல் வடக்கு கிழக்குத் திசையும் யாத்திரை சந்திரனடக்கும்போது போனுல் போகிறவிடத்தில் ஒருவனுக்கொருவன் விரோதப்பட்டுப் போவான்திரும்பமாட்டான் மேற்குத்திசையுந் தெற்குதிசையும் சூரியகலே பாயும்போது யாத்திரைபோனுல் ஜலத்தினுல் அல்லது மழையினுல் இறந்து போவார்கள். கச்சினுலிருகி நெருங்கிய ஸ்தனங்களேயும் இப்போது தானற்றுப்போவது போற்றேற்றுகின்ற இடையினேயமுடைய பெண்ணே விசுவாசித்துப்பார். எ று. 11

ஒருவனுக்கு நன்மைதீமை சொல்லும் மார்க்கம்கூறுகிறுர்.

காணவொருகருமத்தைக் குறித்துவந்தோன்கருதியமுன்னுமிடமுமேலுமிந்த,பேணுவலமுங்கீழும்பின்னும்வெய்யோன்பேசியசொல்லெழுத்திரட்டை சோமனுகு, மாணுமெழுத்தொற்றையேற் கதிரோனுகுமதிக்கு மவன்பூரணத்தில் வந்துகேட்கிற், பூணவுரைத்தனவெல்லா நன்றேயாகும் பொல்லாது சூனியத்திற் புகலுவோர்க்கே.

(இ-ள்.) தான் நுழையுங்காரியம் நன்றே, தீதோ, கண்டறிவோமென்று வந்தவன் முன் 10-ங் கவியிற் சொல்லியபடி சூரியகலே நடக்கும்போது அவனப்பூரண பக்கமாகவே யிருந்தானுகில் அவன்பொருந்தச்சொன்ன காரியங்களெல்லாம் அவனுக்குச் சித்திக்கும் அப்படியில்லாமல் வலதுபக்கத்தில் நின்றுலும் சரம்பார்க்கிறவன் மேலிருக்க வந்தவன் கீழிருந்துகேட்டாலும் நேர் நேரே பின்னிருந்து கேட்டாலும் அச்சூரியகலேக்குடைய பலிதமேசொல்க சந்திரகலே நடக்கும்போது அவனப்பூரண பக்கமாகவே யிருந்து வினவினுகில் அவன் சொன்ன காரியங்களெல்லாம் அவனுக்குப்பலிக்கும்அப்படியில்லாமல் இடது பக்கத்தில் நின்றுலும் நேர்நேரே முன்னே நின்றுலும் மேலிடத்திலிருந்தாலும் அச்சந்திரகலேக்குடைய குணமேசொல்கஇதுதவிர சரம் ஓடாத சூனியபக்கத்தில் நின்று கேட்டானுகில் அவன் கேட்ட காரியம் பொல்லாதாகும் பலிக்கமாட்டாதென்க அல்லாமலும் அவன் முதல் வாய்திறந்துசொன்ன வார்த்தையின் எழுத்தை யெண்ணிபார்த்து ஒற்றைப்பங்காகில் சூரியனுடைய குணஞ்சொல்க இரட்டையாகில் சந்திரன்குணஞ் சொல்க, மேல் கீழ் என்றது மெத்தை வீட்

டையும் கிணறுமுதலிய பள்ளக்குழிகளைக் குறித்ததென்றறிக இப்படியாக 5-6 வகையிற்சொல்லி யிருக்கிறதே இவையெல்லா மேககாலத்தி லொத்திருக்கவேண்டு மென்பதில்லை ஏதாவது ஒன்றைப் பார்த்துச் சொல்லலா மென்பது கருத்து மற்றும்வருவனவற்றுற் காண்க இன்னமும் விரித்துச்சொல்லுமளவில், சந்திரனுடைய திசையும் பக்கமும் அது சூனியமானுலுஞ் சரிதான் கிஞ்சித்து மத்திபம் சூரியனுடைய திசையும் பக்கமும் அது சூனியமானுலுஞ் சரிதான் திரணமாயினும் நன்மையுண்டேயல்லது வியர்த்தமாகாது இதற்குப் பிரமாணம் 6-ங் கவியிலும் 7-ங் கவியிலும் சந்திரனைத் திரராசியென்றும் சரராசியென்றுஞ் செப்பியிருப்பதனையறிக, இக்கவிகளில் உரி, பண்பு அல்லது அடைமொழிகளை சோரவிடாமல் பதவுரையாய்ச் சொல்லி வருவோமென்றுல் விரிவுரைக்கு இசைவுபட்டு வருவதரிது ஆயினும் மவ்வுரிகளை மாத்திரம் சேர்த்துக்கொண்டு வருவோமென்றுல் ஒரு ஸ்திரீயானவள் தன்புருஷனுக்கு அமளியிற் சம்போக காலத்தில் காலு கை படுதல் முதலிய கற்பு வமைதலறுதல் கூடாதென்று அங்குமவைகளை, இருக்க காண்பிக்க புகுவாள், புகுந்தால் அச்சதிபதிகள் கொண்டகருத்து ஒருமித்துத் தடையின்றி நிறைவேறுமோ ஏருது அதுபோலிங்கும் விகாரமில்லாமல் மாகவுமாஉறை புணர்வுறமாட்டாதலால் சமைய உச்சிதமாய் சேர்ப்படுத்தவும். நிராகறிக்கவுமாயிற்று, எ-று. 12

இதுவுமது.

அதினும்-முன் 10-ங் கவியிற் சொல்லிய பூரணசூனியங்களின் விகற்பங் கூறுகின்றுர்.

கேடென்றேன் பறிகொடுத்தோ னஞ்சுதின்றேன் இடையினிற் சாவென்றேன் கிளர்நோய் கொண்டோன், பாடொன்றுமில்லை சூனியத்தேபாகிற் பலித்துவிடும் பூரணத்திற் பகர்ந்த தெல்லாம், ஆடும்பையாவென்ன வல்குலாளே யடுத்தொருவன் வந்ததிசை சோமனுகி, நீடுஞ்சொல் லிரவியா நிற்குமாகி நினைந்தமொழி யாகாது நின்றுகேளே.

(இ-ள்) ஒருவன்வந்து நானின்னதனுல் கெட்டுப்போனே னென்றுலும் நானின்னதை பறிகொடுத்தே னென்றுலும் விஷங்கடித்தது அல்லது விஷமுண்டே னென்றுலும், இதோ படுக்கையிற்றுனே பிரா,

ணன் போகின்றது என்ருலும் அல்லது இவை முதலாகச் சொல்லப் பட்ட அபாயகுணகுறிகள் எவையாயினும் சரிதான் சரம் ஓடாத சூனியபக்கமாய் வந்து நின்ருனுகில் ஒருவருத்தமுமில்லை நிவர்த்தி யாகிபோதுமென்க அப்படி யல்லாமல் சரம் ஓடுகிற பக்கமாகிய பூரணபக்கத்தில் வந்துநின்று சொல்லுவானுகில், வந்தவன் எப்படிச் சொன்னுனே அப்படியே பலித்து போகும் பறிபோன பொருள் வராது நஞ்சுமீளாது படுக்கையி னேயாளி தேருன் அன்றியும் சூனி யத்தில் எவனுவதுவந்து எதையாவதுச் சொன்னுனுகில், அது ஒரு காலத்தில் அபதமான வார்த்தைகளானுலும் ஆகும், பூரணத்தில் சொன்னச் சொல் உண்மையா யிருக்கும் இதல்லாமலும் ஆடும் பையரா வென்ன, வல்குலையுடைய பெண்ணே, வந்தவனுடைய திசையும் 12-வது கவியிற் சொல்லியபடி எழுத்தையு மெண்ணிப் பார்க்கில், அவன் வந்த திசை சந்திரன் கூருகவும் முதற் சொன்னச் சொல் சூரியன் கூருகவுமிருந்தால் மேற்சொல்லிய காரியங்களுக்குக் கிஞ்சித்து மத்திபமாயினும் முழுமோசமல்ல, இன்னமுஞ் சொல்லு கிறேன் கேள், எ-று. 13

கர்ப்பக்குறி கூறுகின்ருர்.

கேட்டவனு ருயிர்தன்னி லேறிநிற்றற் கிளர்கையி லுயிருளவை பிடித்து நிற்றல், வாட்டமற வருமதலை யிடத்திற் பெண்ணும் வலமாகி னின்றுரைத்தன் மைந்தனுகு, மீட்டமில் சூனியத்துறைக்கிற் கேடே யாகு மிருஞ்சுழினே மேலுறைக்கி லலியேயாகு நாட்டமொழி சூனி யம் பூரணத்தேயாகில் நடுக்கமுடன் மகவுபிர்க்கக் கிடைக்குமன்றே.

(இ-ள்.) ஒருவன் கர்ப்பத்தைக் குறித்துக் கேட்குங் கர்லத்தில் வந்தவன் ஒரு சீவன்பேரி லேறிக்கொண் டிருந்தானுனும் உயி ருள்ள யாதொன்றைக் கையிற்பிடித்துகொண் டிருந்தானுனும் ஒரு சீவனைத்தொட்டு நின்ருனுனும் அவன் நின்றபக்கம் வலமாகில் அதிலும்பூரண மானுற்ருன் ஆண்பிள்ளை பிறக்குமென்க, இடமாகிப் பூரணமானுற்ருன் பெண்ணெனக, அப்படிப் பூரணபக்கமல்லாமல் சூனியபக்கமாயிருந்து, எதனைத்தொட்டு நின்ருலும் சும்மாவே நின் ருலும் வலமாகில் ஆண்தான், இடமாகில் பெண்தான் ஆனுல் பிறக் கிற பிள்ளை சாகும் அப்போது சரம் பார்க்கிறவனுக்கு சுழிமுனையா யிருந்தால் பிள்ளை ஆணுருவின தல்லாமலும் பெண்ணுருவின தல் லாமலும் அலியாகு மென்க. இப்படியாக வந்தவன் முன்வலத்தில்

நின்று அவன் வந்தகாரியத்தைச் சொல்லிக்கொண்டே பின்னிடத்தில் வந்து நிற்கில் தாய் வயிற்றி லிருக்கிற பிள்ளை வருத்தப்பட்டுப் பின் பிறக்குமென்க, எ-று. 14

கர்ப்பக்குறியும் போர்வெல்லுங்குறியுங் கூறுகின்றார்.

அன்றே அசைக்கிடைக் கின்றமைந்தனுஞ் சூனியத்திற் கேடாங் கெடாதிருவர் போருவது சூனியத்திலோது, வடிக்கின்ற மொழியின் முதற் சொன்னோன்றோர்பன் மருவிய பூரணத்தின் பின்பு சொன்னோன்றோற்பன், நடக்கின்ற சுழிமுனையில் வேட்டலர்கள் போந்தனட்பாகும் வலத்தியங்க நடப்போன் வெல்வான், இடத்தியங்கி லஞ்சடி போயெதிர்த்தோன் வெல்வனிருஞ் சுழியிநிற்கிலிட ரில்லைபாரே.

(இ-ள்.) இதற்குமுன் கவியில் சூனியத்திற்கேட்டபிள்ளை மரிக்குமென்றாலும் போர் வழக்கு வாதைக்குறித்து ஒருவன் வந்து இன்னவன் இன்னவன், எவன் வெல்வானென்றால், வந்தவன் சூனிய பக்ஷத்திருந்து சொன்னானாகில் முன் சொல்லப்பட்ட பெயரை யுடையவன் தோற்பன் அப்பொழுது சரம் பார்க்கிறவனுக்குச் சுழிமுனை நடந்தால் அவ்விருவரு மொருமித்துப் போவார்கள் இதல்லாமலும் சண்டை வந்து வழக்கு நேர்கிறவனுக்கு அப்போது சூரியகலையா யிருந்தால் வெல்வன், சந்திரனாயிருப்பவன் தோற்பன், சுழிமுனையாகில் ஒருமித்துப் போவார்கள் அப்படிச்சந்திரகலை நடக்கப் பெற்றவன் முன் 11-வது கவியில் சொல்லியபடி சரத்தை யுள்ளிழுத்து பூரணமாக்கி அச்சரம் நடக்கிற காலையே முன்னிட்டு ஐந்தடி போய்ப் பின்பு நேர்நடந்தால் வெல்வன், எ-று. 15

சந்திரன் ஸ்பரிசங் கூறுகின்றார்.

பார்க்குக்கா லிடமெனினும் வலமெனினு மொக்கும் பஞ்ச பூதத்தியக்கம் பகருங்காலே, சாற்றியதண் டுடன்சேரிற் பிரிதிவியாந் தப்பாமலப்பினுக்குத் தாழவோடு, மேற்றிசையை நோக்கியெழு மங்கிவாயு மெய்யுணர்ந்தோற் புறத்தோடு மேன்மைகுன்றா, நீர்த்திரையா நாற்றிசையுஞ் சிதரியோட னெடுவானெனன் றுரைத்திடு நீ நிலத்துளோர்க்கே.

(இ-ள்.) இடை, பின்கலை, சுழிமுனை என்று சொல்லப்பட்ட இம் மூன்று கலைகளையும் அவற்றின்பயன்க ளனுபவத்தையும் பரீக்ஷித்து பார்க்குங் காலத்தில் ஒத்துவரும் அந்தந்த நாடிகளுக்குள் பஞ்சபூதங்கள் நடப்பதுண்டு அவற்றைத் தேர்ந்தறிந்து அனுபவிப்பதே [காரிய]

தாகும். யாதெனில் மூக்கிலிருந்து வருகிற சரம் அம்மூக்குத் தண்டைச் சார்ந்துவந்தால் பிரிதிவின் கூறென்றறிக. அத்தண்டிற்கு நேராகிய மற்றொரு புறத்தைச் சார்ந்து வீசினால் வாயுவின் கூறென்றறிக. இப்படி நான்கு பக்கங்களுள் ஒருபக்கமல்லாமல் அந்நான்கு பக்கமும் கலந்து நடந்தால் அது ஆகாயத்தின் கூறென்றறிந்து உலகத்துள்ளவர்களுக்குச் சொல்வாய் எ-று. இப்பஞ்ச பூதிய மிடத்திற்கும் வலத்திற்கு மொன்றுதான். 16

சரத்தின் வடிவமும் நிறமும் அச்சரத்தின் ரசக்கியமும் கூறுகின்றார்.

நிலம்பொன்மையிரத நெடுங்கோணநான்கா நீளம்பன்னிருவிரலா நீர்தான்வெண்மை, இலகுபிறைவடிவுகண் டந்துவர்த்திருக்குமெட்டிரண்டுவிரலோடு மெரிதான் செம்மை, நலங்கொண்ட முக்கோணமழற்சிமேலாய் நாவிரண்டு விரலோடு நளிர்காளிலத், துலங்குபுலியறுகோண மொருபக்கத்திற் றுய்யனல் விரலோடுஞ் சொல்லுகாலே.

(இ ள்) பஞ்ச பூதியசரம் நடப்பதை இன்ன மெப்படிக்கண்டு தெளியலாமெனில், பிரிதிவு சரம்பொன்மை, அப்புச்சரம் வெண்மை தேயுச்சரம் செம்மை, வாயுசரம் கருமையாயிருக்கும், அப்போது கண்டத்தில் எவ்வித உணர்ச்சியாகுமெனில், பிரிதிவுக்கு கண்டந்தித்திக்கும், அப்புவிற்கு துவர்க்கும், தேயுவுக்கு உவர்க்கும் அல்லது அழற்சியாயிருக்கும், வாயுவுக்கு புளிக்கும், எவ்வடிவா யிருக்குமெனில், பிரிதிவு எண்கோணம், அப்பு எட்டுநாள் பிறைபோலிருக்கும், தேயு முக்கோணம், வாயு அறுகோணம், அன்றியும் அத்து ஓடுகிற நீட்சியைச் சொல்லுங்கால் பிரிதிவு பன்னிரண்டங்குலம், அப்பு 16-அங்குலம், தேயு 8-அங்குலம், வாயு 4 அங்குலம் என்றறிக இதல்லாமலும், இக்கவியில் இரதமென்று தனியே போட்டபடியினால் முதல் இரசமாகவே வைத்துக் கொள்ளலாயிற்று. உலகத்தவருக்குச் சொல்லுங்காலத்தில் இப்பேதங்களை யவர்களறிவது அரியதென்று ஒரு பூதியத்தில் நான்கு குறிசொல்ல இருக்கிறார். ஒன்றில்லாவிட்டாலும் மற்றொன்றிலாவது தெரியவேண்டியது எ-று. 17

இதுவும் அதுவுடன் அப்பூதிய நடக்கையில் செய் கருமங்களின் குணகுணங் கூறுகின்றார்.

சொல்லியவான்வடிவதுதான் வட்டமாகுந் துய்யதொரு விரனுசி யெல்லாஞ்சுற்று, மொல்லைநிறம் படிகங்கைப்பிரதம்வாயு மோடிவரும் பூதங்கட்குளதோசொல்க, மல்லநில நீக்குமிகு பயனுஞ்செந்தீ மத்திப மாம் பகர்காலும் வானுந்தீதாம், பல்வளைபாய்சரம்பார்ப்போன் றன் னைப்போற்றி பாகிலையென் றேதியிட்டுப் பணிந்துபாரே.

(இ-ள்) ஆகாயபூதியம் நடக்கும்போது நிறம் படிகம், இரசம கண்டங் கசக்கும், வடிவுவட்டம் நீட்சி ஓரங்குலம், இப்படியாக பூதி யங்களின் குணகுணங்களைச் சொல்லவெனில் பிரிதிவுக்கும் அப்புக் கும் உத்தமம், தேயு மத்திமம், வாயுவும் ஆகாசமும் தீதாம், வளையல் களைத் தரித்த கரத்தையுடைய பெண்ணே, சரம் பார்த்துக் குறி சொல்லுகிறவனுக்குத் தாம்பூல முதலானவைகள்கொடுத்து உபசா ராதிகள் செய்து பின்கேள் இங்ஙனம் நிற்க, முன் 7, 8-ங் கவியிற் சொல்லியபடி சூரிய சந்திரகலையிற் செய்யவேண்டிய கருமங்களும் இக்கவிவை யனுசரிக்க வேண்டியது. 48-49-ங் கவியைப் பார்க்க வேண்டியது. அதிலும் சரம்பார்க்கிறவன் தாம்பூலம் தரித்துக்கொள் கையில் வினவிக் கேட்கிறவனுக்குஞ் சொல்லுகிறவனுக்கும் நன்கு எ-று. 18

ஒருவன் பேரைக்குறித்து வினவில் அவனுக் குரியவைகளைக் கூறுகின்றார்,

பாராகுமுதுகுநீர் காலதாகும் பைந்தழல்மார் பவனங்கைப்படர் வான்சென்னி, பேராமல்வினவினபோ துதித்தபூதம், பேர்படைத்த விடங்களிலே பிழையில்லாம, லேராகும்பூரணமாம் பக்கந்தன்னி லேறிவெட்டுங் கோல்படுத விசைத்ததெல்லாங், கூராழிமால் வந்து விலக்கினலுங் குறையாலே வடுப்படுங்காண் குறிக்குங்காலே.

(இ-ள்) முன் 5-ங் கவியிற் சொல்லியபடி இருவரைச்சுட்டுக் காட்டாமலும் சூனிய பக்கத்திலிராமலும், பூரண பக்கமாக விருந்து சண்டைக்குப்போகிறவன் என்னுவானெனில் ஆயுதங்களினுல்காயம்

பட்டுவருவான் என்றுசொல்க அதிலும் அப்போது பிரிதிவு நடந் தால் முதுகில்படுமென்க அப்புவாகில் காலில் தேயு, மார்பு, வாயுகை, ஆகாயமாகில் தலையிற் படுமெனச்சொல்க விஷ்ணுதேவன் வந்து விலக் கினுலுந் தப்பித்துக் கொண்டு வரமாட்டா னென்க, எ-று. 19

இந்த விந்தப்பூதியத்துக்கு இந்திந்த ஆயுதமெடுத்துப் பொருகவெனவும் அதற்கிவ்விடத்தி னிற்கவெனவுங் கூறுகின்றுர்.

கால்மூலை தொடங்கி யழன்மூலையேறக் கயிறெனவே சீறிமதிகதி ரோனுக, கோல்மேற்குந் தெற்குமதிநிலமாக் கொள்க கொழுங்கதி ரோன்கிழக்கு வடக்காககொள்க, சேல்போலு நெடுங்கண்ணுய்புவிக் குக்கத்திசேர்ந்த சலம்வாளழற்குச் சிலைகாலுக்கு, மேற்றண்டாம் வானுக்கா யுதங்கல்லேந்தி விதித்தநிலத்திற் பொருதல் வெற்றியாமே.

(இ-ள்.) மேற்கூறியபடி சமர்செய்ய வேண்டில் வாயுமூலைதொட ங்கி யக்கினிமூலையளவாக ஒரு கயிறு பிடித்தாற்போல் சரியாய்பாவனை செய்து அதில் மேற்கையுந் தெற்கையுஞ் சந்திரன் கூறுகவும் வடக் கையுங் கிழக்கையுஞ் சூரியன் கூறுகவுங்கண்டு போற் செய்கிறவ னுக்கு அப்போது சூரியகலையியங்கில் தானசூரியன் றிசையிற்றுனே நின்று எதிரியைச் சந்திரன்றிசையில் நிறுத்திச் சமர்செய்யவேண்டி யது, அப்படிச்செய்கையில் சந்திரனுறைஞுஞ் சரி சூரியனுறைஞுஞ் சரி யெடுத்தெரியு மாயுதங்கள் எவையெனில் சேல் மீன்போலு நீண்ட கண்களையுடைய பெண்ணே! பிருதிவாகில் கத்தி அப்புவாகில் வாள் தேயுவாகில் வில், வாயுவாகில் தண்டு, ஆகாயமாகில் கல் இப்படியாக அந்த வந்த பூதியங்களுக்கு அந்த வந்த ஆயுதங்களேந்தி விதிப்படி அந்தந்த நிலத்திினின்று சண்டைசெய்தால் வெற்றியடைவன், எ-று.

நோய்க்குறி கூறுகின்றுர்.

ஆகியநோய் புருடருக்காய் புருடர்வலங்கேட்கி லாறுமென்க மாதருக்கு மாதறிந்து கேட்கில், சோகமிலிம்மை முறைதப்பிற் பொல் லாதென்க தொலையாது நாட்சென்று மீளுமென்க, தோகைநில நாட் செலுநீர் கடுகிமீளுஞ் சுடுதழனுண் மூன்றுதப்பிற் றுஞ்சப்பண்ணு, மெகிடுங்கா ளுளிரண்டின் மிகுந்தார்கொல்லு, மெழில்வான மன்று தப்பி விறக்கும்பின்னே.

(இ-ள்.) புருடன்கொண்ட பிணிக்காகப் புருடனேவந்து சரம் பார்க்கிறவனைக் கண்டு இந்நோய் லகுவாமாவென வினவிலு மந்நோய் தாவிளையாம், சரம்பார்க்கிறவனுக்கு வலதுபக்கத்தில் நின்று கேட்கிலும் நிவர்த்தியாகும் ஐயமில்லை ஸ்திரீகொண்ட நலிக்காக ஸ்திரீயே வந்து வினவினுலும் குணமாகும், வந்தவள் அவனுக்கு இடது பக்கத்தில்நின்று கேட்கிலும் மீளும் சமுசயமில்லை முன் பதின்மூன்றாங் கவியிற் சொல்லியபடி சூனியபக்கமாகவே யிருந்தாலுத்தமம் இபபடி யல்லாமல் ஆணுக்குப் பெண்வந்தாலும் பெண்ணுக்கு ஆண் வந்தாலும் அவ்வியாதி தீர்வது துல்லபம் அன்றியும் ஒருவன் வலது பக்கத்தினின்று குறிகேட்டுக்கொண்டே இடதுபக்கத்தில்வந்து நின்றாலும் ஒருத்தி யிடதுபக்கத்தில் நின்று குறிகேட்டுக் கொண்டே வலது பக்கத்தில் வந்து நின்றாலும் நோய்போவது கடினம் ஆயினும் மெல்லென நாட்சென்று சொஸ்தப்படுத்தும் அப்படியே சரியாய்வந்து கேழ்க்கில் அந்தநோய் நீங்குமென்க அதிலும் எப்போது தீருமெனில் அந்நேரம் பூதியம்பிருதிவாகில் கொஞ்சநாள் செல்லுமென்க, அப்புவாகில் விரைவிலென்க அக்கினியாகில் மூன்று நாட்களில் விமோசனமாகுமென்க மிகுந்தார் கொல்லும், வானமாகில் அன்றைக்கே நோய் பிரிந்து காணும் மிஞ்சில் மறுநாள் மரிக்குமென்க, எ-று. 21

இதில்தின் முன் கவியிற்சொல்லிய வியல்பும் அதன்மேற் கவிகளிற் செப்பிய பூதியங்களின் குணமும் முன் 9-வது கவியிற் கூறியபடி சரம்பார்க்கிறவன் ஓரிடத்துக்குப் போகவேண்டியது இத்தருணமென்றும் பேசவேண்டியது இத்தருண மென்றுங் கூறுகின்றார்.

இறக்குமுபயந் தனக்கைந்து நாளிலே கினக்காற்சாவில்லை இது
தான்மெய்யே, பிறக்குமொரு பூதலத்தி லைந்துபூதம்பிறிந் தோடுமது
குரவன்பேசக் கேட்டுச் சிறப்புடையபயன் றெறிவதல்லா நூலின்
செயலதனைற் றேவர்களுந் தெரியமாட்டார், திறக்குமதிக்கிருந்தழைத்
தால் வந்ததுகேட்டா னீள்வெயிலாச் செலசொல்க நினைத்துக்கேளே.

(இ-ள்.) இதற்கு முன் கவியிற்கூறிய பூதியங்களி னியற்கையாகிய குணங்களுக் குரியவை சொல்லக்கூடாது அதற்கு முன் 10-ங் கவியிற் சொல்லியபடி சுழிமுனை நடக்கில் ஆகுமென்பது ஆகாது ஆகாதென்பது ஆகும்போல இப்போதும் ஒருவன் நோயைக்குறித்

துக்கேட்கும்போது சுழிமுனை நடந்தால் அந்நோயாளி ஐந்து தினங்களுள் மரிக்கும் அப்படி மரிக்காமல் தப்பினுல் அவனுக்கினியொரு விபத்து வருமளவுஞ்சாகான் இதுமெய்மை அன்றியும் முன் 14-ங் கவியிற் சொல்லியவண்ணம் ஒருபக்கமோடுகிற சரத்தில் ஐந்துவகைப்பட்ட பூதியங்களுண்டு அப்பூதியம் ஒவ்வொன்றுக்குள் ஐந்துபிரிந்து நடப்பனவுண்டு அவை யெவையெனில் ஒரு பிருதிவுக்கு பிருதிவிற் பிருதிவு பிருதிவிலப்பு பிருதிவிற்றேயு பிருதிவில்வாயு பிருதிவில் ஆகாயம் இப்படி இவ்வைந்துக்கு ளைந்தாயோடும் இதனையும் மற்றிந் நூற்பயன் யாவையும் குருமுகாந்தரத்தி லறிந்து கொள்வதல்லால் தேவர்களே யானுலுந்தனியே சுருதியைக்கொண்டு குருவைத்தள்ளிச் சுயானுபவம் அல்லது சுபானுபவத்தால் இந்நூலைக்கொண்டே அறிவதுகூடாது அல்லாமலும் சரம் பார்க்கிறவனை ஒருவன் வந்தழைத்தால் அவன் சூரியகலையியங்கும்போதே போகவேண்டியது. பேசுகிறதானுலும் குறிசொல்லுகிறதானுலும் சூரியனியங்கும்போதே சொல்லவேண்டியது மற்றப்படி கூடாது மிஞ்சி நடக்கில் மத்திபமென்றறிக இன்னமுஞ் சொல்லுகிறேன் மனதுற்றுக்கேள் எ-று. 22

பூதிய சரங்களினியல்பு கூறுகின்றார்.

கேளிதனை நிலத்திற்கு நீரிற்குங்குணமாங் கெற்பமெனிலாணுது ங்கிளர்ந்தொருவன் வினவி, ளுளின்மிகு லாபங்கள் சாந்திபோக்கு நன்றுகுமங்கித னிலங்கம்வெல்லும், மாளமரிற் பொல்லாது கெற்பங் கேடாம் வாயுவெனிற் பெண்ணுகுமற்போர் தோற்கு, நீள்விசும்பிற் றனுவித்தை யோகந்தானு நீடுமிக கெற்பமெனி லலியாய்வீயும்.

(இ-ள்.) பெண்ணேகருத்துற்றுக்கேட்பாயாக முன் 16-ங்கவியுள் சொல்லிய பூதியசரங்களினியல்பு கூறுமிடத்தில், பிருதிவும் அப்பும் நன்மைகளையே தருவன் இதன்பின் 33-ங் கவியிற் சொல்லியபடி ஐந்து நாழிகைக்கு மிஞ்சு நடக்கையில் இவ்விரண்டு பூதியங்கள் அதிகமாக நடந்தால் லாபமுண்டு வேண்டில் 18-ங் கவியையும் பார்க்க இதிங்கனம் நிற்கமுன் 14-ங் கவியிற் சொல்லியபடி ஒருபிராணியைக் கைப்பற்றுமலும் அதின்பேரிலூர்ந்து நில்லாமலுந் தனியே வந்து சூன்னியத்தினில்லாமல் பூரணத்தில் நின்று கர்ப்பக்குறி கேட்டால் அப்போது சரம் பிரிதிவாவது அபபாவாவது நடந்தால் ஆண்பிள்ளை பிறக்குமென்க 6-வது கவியிற் சொல்லியபடி சாந்திபண்ணுதல்

போக்கு கழித்தல் செய்யவேண்டியபோது அங்ஙனஞ் சொல்லிய கலையில் இவ்விரண்டு பூதியங்களி லேதாவது நடக்கும்போது செய்தால் பலிக்கும் இதன்றித் தேயுபூதியம் நடக்கையில் போரங்கம் புரியில் வெல்லும் அப்போரில் வாளெடுத்தால் மத்திபமாம் அப்போது கெற்பத்தைக் கேட்டால் அது அழிந்துபோகும். வாயு நடக்கையிற் கெற்பம் பெண்ணுமென் கமற்போற் தோர்வியடையும் ஆகாயமாகில் விற்சமர் செயிக்கும் இப்போரி லக்கணஞ் செப்பிய 20-ங் கவியையும் 18-ங் கவியையும் 10-ங் கவியையும் பார்க்கவும் 9-ங் கவியிற்சொல்லிய யோகம்புரிய நன்மை ஆகாயசரம் நடக்கையில் கெற்பங் கேட்டால் அலியாய்ப் பிறக்கும் பிறந்து மிறக்கும் என்க, எ-று. 23

திதிவார நட்சத்திரக்கால சரபலன்முன் 4-ங் கவியிலும் 35-ங் கவியிலும் சொல்லியபடி பிராதகாலத்திற் சரம்பார்க்கவேண்டிய திதுவென்றுங் கூறுகின்றார்.

வீயாத பிரதமைமுதல் விளங்கும் பக்கம் விரவிவரு முப்பதினு மும்மூன்றாக, மாயாது வருஞ் சோமனிடமதாக வருகின்ற வருக்கனுக்கும் வலமதாகச் சாயாது புதன்வெள்ளி திங்கண்மூன்றுந் தப்பாது சந்திரனுஞ் சாற்றுங்காலே, தேயாது கதிர்செவ்வாய் சனி வியாழனுஞ் செங்கதிரோன் றினமென்று றேறுநீயே.

(இ-ள்.) முன் 4-ம் கவியிலும் பின் 35-ம் கவியிலும் சொல்லிய பிராதகாலத்தில் சரம்பார்க்கவேண்டிய கிரமத்தினும் விசேடமாய்ப் பார்க்கவேண்டிய தெதுவெனில் பொழுதுவிடிய 5-நாழிகை யிருக்கையில் எழுந்துமேல் 4-வதுகவியிற் சொல்லியபடி சரம் பார்க்கும்போது வளர்பிறை பிரதமைக்கும் துவிதிகைக்கும் திரிதிகைக்கும் சந்திரகலை யுதித்து நடக்கவேண்டியது இப்படி முன்னான்கு பன்னிரண்டும்போக தேய்பிறையில் பிரதமைக்குந் துவிதிகைக்குந் திரிதிகைக்குஞ் சூரிய கலை யுதித்து நடக்கவேண்டியது பொழுதுவிடிய 5-நாழிகை யிருக்கையி லுதித்தசரம் மற்ற வைந்துநாழிகையும் கலங்கா தேடவேண்டும் திதியோகவாரங்களி லெவை நிகழவேண்டியவெனில் ஞாயிறுக்குஞ் செவ்வாய்க்குஞ் சனிக்கும் வியாழத்திற்கும் சூரியகலை யுதித்தோடவேண்டியது திங்களுக்கும் புதனுக்கும் வெள்ளிக்குஞ் சந்திரனுதித்தோட வேண்டியது இப்படி யுதிக்குஞ்சரம் எந்தப்பூதியத்தி லுதிக்கவேண்டியதெனில் பின் 45-வது கவியைப் பார்க்கவேண்டியது இதில் பூதியங்கள் அதிகமாய்க் கதித்தோடில் பயன்

கள் என்னவையாமெனில் முன் 23-வது கவியிற் றெரியும் அன்றியும் விபரம் 33-வது கவியிற் காண்க, எ-று. 24

இதனுள் நக்ஷத்திரங்களுக்கு நடக்கவேண்டிய கால சரமும் இதன்மேற் கவியிற்கூறிய வாரங்களுக் குரியனவாகிய காலசரங்கள் சரிவரில் இடரில்லை பிழைக்கில் இன்னவின்ன நிகழுமென்றுங் கூறுகின்றார்.

தேறிடுநீ யொன்பதுநாள்பூரமாதி சிறந்தரோகணிசதய உத்திரட்டாதி, கூறிடுஞ்செங்கதிரோர் ளாகக் கொள்க கூறுனளடைய மதிக் கென்றுகொள்க, வீறிடுஞ்செங் கதிர்பிழைக்கி நோய்காரிக்கு மிடித்திடு மண்டலஞ் சேய்க்கு வெம்போச்சாவாய், பாறிடும்பொன் பிழைக்கின் மன்னர் கேடாம்புத்தி பதிக்கதிபன் கெடுமிந்துகிளைஞர் போக்கே.

(இ-ள்.) பெண்ணே திதிவாரமென்று இரண்டு வேறுபாடாய்க் கூறினேனென்று தியக்கம் வேண்டியதில்லை விபரம் மேற்கவிகளிற் றானே சொல்லி யிருப்பதைக் காண்க இவ்விரண்டினுடன் கீழ் வரும் நக்ஷத்திர பலனாகிய மூன்றினுள்ளும் ஏதேது கஷ்டமோ அதிலும் ஏதேது இஷ்டமோ தெரிந்து அதிலும் வீக்கந் தூக்கம் நோக்கிப் பார்ப்பதென்று காண்க கண்டுதேறியிரு அஃது நட்சத்திரங்களுக்கு நடக்க வேண்டிய காலசரமாம் ஏதெனில் பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, ஸ்வாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், உரோகணி, சதயம், உத்திரட்டாதி, இப் பன்னிரண்டிலுஞ் சூரிய நடக்க வேண்டுமெனக் கொள்க மற்றபதினைந்திலுஞ் சந்திரன் நடக்கவேண்டும் அல்லாமலும் மேற்கவியிற்கூறிய வாரங்களுக் குரியனவாகிய காலசரங்களில் ஞாயிறு தப்பில் வியாதி, சனி வறுமை செவ்வாய் பண்டைசாவு, வியாழம் தன் மன்னனுக்குக் கேடாம், புதன் அவ்வூரதிகாரிக்குக் கேடு, திங்கள் சுற்றத்தாருக்குக் கேடுவரும் தன் மன்னனென்பதும் அவ்வூரென்பதும், சரம்பார்ப்பவனுக்குக் குரியனவாம் வெள்ளியின் கவியிற்காண்க சனி, வறுமையுடன் தன் கையிலிருப்பதும் போகும் பொன் பிழைக்கில் மன்னர்கேடா மென்பதில் தன் தாதாவிற்கு வருத்தம் வரில் தனக்கு எப்படிப் பொருள்வரும் வராது பதிக்கதிபன் கெடுமென்பதில் அவ னிவனால் பறிகொடுக்கப் பட்டானெனவரும், எ-று. 25

இதன்மேற் கவியிற்கூறாத வெள்ளிபிழைக்கில் நிகழ்வன விவையெனவும் மற்றதன்மேற்கூறிய திதிபிழைக்கில் நிகழ்வன விவையெனவுங் கூறுகின்றார்

போக்கரிய புகர்பிழைக்கி லூர்விட்டேகல் பொருந்தியதோர் மெய்ந்நோதல் புணர்ந்தோர் சாத, லாக்கமதிலிடராமுற் பக்கந்தன்னி லருங்கலகமிரண்டாகி லர்த்தநாச, கிளைஞர்க்குறு நோயுண்டாங், தேக்கிய வைந்திற்றேச மலையுமாறிற் செகத்தரசர் கெடுமேழிற் சேருநோவே.

(இ-ள்.) வெள்ளிதப்பில் தான்வசிக்கும் பதியைவிட்டு ஒழிந்து போதலாக வேணும் அவ் வெல்லையை விட்டு மற்றோ ரெல்லையைப் போய் மிதிப்பதாக வேணும் வரவர ரேகநலிவுரும் தன்மனைவிக்குச் சாவுவரும் சாவென்பதில் சண்டை பிணக்கு நோய் முதலிய வருத்த மாதலையும் சதிபதிகளுக்குப் பொருத்தம் போதலையுங் காண்க நூலாசிரியர் புணர்ந்தோர் சாதலென்றும் சரமுடிவுவரைக்கும் வருத்தம் வருமென்றுந் துணிந்து கூறினமையால் நன்மையதேவாறுக அட்டமாசித்திமட்டும் பெருகவுண்டாகுமென்ற கருத்துக்கொண்டு இதன்மேற் கவியில் கூறியதுகாண்க. மற்றதனிற் சொல்லியபடி ஊருக்கு மன்னனுக்கும் அதிகாரிக்கும் வந்தாலும்வரும் இதன்றியில் வளர்பிறை காலத்தில் பிரதமைதப்பில் யாதேனுமிடர்வரும். துவிதிகை, கலகம் திரிதிகை, பொருட்சேதம். சதுர்த்தி, போக்குண்டாகும் சகலவித நஷ்டத்துக்குங் காண்க பஞ்சமி, பந்துகளுக்கு வியாதி, சஷ்டி, அத்தேசத்தாருக்கும் அரசனுக்கும் வருத்தம் சத்தமிநலி, அரசனுக்குந் தேசத்தாருக்குமேயுண்டு தனக்கில்லை யென் றேமாந்திருத்தல் கூடாவாகுந் தன்னாலே யவர்களுக்கு வருத்தம் வந்ததென்ற அவதூறான பொய்ச் சாப்பினாலாவது தான் வருத்தப்பட வருமென்ற விவரம் மேற்கவியிற் றானே செப்பியிருப்பதனைக் காண்க, எ-று. 26

திதிபிழைக்கில் நிகழ்வன விவையென்றும் சந்திரசூரிய ரியல்புங் கூறுகின்றார்.

நோவுடனே சாவுமாமெட் டாகின்மற்றை நுவலாத பக்கமுமிம் முறையேகொள்க, தாவில்வெங் கதிரவனின் மதியமுண்டாஞ் சந்திரனுள் வெங்கதிருந் தப்பாதுண்டா, மோவரிய விவர்களேபே யுணரும் போதி லுற்றசரங் குருமுகத்தா லுணர்ந்துகொள்க, தேவர்பிரானுரைத்தருள உமையாள்கேட்டச் செவ்வியிதன் முறைமைதனைத் தெளிந்து தேறே.

(இ-ள்.) அஷ்டமிபிழைக்கில் நோவுடன் சாவும் வளர்பிறை யிங்ஙனமிருக்கத் தேய்பிறைக்கு மிம்முறையே கொள்வது இதல்லாமலும் சூரியனுக்குள் சந்திரனும் சந்திரனுக்குள் சூரியனு மொன்றுக்கு ளொன்று கலந்து தோன்றுவதுமுண்டாம் உமையவளே தன்சுய வல்லமையினால் தெரிந்துகொள்ளத் தக்க சிறப்பினதாகில் இந்நூலை யார்தான் தம்மாற்றுமே தெரிந்து கொள்வர் கொள்ளமாட்டார்கள் ஆதலால் குருவருளினாற் றெளிக, எ-று. 27

மேற்கவிகளிற்கூறிய சரம் பிழைக்கில் இடர்வரும் வந்தாலும் அதற்கு உபசாந்தங் கூறுகின்றார்.

தெளிகதிர்சேய் மூன்றடியாந் தெற்குபந்தன் செம்பொன் மூன்றடிமேற்குத் திங்கள்வெள்ளி, இளகியநாலடிவடக்குப் புந்திமுன்போ லிரட்டையலுக் கிழக்கிரவி யெழுதன்முன்னே, வளமுடனே பூரணபக்கத்திற்சென்று வந்திருந்து நமைநினைந்து வழுத்தல்செய்தே, உளமகிழ்ந்து போகிலெல்லாம் பலிக்குந்துன்ப முண்டாகா விவையனைத்தும் உணர்ந்துதேறே.

(இ-ள்) பெண்ணே மேற்கவிகளிற் சொல்லியபடி காலசரஞ்சரிப்பட்டுவருமோ வராதே ஊழ்வினைப்படிக்கல்லவோ நடக்கும் அதை நம்முடைய வசமாக்குவதற்கு இலேசே எனத் தளர்வுற் றிருக்க வேண்டியதில்லை சரம்பார்க்கிறவன் முன் கவிகளிற் சொல்லியபடி பிராதகாலத்தில் அருணோதயத்திற்கு முன்னெழுந்து ஞாயிறு செவ்வாய்க்கிழமைகளுக்குத் தென்புறமாய் மூன்றடிமுன் 11-ங் கவியிற் சொல்லியபடிசரத்தை பூரணமாக்கியக்காலையே முன்னிட்டுக்கொண்டு போகவும் சனி வியாழங்களுக்கு மூன்றடி மேற்கேபோகவும் திங்கள் வெள்ளிக்கு நாலடி வடக்கேபோகவும் புதனுக்கு இரண்டடி கிழக்கே போகவும் இப்படியாகப் போய்வந்து ஒரு திவ்வியமாகிய ஆதனத்திலிருந்து என்னை நினைத்து துதிசெய்து பின்னெழுந்து எங்கேசென்றாலும் அல்லது எங்கேயிருந்தாலும் முற்கவிகளிற் கூறிய துன்பங்கள் யாதேனு மடராது எ-று. 28

இதன்மேற்கவிகளிற்கூறிய ஒருவாரத்திற்குச்சரந்தப்பில் இன்னவையாமெனம் ஏழுநாட்களுஞ் சரிவரில் இன்னின்னவை யாமெனவுங் கூறுகின்றூர்.

தேறுநீ யிவையெல்லாஞ் செவ்விதாக செங்கதிரோன் றன்னு ளிற்றிங்களோடி, மாறிவருங்கதிரவனுஞ் சோமனுளின் மறிந்தோடி வருங்கிழமை யேழுமாறிற், கூறுபடவுடலுயிர்விட் டேகுமென்க குணமாகு மிக்கிழமை கேணுதோடிற், சிறிவருங் காலனையுஞ் செயிப் பர் மற்றுஞ் சித்தயோகத்து நிலை சித்தியாமே.

(இ-ள்) இவையெல்லாந்தேர்ந்தறி சூரியனடக்கவேண்டிய நாளிற் சந்திரனடந்து சந்திர நடக்கவேண்டிய நாளிற் சூரியனடந்து இப் படியாக மாறுபட்டு ஒருவாரமுழுதும் நடந்தால் மரித்துப்போவான் அப்படியல்லாமல் கிழமை ஏழுந்தவறுமல் மேற்கண்ட நாழிகையுங் கோணுமல் திக்கு நோக்கிச் செல்வதுடன் பிராணுயாமமு மாறுமல் நிகழ்ந்துவருமாகில் இயமனடரான் பிராணனுக்கழிவில்லை சீவன் முத் தனுல் வாழ்ந்திருப்பன் அஷ்டமாசித்தியு மவனுக்குச் சித்திக்கும். 29

குறிசொல் மார்க்கங் கூறுகின்றூர்.

சித்தமுட னிரேசகத்தில் வந்துகேட்டால் செப்பியவப்பொருள் களெல்லாந் தீதேயாகும், உத்தமமாம் பூரகத்தில் வந்துகேட்டால் உறைத்தபொரு ளத்தனையும் உண்மையாகும், மெத்தியகும் பத்து ரைக்கி நன்றேயாகும் வேண்டாரை ரேசகத்தில் விளியைப்பார்க்க, வைத்தமலம் வாயுநீர் கழிபோதென்னின் மாற்றலர்தாங் கெடுவரிது மாறிலாதே.

(இ-ள்) சரம்பார்க்கிறவன் ரேசகஞ்செய்கிறபோதில் வந்துகேட் டால் கேட்டகாரியஞ் சித்தியாது பூரகத்தி லென்னில் நன்மை அவன் சொல்லுகிறது முண்மையாயிருக்கும் கும்பகஞ்செய் காலத்திலாகில் நற்காரியமது சித்திக்கும் மலம்சலம் வாயு கழியும் போதானுல் பகை வர் கெட்டுப்போவார்கள் இன்னமிதற்கு விபரம் குரு முகாந்தத்திற் றெறிந்துக்கொள்ள வேண்டியது அல்லாமற்றெரியாது எ-று. 30

சனி வியாழபலன் கூறுகின்றார்.

மாறிவளர் பக்கங்குறையும் பக்கமதிநாடி கதிர்நாடி வளர்பொன் னேடிற், பேறுமிக உண்டாகும் பிராணனிற்கும் பின்புரைத்த காரி யங்க ளெல்லாம்பேறாம், கூறுகின்ற சனிநாளிற் பகலிரவிற்குலவுகரம் வலமிடத்திற் கோணதோடி, ஞாறுமலர்ப்பெருந்திருவே சொன்னே மிந்த ஞாலமெங்கும் புகழ்பெறவே நடக்குமென்றே.

(இ-ள்) வளர்பிறை வியாழத்திற்குச் சந்திரனும், தேய்பிறை வியாழத்திற்குச் சூரியனுந் தப்பாமல் நடந்துகொண்டே வந்தால் சிறந்த பேறுண்டாகும், சீவன் முத்தனுய் தளர்வின்றிவாழ்வன் இதல் லாமல் சனிக்கிழமைக்கு இரவிலும் பகலிலுஞ் சந்திர சூரிய சரங்கள் மாறுபாடில்லாமல் நடக்கவேண்டியது நடந்தா லிவ்வுலகமெங்கும் மெச்சத்தகக கீர்த்திவந்துறும் மற்றும் முன் காலசரஞ்சொல்லிய கலி யை நோக்கவேண்டியது எ-று. (31)

குறிசொல் மார்க்கங் கூறுகின்றார்.

நடப்புடைய வொருவனெங்கே யென்றொருவன் கேட்கினுனி லத்திலகத்திருப்ப னன்னீர்முற்றம், அடங்குமழுவாகிலுள்ளூர் வாயு வேற்றா ரம்பலமென் மலேமேற்றுயிலலாகும், விடப்போனன் புவிக்கு நிலே நீர்க்குமீண்டான் வெவ்வழற்குவருகின்றான் வெயில்காலுக்கு, மடற்குழலா யூர்வந்தான் வானமாகில் வருவனொரு நாழிகையின் மாறிலாளே.

(இ-ள்.) ஒருவன்வந்து இன்னனெங்கே யிருக்கிறானெனில், அப் போது சாம்பிருதிவாகில் வீட்டுக்குள்ளிருக்கிறான் அப்புவாகில் முற் றத்திலிருக்கிறான் தேயுவாகில் அக்கிராமத் தெல்லேக்குட்டானேயிருக் கிறான், வாயுவாகில் எல்லேக்கப்புறப்பட்டான், ஆகாயமாகில் மலே யேறுகிறான் அல்லது தூங்குகிறானென்று சொல்லவேண்டியது, இது விட புறத்தேசம் போனவனேக்குறித்து கேட்டபோது பூதியமைந்தில் திரும்பிவருகிறான். மூன்றாகில் திரும்பினவன் நில்லாமல் நடந்துவரு கிறான், நான்காகில் அவனிருக்கு மூருக்குள் வந்தான், ஐந்தாகில் ஒரு நாழிகைக்குள்வந்து வீடு சேர்வானென்று சொல்ல வேண்டி யது எ-று. (32)

இச்சரம் மனதுடன் லயப்பட்டால் இன்னவையா மெனக் கூறுகின்றார்.

மாறிவருவாயு மனேவலயந்தன்னின் மரிக்கவுபிர்சித்திநிற்கவது தானிற்கும், கூறுசமயங்கூற்றாற் பயமுமில்லை குறித்திருமண்ணொன் றரை நாழிகையாக்கொள்க, நேறுபுனற் கொன்றேகால் வன்னிக் கொன்று சீவன்முக்கால் வானமரை சிறந்தநாடி, பாருமைந்து நாழி கைக்குள் வரினற்குன்றிற் பழுதுபடு முடம்பிலிது பற்றிப்பாரே.

(இ-ள்) இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் ஒன்றைவிட் டொன்றை மாறிமாறி நடக்குமிச்சரமானது தேகத்தினூடே லயப் பட்டுப் போகுமேயானால் பிராணனுக் கழிவில்லை, அப்படி லயப்பட்டு நிற்கில் மனமுதலிய வந்தக் கரணங்களுக்கும் வேலையில்லை அசைவற் றிருப்பனவாகும் பின்பு மற்றெச்சமயத்தராலும் பயமில்லைஎமனாலும் பயமில்லை, முன்சொன்னபடி இடது பக்கமும் வலதுபக்கமும் மாறி யோடுஞ் சரம் ஒவ்வொருபக்கத்தி லென்னேரந்தரித்து நடக்குமென் னில் ஐந்து நாழிகையாம், அதிலும் பூதியங்களின்கூறுக் கெவ்வாறு பகுப்பதெனில், மண்ணில் ஒன்றரை நாழிகையும் நீரில் ஒண்ணே காலும், நெருப்பில் 1-ம் காற்றில் முக்காலும், வெளியில் அரையும் ஆக நிறைந்தோடும் இப்படியாகிய பூதியங்கள் கூறுகொண்ட ஐந்து கடிகைகளும் ஒவ்வொரு பக்கத்திற்குச் சரியாய்ச் சிதையாதோட வேண்டியது, இதைவிட குறைந்தாலும் வளர்ந்தாலும் தேகநலியாம் இச்சரம் லயப்படும்வழி தேடவேண்டியது தேடில் முன் கண்டபய னுண்டாம் இல்லையேல் நாடியொன்றுக்கு ஐந்து நாழிகையும் பூதி யங்களினளவே சிதறாமல் நடப்பிக்கவேண்டும் அதுவுமின்றெனில், தேக நலியேவரும் எ-று. (33)

தத்துமது வாழ்நாட் பிரமாணமறியும்படி அயன் சங்கற்பங் கூறுகின்றார்.

பற்றினன்சொன்னபடி யயனமுன்னாட் பகலொருபோதுண்டு பரி சுத்தனாகி, மற்றைநாளுத்தர மாமயனந்தன்னின் மாறியிடந் தனி லோடும் வலந்தெற்காகும், பெற்றதொரு நாழிகைதா னைந்துநாறும் பெருங்கடிகை தனிற்குறையிற் பிராணனசை, முற்றொருமா நாழிகைக் கோ ராண்டுதாழு முறையேநான் சொன்னகணக் குண்மைதானே.

(இ-ள்) சரம் பார்க்கிறவனுக்குச் சென்றநாட்கள் போகமற்றும் நின்ற நாட்கள் எவ்வளவோ என்னுங் கருத்துக்கொண்டு பார்த்துத்

தெளியுமாறு யாதெனில் அயனசரமாம்; அதனைப்பார்ப்ப தெவ்வாறெனில் தைமாதமுதற்றேதியில் உத்தராயனகாலம் ஆடிமாதமுதற்றேதியில் தக்ஷணாயனகாலம் இவ்வயனகாலத்திற்கு முன்னுள்பகலில் ஒருபொழுதன்னமுண்டு தத்துவங்களைப் பரிசுத்தமாக்கித் தேகமெலிவதனால்மனதுக்குமற்றவாயுவாதி கரணங்களுக்கும்வருமிடையூறினை நிருவி தைமாத முதற்றேதியில் பொழுதுவிடிய ஐந்துநாழிகையிருக்கையில் பார்க்கும்போது சரமவாரம் திதி நட்சத்திரங்களைத்தள்ளி இடதுபக்கத்திலுதித்து முன்கவிகளிற் சொல்லியபடி ஐந்துநாழிகைகளுஞ் சிதறாமல் ஓடும் அதனை பார்க்கவேண்டியது இதுபோக ஆடிமாத முதற்றேதியில் இதே பிரகாரமாய் பார்க்கவேண்டியது அப்போது சரம் வலதுபக்கத்திலோடும் அப்படியோடிய சரம் முற்கூரியவண்ணம் ஐந்துநாழிகைகளுஞ் சிதறாமலோடினால் சரம்பார்க்கிறவன் தான்செய்யும் பிராணாயாம வுதவியினால் அன்று தொட்டுவரும் நூறுவருஷகாலம் வாழ்ந்திருப்பன் இதுவின்றி குறைந்தால் அவ்வைந்து நாழிகையை நூற்றொருமாஐந்தாகநூறாக்கிக்குறைந்தநாழிகை ஒருமாவோஇரண்டுமாவோ அல்லததன்மேற்றொகைப்பட்டனவையோ அதற்குஒவ்வொருவருஷத்தைக் கூட்டிப்பார்த்து குறைந்த ஒவ்வொருமா நாழிகையின்பேரில் கணக்காக்கிக் கொள்ளவேண்டியது முழுவதுமேதப்பிச் சரம் இடத்திற்கு வலமாகவும் வலத்திற்கு இடமாகவும் ஓடில் அவனுக்கு க்ஷீணகாலமென்றறிக எ-று. (34)

போசனவிதி கூறுகின்றார்.

உண்பவனுக் கப்புவிட மதிக்குவெய்யவுவர்த்தன கைத்தன கார் தலுண்கமுன்னே, பண்பயில் செங்கதிர்க்கு நெய்பால் புளித்தல் கன்னல்பாகுடனே துவர்த்தனமு தண்டுபார்க்க, நண்பவைவயிற்றிற்குச் சோறுபாதி நன்னீர்காலகாற் றுக்காலாக நல்கி, கண்பயினடிகள் சுத்திபண்ணி தூபங்காட்டி மலர்சூட்டி யிருள்கழியுங் காலே.

(இ-ள்) முன் கவியிற்சொல்லியபடி சரம்பார்க்கிறவன் சூரியகலையியங்கி வருகிறமட்டும் போஜனமில்லாமல் மற்றதனுக்காக காக்கவேண்டியதில்லை சந்திரன் நடக்கும்போதுஞ் சாப்பிடலாம் எப்படியெனில் உஷ்ணமான பண்டங்களும் உப்பு கசப்புகாரலாகியபண்டங்களை வைத்துக்கொண்டு தாகபானத்தை நிறுத்தி யுண்ணவேண்டியது சொல்லியபடியே சூரியன் நடக்கில் நெய், பால், புளித்தல் தித்தித்தல் துவர்த்தலாகிய பண்டங்களுடனே சாப்பிடலாம் தாகபானமுமப்போதே செய்யலாம் சந்திரனுக்கு அப்போது கூடாதாயினும் பின்பு

சூரியன் நடக்கில் சாப்பிடவேண்டியது இது மாறினாலும் ஆத்திரத்தினாலும் அவாவினாலுஞ் சூரியனுக்காக காத்திராமல் அடுத்தடுத்துச்சந்திரனிற்றானே தின்றுகொண்டு வந்தாலும்கலியாம் இப்படியாகச் சாப்பிடுகிறதாயினும் அவ்வுணவு வயிற்றிற்குப் பாதிதானாகும் மிஞ்சிலாகாது மற்றப்பாதிக்கு சலங்காலாகவும் வாயுகாலாகவுங் கொள்ளவேண்டியது கொண்டு தசநாடிகளையும் பிராணாயாமமுன்னிலையில்சுத்திசெய்து ஏகாக்கிர சித்தனாய்ச் சரம்பார்க்கவேண்டியது எ-று. (35)

சரத்தை ஏறவொட்டாமலுங் குறையவொட்டாமலுந் தன் வசப்படுத்திக்கொள்ளு மார்க்கங் கூறுகின்றார்.

கால்கொண்டு கணக்கறிவார்க் கியாதுந்தப்பா கருதியவெல்லா முடியுங் கண்பேர்க்கெல்லா, மேல்கொண்ட புவியுடனே யப்பு வன்னி விளங்கியகால் வானமுடன் வினவுவார்க்குப், பால்கொண்ட மொழியாளே பவனங்கட்டிப் பற்றியவாராதாரப் பரிசுபார்த்துக், சால்கின்ற முதனாடி தன்னினின்ற தபனன்மதி செந்தழலாந் தன்மை பாரே.

(இ-ள்.) பால்போலு மினிய சொல்லையுடைய பெண்ணே சரம் பார்க்கிறவனுக்கு அனுபவமிந்நூற் சொல்லியபடி வருமோ மற்றவ் விதிப்படி பிறழாது போசன முறைமையும் வந்தொத்துக்கொள்ளுமோ மிகினுங் குறையினும் நோய்செய்யுமேஎளிதிற் சரிப்படவராதே வராதெனில் தானெப்படிநன்கடைவன் வினவுவார்களுக் கெவ்வாறாய் நன்றெனவுந் தீதெனவு மூழறிந்தெடுத் தோதுவனென்று ஐயமுற வேண்டியதில்லை சரம்பார்ப்பான் பரம்பார்ப்பானென்பதுபோல் சரத்தைக் கணக்கின்படி யறிந்துபார்க்கிறவனுக்கு யெந்த காரியமானாலுந் தப்பிப்போகாது அவனைக் கண்டபேர்களுக்கும் நினைத்தகாரியமெல்லா முடியும் அதெப்படியென்னில் பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாய மாகியபஞ்சபூதியங்களின் கூற்கூடிய வாயுவினைப்பாழ்போகாமல்மன மறிவுடனேகட்டி ஆறுதாரத்தினிலுள்ள பரிசினையறிந்து தசநாடிகளிலும் முதனாடியாகிய பிராண நாடியினின்று மற்றங்கிருந் துதித்தோ

டுஞ்சந்திரன் சூரியன் அக்னியென்னுமிம்மூன்றினுடைய குணங்களை யும் பார்த்தால் கைக்கனிபோல் இலேசிற்றெரியவரும் எ-று. (36)

சரம்பார்க்கிறவனுக்கு நன்மைதீமை மரணகால மறியும்படி சாயாபுருஷ தெரிசனங் கூறுகின்றார்.

பாரிலொத்த நிலத்தகல்வான் களங்கமற்றார் பத்தடிக்குளஞ் சடியாம் பருவந்தன்னிற், சீரியமெய்ந் நிழல்கழுத்து.கைகால்சென்னி சிமிட்டிப் பார்த்திமையாமற் றிகழ்வான்பார்க்கிற் கூருருவம் பொன் கண்டாற் செல்வம்வெள்ளை குறைவிலுயிர் மெய்ம்மையுயிரிளைக்குங் குற்றங், காருருநோயாறுபிறை கைகால்குன்றிற் கந்துறையின் மூப் பிறையிற் காட்டுஞ்சாவே.

(இ-ள்.) பூமியிலே மேடுபள்ள மில்லாத இடத்தில் ஆகாயத்தில் மேகமறைவில்லாமல் வெயிற்காயும்போது தன்னிழல் அஞ்சடி நீள முதல் பத்தடிக்குப்பட்ட தருணத்தில்தான் அந்நிழல் முகமாய்நின்று கைகாலிரண்டையுந் தொங்கவிட்டு கண்களிமையாமல் அந்நிழலில் தலை கழுத்து கைகள் கால்கள் இவ்வுறுப்புகளி லொன்றைப்பார்த்து அப்படியே இமையாமல் ஆகாயத்தைப்பார்த்தால் அங்கே அவனுரு வந்தோன்றும் அவ்வுருவம் பொன்னிறமாயிருந்தா லவனுக்குச் செல் வம்வரும் வெண்மையெனில் பிராணபயமில்லை ஆயுள்வரும் செம்மை யாகில் ஆயுள்தேயும் அதற்கொரு குறையும்வரும் கருமையேல் நலி இதுவிட அவ்வுருவில் கைகளாவது கால்களாவது தோன்றாமலிருந் தால் ஆறுமாதங்களுள் மரணம் இதுவன்றித்தலையேகாணாமல் கவந்த மாய்த்தோன்றில் மூன்றுமாதத்தின் மரணம் இதல்லாமலும் சந்திர னிலு மிப்படியே பார்ப்பதுமுண்டு இதனை சாயாபுருஷ தெரிசன மென்றுஞ் சொல்லுவார்கள் இச்சாயாபுருஷ தெரிசனத்தை விடாமல் பன்னிரண்டுவருஷம் பார்த்துக் கொண்டுவந்தால் தன்முன்னிற்குமந் நிழல்தன்னுடன் பேசும் பேசில் அதன் முகாந்தரமாய் அஷ்டமாசித் தியையும் பெறலாகும் பெறுவுதன்றிப் பின்னுஞ் சிலநாட்களில் அந் நிழல் ஓராளுருவமாகித் தன்னுடனேதிரியும் படுத்தால் தானும் படுக் கும் எழுந்தாலுடனெழும் இவனுக்கு வரும் நன்மை தீமைகளை முன்னதாகவுணர்த்தும் இன்னமுமிப்படிப்பட்ட அனேக மற்புதங்கள் விளக்குமென்று பெரியோர் சொல்வார்கள் எ-று. (37)

மரண விலக்கணம் 'வில்லுருவின்பயன் கூறுகின்றார்.

காட்டியகாலிழற்றனக்கு முன்பின்னாகக் கடிபுனல்வாய் கொண் டகல்வான் களங்கமற்றால், பூட்டியசீர் துகள்பிறக்க வுமிழ்தால்வானிற் பொருந்தியவில்லிந்துருவாய்ப் பொலிந்துதோன்று, மீட்டிய வில்லுரு வுளதே லாண்டுவாழ்வ னிதுமுறியிலவ்வாண்டி றிறந்துபோவான் கோட்டியவில் லுருமுறிய வணங்குதோன்றிற் கொண்டுபோம் பிறை யாறிற் குறித்துக்கூறே.

(இ-ள்.) வானிற்களங்கமில்லாமற் சூரியனெறிக்கையில் மரநிழல் வீட்டுத் தாழ்வாரநிழல் இப்படிப்பட்ட யாதொரு நிழல்தனக்கு முன் னிருக்கச் சரம்பார்க்கிறவன் பின்னின்று வாய்நிறைய சலங்கொண்டு அந்நிழலருகில் துகள்பறந்து அணுப்போலப் பறக்க ஒரேதரமாய் உமிழ்ந்து அத்துகளைப்பார்த்தால் அதி லிந்திரதனுசு அமைந்து வர் ணங்களுடனே தோன்றும் தோன்றிடில் பார்க்கிறவனுக்கு அன்று முதல் ஒருவருஷமட்டுக்குஞ் சாவில்லை அவ்வில் முறிந்தால் அவ் வாண்டிலிறப்பான் அவ்வில் நிறமாறி யங்ஙனே ஒரு பெண்ணுருத் தோன்றில் ஆறுமாதங்களிலிறப்பான் எ-று. (38)

சந்திர சூரியரைப் பார்க்கு மிலக்கணங் கூறுகின்றார்.

குறிகொண்டநிறைமதியங் குறைமதியந்தன்னிற் குலவியதோர் செப்பகலிற் கொடுநெய்யைவிட்டு, எறிகின்ற மதிக்கதிரைப் பகற்கதி ரை, பார்த்தாலியவெண்மை செம்மைபொன்மை பசுமைகறுப் பென் னிநெறில், கொண்டவுயிர் வாழ்வுகெட ஞேய்சாதனிரை நிரையே யறியிதனிற் றெற்குமேற்கு, மறிகின்றவடக்குடனே கிழக்குநடுகுறை ந்தாலாண்டு திங்களாறு மூன்றொன்றுநாட் பத்தழிவே

(இ-ள்) ஒரு செப்பகலில் பசுவின்நெய்யை யுருக்கிவிட்டு அதிற் பூரணசந்திரனை யல்லது அமாவாசையின்போது சூரியனைப் பார்த் தால் அதிற் றோன்றுகின்ற சந்திரன் அல்லது சூரியன் வெண்மை செம்மை பொன்மை பசுமை கருமை இவ்வைந்தில் ஒன்றுளதாய்த் தோன்றும் அதில் வெண்மையேல் பிராணபயமில்லை செம்மையென் னில் வாழ்வுண்டாம் பொன்மையாகில் கேடு பசுமையானுல் நோய் கருமையோ சாவுவரும் அதிலுமப்படிச் சாகிறவனுக்குக் காலமெப் போதெனில் தென்புறவட்டம் குறைந்தால் ஒருவருடம் மேற்புறவட் டங்குறைந்தால் ஆறுமாதம் வடபுறம் மூன்றுமாதம் கீழ்ப்புறம் ஒரு

மாதம் நடுவே தொள்ளையாயிருந்தால் பத்துநாள் நிறைமதியம் வபள ரணை குறைமதியம் அமாவாசை யென்றறிக எ-று. (39)

சரீரபழுது முதலான மரணவிலக்கணங் கூறுகின்றார்.

அழிந்திடுங் கைகாநெற்றி கனனந்தம்மிடலர்ந்து துடிம்புரிவ ரண்டு திங்களாறு, மொழிந்ததிங்கண் மூன்றுநாள் பத்திலாவிமுடிந்து விடு மிதுவொழிய செவியிலோசை, யொழிந்திடுநா லேழுகண்ணி ளொளிதானைந்தா முயர்ந்தமணமூன்றிரண்டி லுரைவேறானல், கழிந் திடுகல்லுயிரென்று கருதியீசன் கழலிணையைப்போற்றில் வினை கழி ந்துபோமே.

(இ-ள்) கை, கால், நெற்றி, கன்னம், இவை அடர்ந்து துடித் தால் மரணகாலம் வந்ததென்றறிக அதிலும் கை துடிக்கில் ஒரு வரு ஷம் கால் ஆறுமாதம் நெற்றிமூன்றுமாதங் கன்னம்பத்துநாள் என்று கொள்ள வேண்டியது, இதுவொழிக காது கேளாவிட்டால் ஏழு நாளில் மரணம் கண்பார்வை மழுங்கில் ஐந்துநாள் மூக்கில் கந்தம் போனும் மூன்றுநாள் வாக்குழறிப் பேச்சழிந்தால் இரண்டுநாள் இதையறிந்து கடவுளுடைய பாதங்களை நினைந்து போற்றிசெய்தால் வினையென்பதிராது அங்கனே கலந்துபோதலு மாகும் எ-று. (40)

உசுவாச நிசுவாசங்களின் பயனும் கூறுகின்றார்.

போம்வாயுசிவ முள்ளேபுகுதற் சத்திபோகில் விடம்புகிலமுதம் புகன்றவெல்லா, ஆம்வாயு புகிற்போகி லல்லவாகு மடங்கில் விடங் கெடும்போகி லகலும்பாவங், தேமேவுசத்தி யிரண்டொற்றை யீசன் செவியிற்போவார் வருவர்சரமீனமாகில், ஓமேவுமுயிர்போகி னேயா மற்ற துட்புகினே யாகாமெய் யுரைத்தோநாமே.

(இ-ள்.) உசுவாசம் நிசுவாசம் அல்லது ரேசகபூரக காலபலனைச் சொல்லுமிடத்தில் உடலை விட்டுப்போகிற வாயுவே சிவம் உட்புகு வதுகத்திசரம் வெளிப்பட்டுப்போவதெல்லாம் விஷமுண்பதற்குச்சரி உட்பட்டுப் புகுவதெல்லாம் அமுத முண்பதற்குச் சரி சரம் உள்ளே போகும்போது ஒருவன்சொன்னது அல்லது நினைந்தகாரியம் ஆகும் வெளிகொள்ளுகையில் ஆகாது அந்தவாயு கும்பகத்தடங்கில் உண்ட விஷங்கெடுமெனச் சரி அடங்கியது நடுநாடிவழிபோகில் பாவமென்ப தில்லை இதன்றியில் ஒருவன் வந்து குறிகேட்கையில் முதற்சொன்ன சொல்லின் எழுத்தை யெண்ணிப்பார்க்கில் ஒற்றையாகில் சிவன்

கூறென்றும் இரட்டையாகில் சத்திகூறென்றுங் கொள்ளவேண்டியது சரம் வெளியேபோகும்போது ஒருவன்வந்து இன்னுன்போவானே வருவானேவெனில் போவான் வரான் உட்புகையில் வருவான் சரம் போகும்போது வருவானுவென்றும் புகும்போது போவானுவென்றும் மாறுபட்டு வினவில் சரிப்படாது போகும்போது போவானே யல்லது வரான் புகும்போது வருவானே யல்லது போகான் சரம் போம்போது நோய்தீருமோ வென்னில் தீராது புகும்போது தீருமென்க எ-று. (41)

குறி சொல்லவும் போர் புரியவு மார்க்கங் கூறுகின்றூர்.

உரைத்தொருவ னிறைவிற்போய் குறைவிலுறத் தீதாம் உயிரில் புறத்துரைத்து நிறைபுறத்தற மத்திபமாம், நிறைத்தநிறை பக்கத்தி னின்றிடி நன்மையதாம் நிறைமதியந்தனி லேகிநேர்ந்திடும் போர்க் களத்து, வரைத்தசெழுஞ் கதிர்வெட்ட வல்லவனேதோற்பன் வாகான சந்திரனே வெல்லமாட்டான், விரித்தகதிரினிலேகி வெங்கதிரில் வெட்டமேனியிலும் வடுப்படான் வெல்வான்றூனே.

(இ-ள்.) குறிகேட்கவந்த ஒருவன் தன்காரியத்தைச் சொல்லிக் கொண்டே முன்னர் பூரணத்தில் வந்தாலும் பின்னர் சூனியத்தில் வந்துவிடுவானுகில் அக்காரியம் தீதாம் முன்பு சூனியத்தில் நின்று பின்பு பூரணத்தில் வருவானெனில் மத்திமம் இவ்விரண்டு மாறுபாடு மில்லாமல் வந்தவன் பிறழாமல் பூரணபக்கத்திற்றூனே யிருந்துதான் வந்த காரியத்தைச் சொல்லிமுடித்து விடுவானெனில் அக்கருமம் நன் மையதாம் என்றறிக. போர்க்குறியைச் சொல்லு மிடத்துச் சந்திர கலை யியங்கும்போது சென்று சூரியனியங்கும்போது களத்திலேகில் எதிரி எப்படிப்பட்டவனுனலும் தோற்பன் இப்படியல்லாமல் சந்திர னியங்கும்போது புறப்பட்டுச் சந்திரனிற்றூனே போரில் தோற்பன் இதுநிற்க சூரியனிற்றூனே புறப்பட்டு அச்சூரியனிற்றூனே புறப்பட்டு அச்சூரியனிற்றூனே போரில் தன்மேலொரு படைபடாமல் வென்று வருவன் எ-று. (42)

போர்வெல்ல மார்க்கங் கூறுகின்றார்.

வெல்வனமரிருவர்பே ரெழுத்திவேயு மெண்ணின் மிருந்த வெழுத்துடைய அ, இ, உ, எ, ஒ. வென்னு, நல்ல வெழுத்துடனே ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, கூட்டிநலந்திகழ் பாலன் குமர னரசனே விருத்தன், சொல்லுமவர் பேரின்முதலெழுத்தி லுயிரெழுத்தைத் துலங்கிய வத்தானத்திற் றுகளறவேகூட்டில், எல்லேமுதற்றானத்தி லெழுத்துடையோன் வெல்வனிருவரையு மிவராற் சாமிரட்டை யெழுத்தோனே.

(இ-ள்.) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, இவை, முதலாவது பாலன் கூறெனவும், இரண்டாவது குமரன் கூறெனவும், மூன்றுவது அரசன் கூறெனவும், மற்றயிரண்டும் விருத்தன் கூறெனவும், கொள்ள வேண்டியது, இதில் சண்டைக்காரனுடையபேரில் முதலெழுத்தைப் பார்க்கும்போது, ஆவொலியேலாவுடனேயும், ஈயொலி யேலீயுடனேயும், ஊ வொலி யேலூவுடனேயும், ஏ யொலி யேலே யுடனேயும், ஓ ஒலி யேலோவுடனேயுங், கூட்டிக்கொண்டு அவர்களே இவ்வெழுத்துக் களின்படி பாலன் குமரன் அரசன் விருத்தனுக்கிபாலன், குமரனேயும் அரசனேயும் வெல்வானெனவும், விருத்தன், மற்றவர்களால் படுவானெனவுஞ் சொல்லவேண்டியது, அதிலும் எ-ஏ-ஒ-ஓ விருத்தன் கூறு இவ்விரண் டெழுத்துக்களே கொண்டவன் அவர்களாற் படுவான் எ-று. (43)

கருப்பக் குறியின்முறை கூறுகின்றார்.

இரட்டையாமுபயத்திற் கேட்டபிள்ளே யினியபூரணத்திலாண் சூனியத்திற் பெண்ணும், மருக்குழலா ளிடத்துயிரை விடியற்கால மகிணன்வலத் துயிரதனல் வாங்கநட்பாங், தரிக்குநிலம்புதன் வெய்யோனப்புமந்தன் சந்திரன்றீவியாழஞ்சேய் தண்கால்வெள்ளி, நெரிங்கியவம்பரம்பூதங் கிழமையிந்த நெறிநிற்கிநன்மைமிக நிகழுந்தானே.

(இ-ள். முன்சொன்ன கருப்பக்குறிகளுமல்லாம லிதுவுமொன் றெனக்காண்க யாதெனில் உபயசரங்கள் நடக்கும்போது கேட்கப் பெற்றபிள்ளே இரட்டைப்பே றெனலாம். எப்பக்கமாயிருக்கினும் பூரணபக்கம் ஆண் சூனியபக்கம் பெண், ஆனுலும் மேற்கவிகளிற் சொல்லியபயன்று ளுகுமெனக்கொள்க இதுநிற்க வைகறைப்பொழுதில் மனேவிக்குச்சரம் இடதுபக்கத்தில் நடந்து மகிணனுக்கு வலத்தி நடந்தா லதை யம்மகிணன் அவ்வலச்சரத்தாற்றனே வாங்கி யுட்கொள்ளு மப்பியாசஞ் செய்துக்கொண்டே வருவானெனில் மனேவி யிவன் வசமாவாள் பிறன்முகநோக்கும் கருத்து விழையால் அப்படி வாங்குவது பன்னிரண்டுதரம்வாங்கி யுட்கொள்வதென் றுஞ் சொல்லு

வார்கள் அல்லாமலும் வாரசரங்கள் எந்தெந்தப் பூதியங்களிலுதிக்க வேண்டுமெனில் புதன் பிருதிவியில் ஞாயிறு அப்பில் சனியுந் திங்களுந் தேயுவில் வியாழமுஞ் செவ்வாயும், வாயுவில் வெள்ளி ஆகாயத்தி லுதிக்கவேண்டியது உதிக்கில் அவ்வாரஞ் சரியாய் நடந்து அதனால் வரும் நன்மைகள் மிகுபலனை விளைக்கும் எ-று. (44)

இன்னதற்குமூல மின்னதென்றுங் கூறுகின்றார்.

நிகழ்புவிக்கு மூலநீர்வாயுசீவ நெறிதாது கனல்விண்ணு நினைக்குங்காலை, புகழுடனே பூதத்திற்குளதேசொல்க பொருவில் சரராசி வெய்யோன் புதுவெண்டிங்கள், மகிழ்கொள்திரராசி முபயராசி மறங்கிளருஞ் சுழிமுனையாம் வாரந்தோறு, பகுதல்படர்ந்துயிர் பலிக்குநிலைமைதன்னைப் பங்கயவாதனத்திருந்து பரிந்துபாரே.

(இ-ள்.) பிருதிவிற்கு மூலம் அவா சீவன் க-ஆகாது இப்படி நிறைநிறையே ஒன்றுக்கொன்று ஆதாரமாய்வரும் அவைகளை விளங்க விங்ஙனம் விபரமாய்ச் சொல்லவில்லை யாயினும் இதனையும் சரராசியென்னப்பட்ட சூரியனையும் திரராசியாகிய சந்திரனையும் உபயராசியாகிய சுழிமுனையையும் மற்றவற்றின் பயன்முதலிய கூறுபாட்டையும் பங்கயாதனத்திலிருந்து பரிவுற்று சிவயோதஞ் செய்தாலல்லது நன்குணர்தலரிது உயிர் பாழ்போகாது சீவன் முத்தனுதலுக்கு அதுமார்க்கமில்லையேல் அவம்போகு மென்றறிக, எ-று. 45

மூன்றுநாடிகளின் முறைமை கூறுகின்றார்.

பாரிதனைக்கதிர் மதிச்சுழிமுன் வாழ்வுகேடு பண்டைநிலை இம்மூன்றும் பரிந்துகேட்கில், மேரடருஞ் செல்வம்வரும் வெய்யோனுகில் வெண்மதியக் கேடாகும் விரைந்துவாயு, தீரமிகுசுழிமுனை தானுகில் முன்பிற் சிறுகாலும்பெருகாது தேவரானேர், பேரருகில் வருமெனினும் மதியில்வாரார் பொங்கிய செங்கதிர்வருவர் புகன்றோம்நாமே.

(இ-ள்.) நாம்சொன்ன இச்சரநூலைப் பரிவுடன் பார்ப்பாயாக சூரியன், சந்திரன், சுழிமுனையென்னு மிம்மூன்று நாடிகளுள்ளும் வாழ்வும், கேடு, நிலைமையென்கிற மூன்றுக்கும் நிதானப் பலன்களைக் கேட்குமிடத்தில், சூரியனுகில் கேடுமுதலிய கண்ணியக்குறைவாகும், சுழிமுனையாகில் முன்புள்ளபடி ஏராமல் குறையாமல் நிரைவாகும் அன்றியுந் தேவாதிதேவர்களாலே வசீகரப்பட்டவனுகிலும் செயாபசெயத்தின் முன்னிலையில் வருவோமென் றுறுதியாகச் சொல்லினுஞ் சந்திரனே அதிகமாக வியங்கிடில் வாரார் சூரியனே யதிகப்பட்டால் வருவாரென்று காண்க, எ-று. 46

இதுவுமது உபசாந்தங் கூறுகின்றார்.

நாமுரைத்த தொகையளவுஞ் சூரியனோடாம் நன்மதிய மேல் வாயு நடக்குமாகிற், றமிளைத்தல் கிளையிளைத்தல் பொருள்கேடாதல் சாகுவருண்டாதலிவை தப்பாதாகும், போமிடத்தின் மதியாகின் சரத்தைப்போக்கிப் பொருந்துமடி யிரட்டித்துப் போகநன்றாந் தே மருவுகதிராகிலுயிருள்வாங்கித்திகழும்வலக்காலொற்றிற்செல்கநன்றே

(இ-ள்.) முன்சொன்னபடி சந்திரனே யதிகமாய் நடந்தால் தமக்குக் கேடுவருவதல்லாமலும் பந்துக்களுக்கு மதுவேவாகும் சத்துருக்கள் தோன்றிவருவது தப்பாது சந்திரனிற் போகவேண்டிய காரியமல்லாத காரியார்த்தமாய்ப் போகும்போது சந்திரநடந்தால் சரத்தைநீள வெளிவிட்டு அப்பக்கக்காலேயே யிரண்டு மூன்றடி முந்தி வைத்துக்கொண்டு போகவேண்டியது சூரியனிற்போகவேண்டிய காரியமல்லாத காரியார்த்தமாய் போகும்போது சூரியனடந்தால் அச்சரத்தையேற உள்ளேவாங்கி அப்பக்ககாலே முன்னிட்டுக்கொண்டு போகவேண்டியது அப்படிப்போகில் போகுங்காரியம் நன்று, எ-று.

சந்திரகலையினடக்கும் பூதியங்களைக் கூறுகின்றார்.

செல்லுமதிதனிநிலத்திற் சஞ்சரித்திடவாயு சிவாலயங் கண் மதிற்செய்காலில்லங்கட்ட, நல்லமுடிசூட்டல் குடிபுகுதல் போக்கும் நயந்துமரம்வைத்தனன்று நளிநீர்தன்னி, லொல்லைநறும் வாவிகுளஞ் சோலைவைக்க வுழவிரைக்கமணமுளதே லுவக்கவாகு, நல்லழலிற்றிப் பிணியாங்காற்றிலானை நற்பரிதேரொட்டகங்க ளுவாயோட்டே.

(இ-ள்.) சந்திரகலையில் பிருதிவு நடந்தால் சிவாலயம் மதிள்வீடு கட்டல் குடிபுகுதல் போக்குசாந்திகழித்தல் மரம்வைத்தல் இவைநன்றாம் அப்புவாகில் குளமுதலியவெடுத்தல் சோலைவைத்தல் நிலத்தை உழுதல் விரைக்குதல் விவாகஞ்செய்தல் நன்றாம் தேயுவாகில் பிணி தீர்த்தலாம் வாயுவாகில் குதிரை முதலிய தேர்க்கப்பல் ஓட்டலாம் எ-று. (48)

ஓட்டிய வானதிற் செபிக்கவிற்போர் செய்யவுள்ள பின்கலைக்கு மொக்குமீதேசொல்க, நாட்டுமெதி வெயிற்கதிரோன் றிக்கிலந்த நாடிகளிற் பூரணைச்சேர்னன்றேயாகு, மீட்டுதிசை பிடித்தவைகள் செயல்களாண்பெண் ணியங்கிடலுஞ் சூனியபூரண மெழுத்தும், வாட்டமற மதித்தெண்ணி நிருமித்தற்கு வல்லவனே சரம்பார்க்க வல்லனென்றே.

(இ-ள்.) ஆகாயத்தில் மந்திரஞ்செபிக்க விற்போர்செய்ய நன்று இது சூரியகலைக்கு மொக்கும். இது நிற்க சந்திரதிசையானாலும் அல்லது சந்திரனேயானாலும், சூரியனே யானாலும் வந்தவன் பூரணபட்சத்திநின்றால் அவன்வந்த காரியம் நன்றாம் இதுபோக திசை ஆண் பெண் சூனியம் பூரணம் எழுத்து இவை முதலாய்ச் சொல்லப்பட்ட இச்சரநூலினுள் நுட்பப் பொருள்களைக்கண்டு இது இன்னதென்றும் இது இன்னதென்றும் நிருபிக்க வல்லவன் சரம்பார்க்க வல்லவன் அல்லாதவ னல்லாதவ னென்றறிக எ-று (49)

சரம்பார்ப்போ நியல்பு.

நன்றானமறைவல்லோர் குலமானாலென் நாமுறைத்த சரநூலி நடைதப்பாக, லென்றாரும் பார்ப்பவரே பூமிதேவ ரிசைந்தமானிடப் பிறப்பி னின்பங்கொள்வார், குன்றாதமாபறவை யெறும்பு தானுங் கொடிமருந்தி னளவரிந்து கொண்டுவாழ்ந்து, பொன்றானதெய்வீகம் பொருந்துவார்கள் புகுதுவார்பின்பிறப்பிற் புகலாதாரே.

(இ-ள்.) நல்ல பிராமணக்குலத்தராய்ப் பிறந்தாலுமென்ன அல்லது இழிவானகுலத்தில் பிறந்துமென்ன இச்சரநூலுணர்ந்து இதன் நடைதப்பாமல் பார்ப்பவரே பிராமணராவர் சராசரங்களினுடையத் தன்மைகளை யறிந்தவராக இப்பூமியின்கண் இவரே தேவரென யாவராலும் பூசிக்கப்பட்டு வாழ்ந்து பரம்பொருளிற் சாயுச்யமடைவர் பார்க்கமாட்டாதவர் இழிந்த குலத்தினராய்ப் பின்பிறப்பிற் பிடித்துக் கொண்டிருப்பார்கள் எ-று. (50)

பின்பிறப்பிற்பிறக்கினுஞ் சற்குருமுகத்தாற் பொருந்திய இச்சர நூலைப் புகலக்கேட்டு, நன்குணர்ந்து நெறிநடப்போன் யாவரேனும் நாமவனென்றிரண்டில்லை நல்லாகேட்கின், மின்பிறக்குஞ் செந்தழலை யடுத்தவெல்லா மிக்கதழல்வடிவான விதமேபோலத், தன்பிறப்பி லினி பிறவான் வசமேசாகான் சடைமேனு மணிந்தசந்திரனொப்பானே.

(இ-ள்.) இழிந்தகுலத்திற் பிறந்தவனானாலுங் குருமுகாந்தரமாயிச்சரநூலைச் சொல்லக்கேட்டு இதனையுணர்ந்து இவ்வழி நடப்பவன் யாவனானாலும் அவன் யாமேயாவன் வேற்றுமையில்லை நெருப்பு தன்னை யடைந்தவற்றையுந் தன்னுருவாக்கிக்கொள்ளு மியல்புபோல் அவன்யாமேயாவன் அவமாய்ப்பிறந்திறவான் இன்னும் விசேஷமாய்ச் சொல்லுமளவில் சடாபாரத்தில் நாமணிந்திரானின்ற சந்திரன் போன்ற என்முடிமேல் வீற்றிருப்பான் எ-று, (51)

அகஸ்தியர் ஞான சர நூல்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தெய்வீகத்தன்மை விளங்கிய

ஔவையார் திருவாய்மலர்ந்தருளிய

உயர்ஞான சரநூல்

முகவுரை.

அநாதிமுத்தசித்துருவாயும், அகிலகாரண சம்ரக்ஷகார்த்த சிவேஸ்வரனும், சுத்தசைதன்யங் கடவுளாயும் விளங்காநின்ற ஆதிநாயகனாகிய பரமசிவனின்றிருவருளா லினிதோங்கும் அன்பர்காள்! அலைகடற்சூழ்ந்த அவனியின்கண் அளவிடற்கரிய பிறவிகளில் மேலான பகுத்தறிவுடைய மானிடர்கட்குச் சிவாகமங்களில் விதித்துள்ளனவாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களினும், யோகமே ஞானத்தை அடைவதற்குறித்தான மார்க்கமாக விருத்தலினாலும் ஆராயுமிடத்து யோகமின்றி ஞானங்கிட்டுத லரிதாதலினாலும் இத்தகைய யோக சாதனையை அப்பியாசிப்பதற்கு வாசியை வயப்படுத்தலே ஏற்றத் துணைக்கருவியா யிருப்பதினாலும், அவ்வாசியை நிலைபடுத்திக் கைவல்யமாக்கு மார்க்கத்தையும், அதனது விபரத்தையும் போதிக்கவல்லதாயும், இதுகாறும் பஹிர்முகமாக வெளியிடப்படாததும், (தெய்வீகத்தன்மைபொருந்திய ஔவையார்) திருவாய்மலர்ந்த அருள்வாக்காகவும், மஹான்களால் அனுபவித்தும் அனுசரித்தும், வராநின்ற "உயர்ஞான சரநூல்" என்னும் அருஞ்சாத்திரத்தைப் பல்லோருமெளிதிலுணர்ந் தொழுகுமாறு விளக்கல்வேண்டுமெனும் பேரவாவானது நெடுநாட் தூண்டவும், புல்லறிவாளனாகிய யானும் என்னாலியன்றவரையில் குருமூர்த்தத்திற் றெளிந்தவண்ணம் "சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தல்" எனும் பிரமாணத்திற் கொருவாறிணங்க வசனரூபமாக இந்நூலைத் தொகுத்தும், இதனுடன், (எழுமூர். நேட்டிவ் வீ. இராமலிங்கதேவரவர்களருளிய "தினக்கிரமாலங்காரச் சுருக்கமென்னுஞ் சாஸ்திரமானது ஷெ வாசியோகிகள் யாவருக்கும் அதிகப்பயன்படு மாதலாலதை இந்நூற்குப்பின் இரண்டாம்பாகமாக வமைத்தும், ஷெசரயோகசாதனைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் கற்பமாதி ஔடதங்களையுந் தாமேசெய்தும், அன்றேல் எம்மிடத்து விலைக்கு வாங்கியுமுண்டு சுகதேகிகளாய் அறம், பொருள், இன்பம், வீடு, என்னுஞ் சதுர்வித புருடார்த்தங்களைப் பெருவார்களென்றும் இதைப் பிரசுரஞ் செய்யலாயினேன். இதிற் சொற்குற்றம்

பொருட்குற்றம் இவை முதலானவை யிருப்பினும் பொருட்படுத்தாது சாதுக்கள் இவ்வரியநூலை அங்கீகரிப்பார்களெனக் கோறுகின்றனன்.

இப்படிக்கு,
ஆலந்தூர்-கு. மகாதேவ முதலியார்.

உ
சிவமயம்.

ஔவையார் சரநூல் உபதேசித்தருளிய

சரித்திர சங்கிரகம்.

சிலகாலங்களுக்குமுன் பாண்டியநாட்டில் ஒரு வேளாளன் தன் சிறுவயதில் தன் தந்தையால் கல்விக்கழகத்திற்கனுப்பப்பட்டும் அறிவீனனா யிருப்பதைநோக்கிய தந்தையானவர் அடா துஷ்டா! பள்ளிக்குப்போவது பிள்ளைக்கழகென்பது அறிந்த உனக்கு உபாத்தியாயர் சொல்லும் ஒருமொழியேனும் மனதிற் பதியவொண்ணாதாவென்று மனஞ்சலித்துக் கொண்டதின்பேரில், இவனும் மனதுருதிக்கொண்டு தந்தையிஷ்டப்படி பள்ளிக்குப்போய் உபாத்தியாயர் திருவருளினால் என்ன உபதேசித்தருளியபோதினுங் கைவிடாது அதனைச் சாதிக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்திருக்கையில்,ஒருநாள்உபாத்தியாயர் வழக்கம்போலப்பிள்ளைகளை வாசிக்கச்செய்து,இப்பிள்ளையைப் பார்த்துக்கொண்டே கணேசா! வென்று தன் ஆசனத்தின்மீதுட்கார்ந்தார். அவ்வாக்கியத்தையே அவன் உபதேசமாகக்கொண்டு இரவும், பகலும், நினைவிலும், கனவிலும் வைராக்கிய மனத்தனாய் தியானித்துவர, ஸ்ரீவிநாயகக்கடவுள் மனமிறங்கி சன்னியாசி வேடம்பூண்டு இப்பிள்ளையைத் தன்னருகிலழைத்து பிள்ளாய்! உனக்கு என்னவேண்டுமென்று வினவ, அப்பிள்ளை நீர்யார்? உமக்கு என்மீதி லிவ்வளவுகிருபையுண்டானதற்கு காரணம்யாதென, அதற்கு ஸ்ரீவிநாயகபெருமான் மாறுத்தரமாக யான் கணநாதன் என்னையே வுன்றிருவாக்கினால் திடகாத்திர நிஷ்டாபரேரியாய்ப் பூசிக்கமனம்புளகித் திங்ஙனமெழுந்தருளினேனென, அப்படிக்கிருக்குமாயின், (அழியாகலைக்கிழங்கு) வேண்டுமென்றுசொல்ல, கணநாதன் மிக்க அன்புகூர்ந்து (ஔவையை)உபாசித்துக்கொண்டிருந்தால் உனக்கு அருள்செய்வாரென வுரைத்து மறைந்தனர்.

அதிமுதல் ஔவையை நோக்கி அறிய தவம்புரிய, சரஸ்வதியாகிய ஔவையார் இப்பிள்ளைக்குப் பிரசன்னமாகி வேண்டுவதைக் கேளென, தனக்கு (கலைக்கிழங்கு) வேண்டுமென்று சொல்ல அக்கணமே யான்சொல்லும் நூல் முழுவதையுங் கேட்பாயாயின் நீவினவிய கலைக்கிழங்கு கிடைக்குமென்றுருக்கியாபிக்க தாயே! அதனைத்திருவுளம்பற்ற வேண்டுமென் றஞ்சலியஸ்தனாக நிற்கப் பின்வருமாறு உபதேசித்தருளினார்.

சுபமஸ்து.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உயர்ஞான சர நூல்.

விநாயகர் துதி.

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

மணக்குமலாக் காவளப்பான் காழிதனிற் சதகிருது
வணங்கி யேத்தப்
பணைக்கரத்து குறுமுனிவன் கமண்டலத்தைக் காகவுருவாய்ப்
பரிந்து சாய்க்க
அணைக்கடங்காப் பிரவாகஞ் செய்தருள்ம தாவளவா
னனத்தான் செம்பொற்
றுணைக்கமலம் போற்றியௌவை ஞானசர நூற்காதை
சொல்லு வாமே.

அவையடக்கம்.

வெண்பா.

பித்தன்று ணய்ந்துணராப் பேரான காரியத்தை
சத்தமிட்டுக் கூறுந் தன்மையா—யித்தரையில்
கற்றேன்போல் யானுங் கழறுமிதைக் கற்றோர்கள்
குற்றமாய்க் கொள்ளார் குறித்து.

1 வது சரத்தின் விபரம்.

சரமென்பது-கலை, வாசி, சுவாசம், மூச்சு, பிராணன், ஆத்துமா வென்பதாம்; ஆதலால் உன் நாசியில்வரும் சுவாசமாகிய காற்றை நீ தலாவ தறிதல் வேண்டும்.

2-வது சரம்பார்க்கும் விபரம்.

உன்நாசியில்வரும் சுவாசம் இருவகைப்படும். அது இடப்புறம், வலப்புரமாய் ஓடிக்கொண்டேயிருக்கும், வலதுபுரம்வரும்சுவாசத்தின் பெயர் சூரியகலையென்றும், இரவிசரமென்றும் அதிபரமென்றும்,கதிரவன் திசையென்றும்,தினகரன் பக்கமென்றும், ஆதவன்திசையென்றும், அலரிப்பாரிசமென்றும், இதனையே ஆண்சரமென்றும் பிங்கலை யென்றுஞ் சொல்லத்தகும்.

இனி சந்திரனென்றும் இடதுசரத்தைஅதாவது இடப்புரம்,வருஞ் சுவாசத்தின் விபரங்கூறுவாம். இடது பக்கத்தில் வருஞ் சுவாசத்தின்பெயர் சோமன்கலையென்றும், சந்திரனுசியென்றும்,திங்கள்புரமென்றும், மதிதிசையென்றும் இஃதனையே பெண்சரமென்றுஞ் சொல்லத்தகும் ஆராய்ந்துபார்க்கின் இவ்விரண்டிற்கு மத்தியில் அதாவது இருபுரமும் நிறைந்தோடுதல் சுழிமுனையென்றும், ஜோதியுச்சியென்றும், வாசிர்ப்பாலமுதமென்றும், சூனியசரமென்றும் அக்கினி பாரிசமென்றும், நெருப்பாரின்படி யென்றுஞ் சூனியகலை யென்றும் அலி யெனினுமாம்.

3-வது சரத்தின் அளவு கூறல்.

சூரியகலையென்னும் ரவியானது 5-நாழிகை அளவும், சந்திரன் ஷை 5-நாழிகைநடப்பதன்றி, வேறன்று சூனியமோவெனின் 6-விநாடி நடப்பதரிதாம். சூரியன் நடக்குங்கால் வெளிவிடுகையில் -மாத்திரைஅளவும், உட்புகுங்கால் 6-மாத்திரைஅளவாம். சூனியமோவெனின், ரேசக, பூரகமெனும் மிவ்விரண்டு சமயங்களிலும் 5-மாத்திரை முறையே நடத்தலுமாம். சந்திரனும், சூரியன்போலாம்.

4-வது சரம்பார்ப்போர் அளவும் ஒழுக்கமும் மதிப்பும் ஆசனவிதியுங் கூறல்

சரம்பார்ப்போரியாவராயினும் அவரவர்மரபினுக்குகந்த வண்ணம் சத்குருவையடைந்து அவ்வாசிரியரைத் தன் தந்தையைப்போலுபசரித்து மனப்பூர்வகமாய்த் தொண்டுசெயல் வேண்டும்.

சரம்பார்ப்போர் இரவில் அதிக நித்திரையை விரும்பாமலும், சனக் கூட்டங்களில் நெருங்காமலும், சரீரபல மிருந்தும், மனோதிகமும் தர்மசிந்தை யுள்ளவராகவு மிருத்தல்வேண்டும். இவர்களுக்கு ஆசன மோவெனின் சம்சார பந்தத்தோருக்கு வெள்ளை வஸ்திரத்துடன் பத்மாசனமும், யோக அப்பியாசங்களுக்கு இரத்தினகம்பளம், வியாக்கிரமாசனம், மான்தோலாசனம், ஞானமதிப்பாலுண்ணும் மஹான்களுக்கு தற்பாசனத்துடன் தாரண ஆசனமாகிய சிங்க ஆசனம் கோமுக ஆசனம், கருட ஆசனம், இவை முதலியவை நலமாம்.

5-வது சிவராஜயோகமாகிய வாசியோக அப்பியாசிகள் சரம் நடத்தவேண்டிய காலமும் அளவுங்கூறல்.

வாரசரம்.

ஞாயிறு, சனி, செவ்வாய், இம்மூன்று நாட்களில் சூரியனும் வெள்ளி, திங்கள், புதன், இம்மூன்று நாட்களில் சந்திரனும் நடத்தலுத்தமம். மேற்சொல்லிய சூரிய சந்திர நாட்களில் எக்காலங்களிற் சரம் நடத்த வேண்டுமென்று வினவில், அதிகாலையில் 25-நாழிகை முதல் 30 நாழிகை வரையினும் நடத்தல் வேண்டும். வியாழமோவெனின், வளர்பிறையில் சந்திரனையும், தேய்பிறை காலங்களில் சூரியனையும் நடத்தல்வேண்டும். ஆயினும் சனிவாரத்தில் 25-நாழிகை முதல் 30-நாழிகைவரையினுஞ் சூரியகலை நடத்தல் உத்தமத்திலுத்தமம். மேற்சொல்லிய சரம் வினையளவாக நடவாமையாயினும் ஆசான் அனுக்கிரகிப்பராயின் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி வேண்டிய சரம் புற்றிலிருந்து சர்பஞ் சீறுவதுபோ லளவற்ற ஆனந்தத்துடன் வெளிப்படுத லுண்மையாம்.

6-வது ஆசானளவு.

ஆசானென்பது பரம ரகசியமாகிய கடவுளின் காருண்ய திருவருளேயாம் அத்திருவருளோ சமயோஜிதமாய் அவதாரமாயெண்ணுதல் வேண்டும் அதாவது சதா தன் சாதனையை உள்ளும் புறம்பும் மறவாத சிவபத்தியையே பூஷணமாய்க் கொண்டவராயும் வைராக்கிய ஜ்யேஷ்டராயும், சாஸ்திர புராணங்களாயும், மரபுநூல்களையுஞ் செவ்வையா யோர்ந்தவராயும், நல்லொழுக்கம், நன்னடக்கை, பளிங்கு போன்ற மனம், வாசியை நேசித்தலாகிய குணங்களையுடைய புண்ணிய புருடனையே ஆசானெனத்தகும்.

7-வது சரம் நடவாமைக்கு காரணமும் நடத்தும் வல்லபமுங் கூறல்.

சரியான காலப்பிரமாணமாய் சரம் நடத்தாமையாலும் நடத்தலறியாமையாலும் நடத்தலிலுண்மையென் றறியாமையாலும், நடத்துங் காலங்களில் கண் விழிக்காமையாலும், ஒழுங்கீனமாய்ப் பாவித்தாலும், தான் நடக்குந் துர்செய்கைகளினாலும் சதாவிலையில் பிரியப்படுவதாலும் திரேக வலுவில்லாதாலும் உண்ணுமுணவின் பேதங்களாலும், வியாதியினால் மெலிவதாலும், பெரியோரை மதியாததாலும் சதா தீமையே மனதிற் குடிபுகுவதாலும் பொய்பேசலில் அதிகவிருப்பங் கொள்வதாலும், முறைமையாய் நடத்தாமையாலும் அவைக்குறிய பத்திய மார்க்கத்தை யனுசரியாமையாலும் சரம் விகற்பப்படும் ஆயினும் மேற்சொல்லிய விஷயங்களுக்கு வித்தியாசப்படும்படி நடப்பதே சரம் நடத்தலுக்கு ஒழுங்காகும்.

8-வது சரம் நடத்துபவரின் பத்தியங்கூறல்.

சரம் நடத்து மொவ்வொருவரும் பிரதிதினமும் அதிகாலை 22½-நாழிகைக்கு மேற்படாமல் கண் விழித்தல் வேண்டும், 25-நாழிகை வரையில் சரம் நடக்க முயற்சி செய்தலோடு தரும தேவதைகளின் பக்தி, குரு விஸ்வாசம், தாய் தந்தைகளாகிய பெரியோரின் அன்பு முதலாகிய விவைகளில் மனஞ் சலியாமையோடும் மேற்சொல்லிய 25-நாழிகைக்குள் சரத்தை வசப்படுத்தல் வேண்டும். மேற்சொல்லிய நாழிகைக்குமேல் 5-நாழிகையளவும் விகற்பம் நேரிடாமல் காத்துக் கொண்டிருத்தலுடன் ஆசனம் விட்டெழுந்து மலவிட்டிருக்கிறநகளாகிய ஸ்ரீ விநாயகக்கடவுளை தியானித்து 5-கிராகனிடை கோமதம், 1½-கிராகனிடை சீனியை சேர்த்துண்டு அதிகநடை விரும்பாமல் லௌகீக வொழுங்குகளை நடத்தல் வேண்டும். அன்றியும் பகல் 15-நாழிகைக்குமேல் இதனது இரண்டாம் பிரிவில் எழுதியிருக்கும் ஆயுர்வேதத்தில் நோயணுகா விதியிற் கூறியுள்ள பதார்த்தங்களையும், மிக்க வலிமை தரத்தக்கவைகளாயும் புசித்தல் வேண்டும். அரைவயிறன்றி முழுவயிறு புசித்தலாகா கங்கையின்மீதுள்ள விருப்பத்தைத் தவிர்த்தல்வேண்டும். இரவில்பால் சேர்ந்த கோதுமைக் கஞ்சியன்றி மற்றவைத்தவிர்த்தல் நலம். சம்சாரபந்தத்தில் ஈடுபட்டவராயினும் மூன்று மாதங்களுக் கோர்காலன்றி சையோகந்தகா. இவ்விதியை அனுசரிக்கும் ஒவ்வொருவரும் ஆரம்பமுதல் 6 மாதவரையினு மேற்சொல்லிய பத்தியங்களுடன் ஸ்ரீ சையோகங்களைத் தவிர்ப்பராயின் சரம் எளிதிலுணரத் தக்கவராவர்.

9-வது முழுச்சரம் நடத்தலின் விபரங்கூறல்.

மேற்கூறிய வாரசரமும், பத்தியமும், அளவாய் ஓர் அயனகாலம் செவ்வையாய் நடந்துவருமாயின் ஆறு அயனங்கள் வாரசாரமாய் நடத்தி அதுமுதல் பகல் முழுவதும் சூரியன், இரவு முழுவதும் சந்திரனுக இவ்வண்ணம் நடத்தல் வேண்டும். இவ்விதிப்படி மூன்று அயனங்கள் நடத்தி, சரத்தை முடிவுசெய்யுங்கால் சரம் பொந்தியோடு நீரும் பாலுபோற்கலந்து, ஒற்றுமையாதலுடன் சரீர அழிவில்லாமல் யோக சாதனங்களுக்கு வேண்டியகாலம், சரீரத்தை சரமே போஷகராயிருந்து நிலைப்பிக்கும். ஆதலின் யோக அப்பியாசிகளாகிய வியாவரும் சரம் நடத்தலே முதல் யோகமாய்க் கொளல்வேண்டும். சரத்தை வயப்படுத்தாமல் பிராணன் பொந்தியைவிட்டு நீங்காமலிருக்க வேறு மார்க்கம் அறிவதரிது.

10-வது சூரியன் சந்திரன் நடக்கவேண்டிய காலங்களில் நடக்கத்தக்க காரியாதிகளைக் கூறல்.

சூரியகலை நடக்குங்காலையில், யோக அப்பியாசஞ்செய்யத் தொடங்கல், மந்திரசிட்டை சாதித்தல், ஔடதமருந்துதல், சாஸ்திரவாராய்ச்சிச் செய்தல், உண்டி சாப்பிடுதல், லாகிரியாகிய பாஷாணங்களைப் பரிக்ஷித்தல், ஔடதமுடித்தல், நீரருந்தல், சாவகாசஞ்செய்தல்,பேசத் தொடங்கல், நூல் முதலாகிய கவித்துவஞ்செய்தல், ஒருவரைசோதித்தல், ஸ்நானபானங்கள் செய்தல், குதிரையைச் சவாரி செய்தல், சயனித்தல், பெரியோர்களைத் தரிசனஞ் செய்தல், பூமியில் புதைத்த தனத்தை யெடுத்தல் இவை முதலியவைகட்கு நலமாம். சந்திரகலைக் கோவெனில் தன்மதானஞ் செய்தல். ஆபரணுதி அணிதல், வரவிமுதலாகிய நீர்சுரங்களெடுத்தல் விவாகமுடித்தல் ஆகியவிவைகள் நலமாம். ஆயினும், சூரிய காலங்களில் உஷ்ண மிகுதியாதலாலும், சிலேத்தும காலங்களிற் சுழிமுனையா யிருத்தலாலும், ஏறுமாறுகவுண்டியும் மறச்செயல்களும் நடத்தல் நலமாம். சூனிய கலைக்காலத்தி லெக்காரியமுந் தவிர்ப்பது நலம். ஆனல், யோக சாதனைக்கோவெனின் மனம் நிலைக்க சமாதியோகஞ் செய்தலே நலம்.

11-வதுசரத்தை வசப்படுத்தும் விபரங்கூறல்.

(அதிகாலையில் 25-நாழிகைக்குமேல் நடத்துஞ்சரமும், மேற்சொல்லிய பிரகாரம் காரியாதிகளை நடத்துஞ் சமயங்களிலுள்ள சரமும் ஏறுமாறுக யிருப்பினும் அதை சரிபடுத்தும்விவரங்கூறுகின்றது) எவ்வாறெனின் சரம் திரும்பவேண்டிய காலங்களிற் சூரியன் நடக்க சந்திரன்வேண்டுமாயின்சூரியனைப்பெண்ணுகவும்சந்திரனை ஆணுகவும் சந்திரன் நடக்க சூரியன் வேண்டுமாயின் சந்திரனைப்பெண்ணுகவும்,

சூரியனை ஆணகவும் பாவித்து, கீழ்மேலாகச்செய்விக்க சூரியன்வேண்டிய காலங்களிற் சூரியனும் சந்திரன் வேண்டிய காலங்களிற் சந்திரனும் நடத்தலாகும். மேற்சொல்லிய விதிப்பிரகாரம் நடவாமையாயின் கீழ்ச்சரம் வலுவாயிருத்தலால் பிரளவில்லையென்று மேற்புறம்நாட கருவியைக் கீழ்ப்புரமாய்ச் சொறுகச்செய்து, பக்கவிலாவின் கீழ்நாலரை அங்குலப்பிரமாணம் கம்பளமாயினும், பட்டாகினும் சுத்தவஸ்திரமேனும் பூமிமட்ட முயர்த்தல் வேண்டும் அப்படியு மேற்சொல்லிய விபரங்கட்கு சரிவராதிருப்பின் யோகசாதனை யுள்ளோர், மூலாதார அப்பியாசமாகிய கீழாதாரத்தை சுத்தப்படுத்தல் வேண்டும். ஷெ அப்பியாசமில்லையாயின் ஆசான்றிருவருளைத் தியானித்து தகுந்த சிகிச்சை செய்துக்கொள்ளல் வேண்டும். இவ்வழிமையான காரியத்தைச் செய்தல் புண்ணிய புருடர்களுக்கன்றி மற்றவர்களுக்கு வாய்ப்பதரிதாம். அப்படி ஓர் கால்வாய்க்கினும் நடத்தலரிதெனவே சொல்லத்தகும் ஆதலின் மகா கவனத்துடனும் சிரத்தையுடனும், நடத்தப்பட வேண்டும் சூனியரசம் வேண்டுமாயின் திரேகம்சமமாய் பத்மாசனத்திலிருக்கச்செய்து சூரியனதிகப்படுங்காலத்திற் சூரியன் பக்கமாகவும், சந்திரனதிகரிக்கில் சந்திரன் பக்கமாகவும் உயிரெழுத்தாகிய மவுனாக்ஷரத்தை பதமாயமைத்து சிறுகச்சிறுக மிதிப்பித்து, சூரிய சந்திரர்களை நேசிக்கச்செய்து, சூனிய சரமாக்கி யோகாப்பியாசஞ் செய்பவரே கலியுகயோக புருடராகவும், வேண்டும்போது சித்து விளையாடுபவராகவும் சொல்லத்தகும். சூனியசரம் சம்பாதித்த லெளிதாக விருப்பினும் சுழிமுனையைக்காக்கும் (வேஸ்த்து) வாயுவை அசையாமல் செய்வித்தலே மிகவரிதாம். ஆதலின் இவ்விதிகளை மகா ஜாக்ரதையாய் அறிதலும் நடத்தலும் வேண்டும்.

12-வது சிவராஜ யோகமாகிய வாசியோகத்தின் விபரமும், அதற்குறிய சரத்தினியல்பும் கூறல்.

சரம் நடத்துங்கால் யோகவப்பியாசமும் வேண்டுமாயின், பராபர வஸ்துவென்னும் மூலாதாரப்பொருளாகிய ஸ்ரீ விநாயகக்கடவுளை பேரின்ப வாழ்க்கையிலமைத்தல் வேண்டும். நமக்குள் மறைவிடமான விடங்களில் மாயாவிட் டிருக்கிறதுவைத் தேடல் வேண்டும். வினையாகிய இருளை யகற்றல் வேண்டும், பிராணனை உண்மையால் துள்ளிதம்போற் றுலக்கல்வேண்டும் சுழிமுனையிற் சுடரையேத்தியோர்மனதாய் நிற்றல் வேண்டும், சுவாசமாகிய வாயுவைப் பிராணனுல் நேசித்தல் வேண்டும், பிராணனும் ஜடலமும் ஏகோபித்து நீரும் பாலுபோற்கலந்து பூரித்தலே (சிவராஜயோகமாம்) இஃதனை அனுஷ்டிப்பவரே பரம யோகிகளாவர். ஆதலின், இதனையு மனுஷ்டிக்க வேண்டும். இதனை யனுஷ்டிக்குங்கால் உண்ணும்போதும் உறங்கும்போதும் உயிரெழுத்தாகிய மௌனாக்ஷத்தை ஏழுமாத்திரை

யிருத்தி உட்படுத்திவைத்து சரத்தைச் சுழிமுனை அதாவது, சூனியகலையில் வைத்திருந்து ஆசனபங்கமில்லாம லப்பியாசிக்க வேண்டும் அக்காலங்களில் சூரியன்மேற் கூரிய பிரமாணம் வயப்படா தாயினும், சூடு கபாலமாகிய வுச்சியில் பற்றினும் அடி சிறுத்து நடக்கி னும் அச்சாதகத்தை நிறுத்தி றஞ்சித கோபானஞ் செய்தல் நலம்.

13-வது சந்திரகலையிலிருந்து அமுதம்புசிக்கு மார்க்கமும் அதனியல்புங் கூறல்.

நவத்துவாரங்களிற் பெரியதும் உறுதியுமாய் நடுவிலிருக்கும் அசைக்கருவியென்னும் இரண்டா மெழுத்தாகிய நகரத்தை இரண் டரை அங்குலப்பிரமாணம் உள்வாங்கி மேற்சொல்லிய அப்பியாசங் களை இடைவிடாமல், இருபத்துநான்கு அயனங்கள் நடத்துங்கால், இடபவாகனராகிய சதாசிவக் கடவுளின் றிருவருளாகிய வமுதமும் சிரசிற் சிந்துமென்றறிவாய் அதன்பெருமையோ சொல்லத்திறமன்று ஆயினுமிதனைச் சாதனைசெய்தல் வேண்டும்.

14-வது மேற்கூறிய வாரசரங்கள் தப்பினடக்கினும் ஏறுமாறாய்ப் பிசகி நடப்பினு மதின்பலன் கூறல்.

முதனாளாகிய ஞாயிற்றுக்கிழமையிற் சூரியன் நடவாமல் (5) நாழிகையளவும் சந்திரன் நடக்குமாயின், படை, குட்டம், சொறி சிரங்கு முதலாகிய திரேகத்தின் மேற்புரமான வியாதிகளும், சளி இறுமல், இரப்பு, முதலாகிய உள்வியாதிகளும், அடரும் செவ்வாய்க் கிழமையிற் சந்திரன் நடக்குமாயின், மனக்கலக்கம், சினேகத் துவேஷம் சுரம், உட்சுரம், இவைகளடரும், சனியிற் சந்திரன் நடக்கு மாயின், பிராணனுக்கு அபாயமான தத்துகளும், சீதளம் சன்னி முதலாகிய வியாதிகளு மடரும் சந்திரனடக்க வேண்டிய வளர்பிறை, வியாழத்தில் சூரியன் நடக்குமாயின்; பொருட்சேதமும் வியாதிக்கு மருந்து பிடிக்காமையுமாம்; சந்திரனடக்க வேண்டிய வாரங்களாகிய திங்கட்கிழமையில் சூரியன் நடக்குமாயின் ஆயுள் குறைவும், ஜலதோஷமும் அடரும், புதன்கிழமையில் சூரியனடக்கு மாயின் அபாயங்களும், தொடுத்த விஷங்கள் பலியாமையும், பாரம், நீரேற்றல், தலைக்குத்தல் உண்டாகும். வெள்ளிக்கிழமையில் சூரிய னடக்குமாயின், தன் மக்களுக்கு தோஷமும், சுற்றத்தார் கலக்கமும், கண்ணோய், காதுநோய்களு முண்டாகும். தேய்ப்பிறை காலமாகிய வியாழத்தில் சந்திரன் நடக்குமாயின் மஹா ரோகங்களும் சாதனைக் குறைவும் தாபசுரம், தலை நோக்காடும் மடரும்.

15-வது பாழாய் நடத்திலின் குணங்கூறல்.

இருகலைகளுந் தவறித்தவறி யோடுமாயின் ஜலதோஷமேயன்றி வேறன்று ஒருபுறமாய்ச் சாதகஞ்செய்யுங் காலமாகிய அயனசரம், முடிவிலன்றி இதற்கு முன்பாகவே ஓர்நாள் முழுவதும் ஒருபக்கமாய் சரம் நடக்குமாயின் மூன்று மாதங்களில் மரணமெனினும், மூன்று வருஷங்களில் மரணமாவார், ஒருபுறமாகவே ஆறுநாள் நடக்குமாயின் ஆறு திங்களில் மரணமாதல் நிச்சயம். ஆதலின் சரம் சரிவரநடத்தல் மிகவும் அருமையென்றுணர்தல் வேண்டும்.

16-வது மேற்சொல்லிய சர விகற்பங்களுக்கும் சாதனை களுக்கும் வேண்டிய பத்தியங்களும் கற்பங்களுங்கூறல்.

மாந்தர்களிற் மேனியுடைய பிள்ளாய்! 14-ம் படியிலுரைத்த வாரசர பேதங்களுக்கு சிகிச்சையும், பக்குவமும் அறிவாயாக. அதாவது மேற்சொல்லிய வியாதிகளுக்கு ஆயுர்வேத அளவாய் நடத்தலதிய வசியம். பாழாய் நடக்குஞ் சரத்திற்கோவெனில் முன் 12-ம் படியிலுரைத்த வாசியோகமே இதற்கேற்ற சிகிச்சையாம். இச்சரங்களை நடத்தியும் வாசியை வயப்படுத்தும் வகையறிந்தும்,காலபேதப்படிசிகிச்சைகளைச் செய்வதுடன் மனவுறுதிக்கும், திடச்சித்த முண்டாதலும் திரேகசித்தி, மனசித்தி யாதலுக்கும், கற்பமுறைக்க கேட்பாயாக. அவையென்னெனின், மிளகோரயன காலமும், சூரணம் இரண்டுபக்ஷங்களும், கேசரிமெழுகு ஆறுபக்ஷங்களும், வெள்ளைக்கல்பமாகிய கணக்கல் சுன்னம்பத்து பக்ஷங்களு முட்கொள்வதே கற்பமாம்.

17-வது கல்பங்களின் விபரங்கூறல்.

மேற்சொல்லிய படியில் கல்பவதிக்குத்தெளிவுகூறுமையால் இனித்தெளிவாயாக,அதாவது மிளகென்பது மிளகும் பச்சிலையாம்—இவை முடிவுபெறச்செய்து சூரணங்கொள்ளல். சூரணமென்பது நீலிபச்சிலை வல்லாரை, வெள்ளைக்கிரட்டான், பிரமி, பொற்றலை, பொடுதலை, இவைகளைச் சூரணமாக்கல். கேசரிமெழுகென்பது கேசரிதைல மூலியமாய் லிங்கக்கட்டுடன் சில மூலிகைகளை அமைத்து பாகஞ் செய்துக்கொள்ளல். வெள்ளைக்கல்பமாகிய கணக்கல் சுன்னமென்பது நூலந்தியம் அதாவது முடிவுபெறப் பார்க்குதல் என்பதாம் இவைகளை நன்குணர்தல் வேண்டும்.

18-வது கல்பம்செய் பாகமும் உண்ணும் அளவையுங் கூறல்.

2½-வீசை மிளகை பதினாறும்படியிற்செப்பிய அளவின்படி பகிர்ந்து, பிரதிதினமும், பொற்றலைகையான் தகரை சமபாகமாய்ச் சேர்த்துண்ணல் வேண்டும். சூரணமோவெனின், பதினேழாம்படியிற் சொல்

லிய பச்சிலைகளைத் தனித்தனி வுலர்த்தி ஆறுபலம் சூரணமாக்கி வைத்துக்கொண்டு 16-ம்படியிற் கூறிய அளவுக்குப்பகிர்ந்து சொர்ணப்பால் சமபாகமாய்ச் சேர்த்து சாப்பிடல்வேண்டும் கேசரிமெழுகோவெனில் கேசரியை முறைப்படி வுலர்த்தி தைலமிறக்கி 12-புட்டி தைலத்தால் மூன்று விராகனிடை லிங்கக்கட்டிக்கு சுருக்கு கொடுத்து தைலம்முடிந்தவுடன் லிங்கக்கட்டை யெடுத்து வாசிக்குதவும் பச்சிலைகளைச் சார் பிழிந்து இரண்டு படிசாற்றி 5-பலம் சீனி அறுகன்வேர் கியாழம் ஆழாக்குவிட்டு கலக்கி மூன்றுநாட் சென்றெடுத்து ஷை சாற்றில் கலக்கி பசுநெய் 5-பலம் விட்டு லேகியபதமாய்க்கிண்டி யிறக்கி ஷை லிங்கப்பட்டை நன்னிக்கல் கலவத்திற்பொடியாக்கி சமபாகங்களாய் பொட்டகஞ்செய்து லேகியத்தையும் பாகித்து உண்டைகளாக வமைத்து இரண்டையுஞ் சேர்த்து வுண்ணல்வேண்டும்.

19-வது கற்பமுண்ணுங் காலமும் பத்தியமுங் கூறல்.

கல்பமும் அதற்கேற்ற காலமும் பத்தியபாகமும் செவ்வனே அறிந்து நடத்துத லெளிதாகயிராவிடினும் மேற்சொல்லிய பிரகாரம் பாகப்படுத்தி சாதனைக் காலங்களில் சூட்சும சரம்பார்த்து அருந்துதல் மிக அருமையாகவும் பெருமையாகவு மிருக்கும்.

20-வது பஞ்ச பூதியின் விபரங்கூறல்.

பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பவைகளே பஞ்சபூதங்களென்று சொல்லப்படும் இவையுள், பிரிதிவுயென்பது நிலம் அல்லது மண் அப்புவென்பது நீர் அல்லது ஜலம் தேயுவென்பது அக்கினி அல்லது தீ வாயுவென்பது காற்று அல்லது வளி ஆகாயமென்பது, விசும்பு அல்லது சப்தமாகிய வியோமம். இவைகள் அண்டத்துக்கேற்றதாயினும் பிண்டத்தினுமுண்டெனக் கொள்ளல்வேண்டும்.

21-வது மானிடவுருவ பஞ்சபூதியங் கூறல்.

பிரிதிவு என்பது தேகம், அப்புவாயுவுண்டாகுமாகையால் ஜலத்துக்கேற்ற விடமெனக்கொள்க, தேயு ஒளியையுடைய கண்ணெனக் கொள்க, வாயுவென்பது காற்றுண்டாகும் நாசியெனக் கொள்க, ஆகாயமென்பது சப்தமுண்டாகுமிடத்தை யுணர்த்துங்காதென கொள்க.

22-வது சரத்தின் பஞ்ச பூதியங்களைக் கூறல்.

மேற்சொல்லிய பஞ்சபூதியங்களைச் சரத்தில் பார்க்குஞ்சமையங்களில் சந்திரன்நடக்கினுஞ் சூரியன்நடக்கினும் மூக்குத்தண்டிற் சார்ந்துவரும் சுவாசம், பிரிதிவு என்றும், கீழ்நோக்கி நடக்கில் அப்புவென்றும், மேல்நோக்கி நடக்கில், தேயுவென்றும், மூக்குத்தண்டின் எதிர்

பக்கமாய் வருஞ்சுவாசம் வாயுவென்றும், நாற்பக்கங்களிலும் படாது பெருகவோடுவது ஆகாயமென்றும் முறையேகொள்க.

23-வது பஞ்சபூதியங்கள் நடக்கும் அளவும் காலங்கூறல்

பிரிதிவு 12-அங்குலமும், அப்பு 16-அங்குலமும், தேயு 8-அங்குலமும் வாயு 18-ம் ஆகாயம் 6-அங்குலமும் நடக்கும். இவைகட்கு காலமோவெனின் பிரிதிவு 1-நாழிகையும், அப்பு 1½-நாழிகையும், தேயு 7-நாழிகையும் வாயு 1½-நாழிகையும், தேயு 1-நாழிகையும் வாயு 1½-நாழிகையும், ஆகாயம் 1-நாழிகையும் ஆகிய அளவாய் நடக்கும். இவைகளின் நன்மை தீமை அறியவேண்டின் பிரிதிவு அப்பு நன்மையெனவும், தேயுமத்திபமெனவும், வாயு ஆகாயம் தகாதவைகளெனவுஞ் சொல்லத்தகும். யோக அப்பியாசத்திற்கு தேயுவே தக்கதெனக்கொள்க.

24-வது பஞ்சபூதியம் முறையே ஒவ்வொன்றுங் குறைவதைக் கூறல்.

பிரிதிவுக்கு அப்பும், அப்புவுக்கு தேயும், தேயுவுக்குவாயும்,வாயுவுக்கு ஆகாயமும் குறைந்தது எவ்விதமெனின், பிரிதிவுக்கு,ஸ்பரிசம் ரூபம், ரசம், கந்தம், சப்தமுமுண்டு அப்புகந்தங் குறைந்ததால் பிரிதிவுக்கு அப்புகுறைந்ததென்றும், தேயுவுக்கு கந்தமும் ரசமும் குறைந்ததால் அப்புவுக்கு தேயுகுறைந்ததென்றும். வாயுவுக்கு கந்தம் ரசம் ரூபம் குறைந்ததால் தேயுவுக்கு வாயு குறைந்ததென்றும் ஆகாயத்திற்கு ஸ்பரிசம் ரூபம் ரசம் கந்தம் குறைந்தால், வாயுவுக்கு ஆகாயங்குறைந்ததென்றும் முறையே கொள்ளல் வேண்டும்.

25-வது சூக்கும சரத்தின் விபரங்கூறல்

சூட்சுமசரமென்பது நிறத்திலறுவதாம். இதனையறிவதருமையாதலின் சூக்குமசரமென சொல்லலாயிற்று. பிரிதிவு பொன்னிறமாகவும், அப்பு வெண்மை நிறமாகவும், தேயு செம்மைநிறமாகவும், வாயு கருமைநிறமாகவும் ஆகாயம் நீலநிறமாகவுங் கொள்ளல்வேண்டும்.

26-வது சரம் நடத்துவோர் கவனிக்கவேண்டிய முக்கிய விதிகளைக் கூறல்.

முன் 8-ம் படியிலுரைத்தவிதம் நடத்தலுடன், சோம்பல், உரத்திகொட்டாவிடுதல், கோபம் அதிகரிக்கும்படி செய்துகொள்ளல். சந்தோஷத்தைப்பெருகச்செய்தல் இவைமுதலியவைகள் தகாவாம்.

27-வது ஆயுள் குறையுஞ் செய்கைகளைக் கூறல்.

அதிக விரைவாயோடுதல், அதிக நித்திரை செய்தல், மிகபெருமூச்சு விடுதலுமாகா, ஏனெனின் சாதனைக்காலங்கள் தவிர மேற்சொல்

லிய காலங்களிற் சுவாசம் அதிகரித்து ஒருநாளுக்கு நடக்கவேண்டிய 21600-க்கு அதிகப்படுவதால் ஆயுள் குறைதலெனவும், மேற்சொல்லிய 21600-க்கு குறையும்படி செய்வித்தல் ஆயுள் விர்த்தியாகுதலெனவுஞ் சொல்லப்படும்.

28-வது மேற்சொல்லிய பஞ்சபூதியங்களைத்திருப்பி வசப்படுத்தும் மார்க்கங் கூறல்.

11-வது படியிலுரைத்த வண்ணம், சூரியகலை, சந்திரகலை, சுழிமுனைகளை மாற்றுவதுபோலவே இவைகளையு மாற்றுதல் வேண்டும். எப்படியெனின் திரேகத்தைக் கவிழ்த்து உந்தியில் மேடிருக்கச் செய்து ரேசகபூரங்களை மிதமாய் நடத்திக்கொண்டேவர திரும்பிக் கொண்டேவரும் வேண்டிய பூதியம் நிருத்துங்கால் அச்சாதகத்தையும் நிருத்திவிடல் வேண்டும்.

29-வது சூரியசந்திர சுழிமுனைகளுக்கும் நாடிகளுக்கும் ஒற்றுமையாதலைக் கூறல்.

திங்களெனுஞ் சந்திரன் வாதநாடியெனவும், ரவியென்னுஞ் சூரியன் பித்தநாடியெனவும், சுழிமுனையை சிலேத்தும நாடியெனவும் சொல்லப்படும் அதாவது வாதபித்த சிலேத்துமங்கள் 5-ம் படியிற் கூறியவிதம் வாரசரம் அளவாம் நடத்தலாலதனைச் செவ்வையாயறிதல் வேண்டும்.

30-வது ரேசக பூரத்தின் விபரங்கூறல்.

ரேசகமென்பது உட்புகும் சுவாசம், அதனை உட்சுவாச மெனவும் பூரக மென்பது வெளிவிடும் சுவாசம் அதனை நிசுவாசமெனவும் ரேசகத்தைச் சிவமெனவும், பூரகத்தை சத்தியெனவும் உட்புகும் சுவாசம் பிராணவாயுவெனவும் வெளிவிடும் சுவாசம் கரியமலவாயுவெனவும், உட்புகும் சுவாசம் அமுதமெனவும் வெளிவிடும் சுவாசம் விஷமெனவும் இவைகளையே நன்மை தீமைகளாகக் கொள்ளப்படும் ஸ்ரீகளும் மேலுரைத்த விதிகளியாவையும் நடத்தலுக்கு ஒழுங்கெனவே சொல்லத்தகும்.

சுபமஸ்து

ஔவையார் உயர்ஞான சரநூல்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தினக்கிரமா லங்காரச் சுருக்கம்.

முகவுரை.

சர்வஜீவ தயாபர கடாக்ஷ வீக்ஷண்யத் திருவருட் பொழியும் வள்ளலாகிய சிவபிரானின் கருணைபெற்றிலகும் அன்பர்காள்! இவ்வுலகின்கண் வாழும் ஆன்ம கோடிகளெல்லாம் பிராரத்துவ கன்ம சம்பந்தத்தா லுண்டாகும் வியாதிகளால் கட்டுபட்டவர்களாகவே யிருக்கின்றனரென்பது அனுபவ காட்சியன்றோ? ஆதலால் அநாத முத்தனாகிய பதியின் காருண்யத்தினாலான வமலத்தினின்றும் வெளிவந்த அனாதிபெத்தர்களாகிய ஆன்மாக்கள் மாயைபினிடத்து பெற்ற தனு கரண, புவன போகங்களில் முக்கியமாய்த தனுவாகிய தேகமானது, தர்மார்த்த காம மோக்ஷமெனுஞ் சதுர்வித புருடார்த்தங்களா லுண்டாகிய பேரின்பத்தை அடைவதற்குப் பெரிய சாதகமானதா யிருந்தபோதினும், இத்தகைய தேகத்திற்கு கன்மானுசாரமாகவரும் வியாதிகள் 4448-நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டும் நீக்கவல்ல பண்டிதராகாவிடினும், சித்து புருடர்களாகிய ஜீவன் முத்தர்களின் க்ருபா நோக்கத்தினால் நமக்கு முக்கியமா யேற்படுத்தி யிருக்கும் நிபந்தனைகளை யாவருமுணர்ந்து நோயின்றி சுகஜீவிகளாக விளங்கற்பாலதாகவும், இதன் முதற்பாகத்தி லெழுதியிருக்கும் நூலை அனுபவிப்பவர்கட்கு மிக்க அனுகூலமாக யிருக்குமென இரண்டாம் பிரிவில் "தினக்கிரமா லங்காரச் சுருக்க" மென நாமகரணமளித்து இங்ஙனமெழுத லாயினேன். சாதுக்கள் இதினுண்மையை அலட்சியஞ்செய்யாது நன்குணர்வார்களென நம்புகின்றனன்.

இப்படிக்கு,

எழுமூர், நேட்டிவ் டாக்டர் வீ. இராமலிங்கதேவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

தினக்கிரமா லங்காரச் சுருக்கம்.

கணேசர் வணக்கம் - நேரிசை வெண்பா.

சீருலகோர் கட்கினிதாந் தினக்கிரமா லங்காரப்
பேருலவு நற்சுருக்கம் பேசவே—நேருலவு
முத்தருடன் பத்தர்களு நித்தந்துதி வத்திமுக
துத்யவைங்க ரன்று டுணே.

அவையடக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

உற்றசிறு சங்கினு லுத்திநீர் வற்றவைக்கு
முவமை போலும்
விற்பனர்கள் தம்முனங் கல்லாதான் பேசுகின்ற
விதத்தைப் போலும்
பொற்புயரும் ஞானசர நூற்குதவி யாய்ச்சொன்ன
புல்வன் வாக்கை
நற்றவருங் கற்றவரும் பிழைநீத்து கருணைசெய
நாடி னேனே.

1-வது நோயணுகா விதி.

உலகினிடத்து திருவருட் செயலால் அரிய பிறவியாகிய மானிட தேகத்தை யெடுத்திராநின்ற மக்களனுசரிக்கின்ற பலவித நிலையினுங் கடத்தைக் காத்துக்கொள்ள வேண்டுவ தத்தியாவசிய மாதலால் அதற்கு முக்கியமான காரியார்த்தங்களை இங்ஙனங்கூற வந்தமையால் முதலாவது நோயணுகா விதியென்பதை வெளிப் படுத்துகின்றது. அவை யென்னெனின், மலசலத்தையடக்காமலும் விந்துவை அதிகமாக நஷ்டப்படுத்தாமலும் உண்ணுமிடத்து நீரைக் காய்ச்சி மோரைவிளாவி, நெய்யுருக்கி உண்ணுதலுமாகிய தன்மை யுள்ளவர்களின் நாமத்தை யுச்சரிப்பவர்கட்கும் பிணி விலகும். அன்றியும் பதார்த்தங்களின் குணங்களையும், அவைகளைப் புசிக்க வேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசித்து அதனால் கிடைக் கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் பலவாகச் சொல்லப்பட்ட வியாதி களைக் காணுதவர்களாய்ப் புத்திரர்களையும், மலையைப்போல் உறுதி யுள்ள சரீரத்தையும், இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமாதேவனைப்

போல மிருந்த ஆயுளையும்பெற்று பதினாலுலகத் திருப்பவர்களுங் கண்டு களிக்கத்தக்கதாக வாழ்வார்கள். இவ்வாறே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரும் மருந்து என்னும் அதிகாரத்திற் கட்டளை யிட்டனர், அவையென்னெனின், ஒருவன் முன்னுண்டது அற்ற படியையறிந்து பின்மிகப்பசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன் மாறுகொள்ளாமை யாவது, உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற்றம்முள மாறுகொள்ளாமையுமாம், மாறுபாடில்லாத வுணவுகளேயானாலும் மனம் வேண்டிய மட்டிலுண்ணாமல் பிணிவாரா அளவினாலுண்ணல் வேண்டும். இவ்வாறுண்பவன் உயிர் பிணிகளாற் றுன்பமுறாமல் சுகமுறுவன். ஒவ்வொருவரும் அதி உஷ்ணகாலத்தில் விழித்துச் சுத்தோதகமெனும் நீராகாரம், அல்லது நல்லஜலம் பிரமாணமாகப் பருகிப் பாதசாரியாய்நடந்து, மிதவசனம் வசனித்து, மாலைவெயிலை விரும்பி, பசும்பாலைபிச்சித்து, எண்ணெய் நாலுதினத்துக் கொரு தரம் அப்பியங்கனஞ் செய்யும் போது வெந்நீரிற் குளித்து, பகற் காலத்தில் சையோகம் நித்திரை இவை செய்யாமல் தன் வயதுக்கு மேற்பட்ட மாதரையும் இளவெயிலையும் இச்சியாமல், மலசலங்களை அடக்காமல், சுக்கிலத்தை அடுத்தடுத்து விடாமல், இடதுகைக் கீழாகபடுத்து மூலரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தங்களை யுண்ணு மல், நீர்போலிருக்குந் தயிரைப்பருகி முந்நாளிற் சமைத்தகறி அமிர் தத்துக் கொப்பானாலும் புசியாமல் பசித்த போதே சாப்பிடுதல், அவையாவது தினமிரண்டுதர முட்கொள்ளல், மாதரை மாதத்திற் கோர்தரஞ் சேர்ந்து, மிகுந்த தாகமுண்டாயினும் போஜன முடிவி லன்றிப் பின்பு ஜலபானஞ் செய்யாமல், கருணைக்கிழங்குதவிர மற்ற கிழங்குகளை தின்னாமல் வாழை இளம்பிஞ்சைப் புசித்து இரவிற் சாப்பிட்ட பின்பு குறுநடையாக நடந்து, ஆறுமாதத்திற் கொருதரம் பேதியாகும்படியாயும் மருந்துண்டு ஒன்றரை மாதத்திற் கொருதரம் நசியஞ்செய்து மாதத்திற்கு குறைந்தது இரண்டு விசை சவளஞ் செய்து மூன்று நாட்கொருதரம் கண்களுக்குமையிட்டு, கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும், புட்பங்களையும், நடுராத்திரி யில் முகராமல் தூரஸ்திரீ நடக்கும்போது பறக்குந் தூசியும் ஆடு கழுதை துடைப்பம் இவைகளாலுண்டாகுந் தூசியும், மேலே படும்படி நெருங்காமல் இரவில் தீபத்தினிழல் மனிதர் நிழல் விருட்ச நிழல் இவைகளிற்றங்காமல் போசனம் ஜீரனிக்கும் காலத்திற் புணர் ச்சி செய்யாமல் நித்திரை போசனம் மலசலம் புணர்ச்சி அழுக்கு வஸ்திரம் சீப்பிட்டு சீவும்போது சிந்துகின்ற ரோமம் ஆகிய இவை களை மாலைக்காலத்தில் நீக்கி நன்றோடுகூடிய பசுவையும் தெய்வத்தை யும் பிதுர்தேவதைகளையும், ஆசிரியரையும் அம்மாலைக்காலத்தில் பூசித்து, நகச்சலமும், சிகைச்சலமும் தெரிக்குமிடத்தி னெருங்காமல்

நடந்துவந்தால் நோயை முன்னிட்டுவரும் எமனுக்கு இவனிடத்தில் வேலையில்லையென்று நோயணுகா விதியிற் சொல்லியபடியால் ஒவ்வொருவரும் இதனை அவசியகரமாய் அனுபவத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

2-வது சரீரம் நிலைபெறுவதற்குக் காரணம்.

சரீரமாகிய தேகம் தங்கியிருப்பதற்குக் காரணமாகிய, வாதம், பித்தம் சிலேஷ்மம் இரசதாது இரத்ததாது மாமிசதாது, மேதோதாது அஸ்திதாது மச்சைதாது சுக்கிலதாது மலம் மூத்திரம் என்னும் பாரீராதி 12-களின் வருத்தி சிரணங்களினால் பிறக்காநின்ற நோய்கள் முழுமையும் நீக்குதற்கு முக்கியமாய் வேண்டிய மருந்துக்களோடு மேற்கண்ட ஜடாராக்கினியின் குணோதயத்தால் உணவுகளினின்றும் பிரிகின்ற அன்னரசத்தால் போஷிக்கப்பட்டு புஷ்டியாக்கிப் பூரிக்கப் பண்ணி பலத்தையுங் காந்தியையும் நிரந்தரமாக கொடுத்துக்கொண்டு உயிராகியஅரசனை வாழச்செய்தும் கருப்புவுற்பத்திக்கு காரணமாயும் தேகத்திற் காதாவாயுமாகிய சப்ததாதுக்களில் புருடர்கட்கு சுக்கிலமென்றும் மாதர்கட்குச் சோணிதமென்றுஞ் சொல்லப்படும் இவ்விரண்டும் முறையே சிவம் சத்தியென்றும் பெயர்பெற்றுக் கருப்பவுற்பத்திக்கும், ஆயுள்விருத்திக்கும் முக்கியகாரணமாக விருக்கின்றன இவை அகாலபோசனம் உஷ்ணபதார்த்த பக்ஷணம் பயம் துக்கம் வியாகூலம் சிந்தித்தல், மிகசந்தோஷம் அதிககோபம் மாரணஓமம் கருமலோபம் அதிதூலரோகம் அதிசாரரோகம் சீரணத்தாது விஷபேதங்களால் வருகின்ற பற்பலரோகம் காலத்தினும் காமநூல் விதிப்படி அநேகபந்தங்களுடன் செய்கின்ற சையோகம் அதாவது போகம் நீடித்து நிலைக்கவேண்டிய தாய்லாகிரிசேர்ந்த ஔடாதிகளை சாப்பிட்டுச் செய்கின்ற சையோகம்.

மர்மஸ்தானக் கெடுதியென்னு மிவைகளினாலும் விர்த்தாப்பியத்தினாலும் நஷ்டப்படும். இவ்வித நஷ்டமுற்ற சுக்கில சுரோணிதத்தையுடைய பலவித அசாத்திய ரோகங்களை அனுபவிப்பதுமன்றி சம்போகத்திற்கு இளைத்துக் குருவியைப்போல் புணர்ந்தும் வாயினுர் பேசி இச்சை தீர்ந்தும் சந்தான விருத்தியில்லாமல் அற்ப ஆயுளையுடையவர்களாவார்கள். ஒருவேளை சந்தான விருத்தி யிருந்தாலும் அதற்கு அற்ப பலனும் ரோக விருத்தியும் ஆயுள்குறைவும் உண்டாயிருக்கும் ஆகையால் பால் முதலிய மதுர வஸ்துக்களைக்கொண்டு சுக்கிலத்தையும் எண்ணெய் முதலிய பித்த வஸ்துகளைக்கொண்டு சுரோணிதத்தையும் போஷிக்க வேண்டும்.

3-வது விழித்தவுடன் சுத்தஜலம் அருந்தலின் குணம்.

நித்திரைசெய்து விழித்தவுடன் சுத்தோதகமென்னும் நீராகரம் அல்லது நல்லசலமும் இதுகளிலே தேனுமொன்றைப் பிரமாணமாகப்

பருகில் பயித்தியதோஷம் விலகும் அன்றியும் மலசல பந்தங்களும் நீங்கும் வாதமுதலிய மூன்று தோஷங்களுந் தத்தம் நிலைகளிற் சஞ்சரிக்கும்.

4-வது விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள்.

நித்திரைசெய்து விழித்தவுடன் தாமரைபூ தங்கம் தீபம் கண்ணாடி சூரியன் புகையொழிந்த நெருப்பு செஞ்சந்தனம் கடல் வயல் சிவலிங்கம் முகில் சூழ்ந்தமலை கன்றையுடையபசு தனது வலக்கை மனைவி மிருதங்கம் இவற்றுள்ளேதேனும் ஒன்றைப்பார்க்கி லுத்தமம்.

5-வது விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்கள்.

நித்திரைசெய்தெழுந்தவுடன் அங்கவீனம் வஸ்திரயீனம் பாவம் காவிவஸ்திரம் கிரகசங்கை ஊமை மொட்டைத்தலை செவிடு அழுகை சடை மனிதரிடத்தில் விருப்பமில்லாமை கூன் அழுக்குமேனி விரிந்த சிகைத்தலை சதாநித்திரை குஷ்டம் கொலை எண்ணெய்த்தலை மனோவியாகூலம் உன்மத்தம் தாரித்ரம் க்ஷயரோகம் இதுகளையுடையவர் முகத்தையும் தீட்டு அழுகை விதவை ஆகிய மாதர்முகத்தையும் பாம்பு பூனை சாம்பல் எருமை விளக்குமாறு கயிறு உலக்கை முறம் என்னு மிவைகளையும் பார்த்தால் அன்றைகககு கெடுதியுண்டாகும்.

6-வது விழித்தவுடன் கண்ணாடி பார்த்தலின் குணம்.

தூங்கி விழித்தவுடன் கண்ணாடி பாாத்தலினால் வீரிய விர்த்தியும் மகிழ்ச்சியும் சர்வ வசியமும் ஞானமும் அதிகரிக்கும்.

7-வது மிதாமித வார்த்தையின் குணம்.

மிதமானவார்த்தை வசனித்தால் உள்ளறிவும் சரீரசவுக்கியமுண்டாகும் அதிகமாக வசனித்தால் மேற்சொன்ன அறிவும் சவுக்கியமுங் கெடும். இதுவுமல்லாமல் ரசதாதுவும் ரத்ததாதுவுஞ் சுண்டும் அவ்விரண்டு தாதுகளுங் குறைவதனால் பித்தம் அதிகரிக்கும் அதனால் சிலேஷ்மரோகம் பிறக்கும் அதனால் சகலரோக முண்டாகும்.

8-வது பல் விளக்கலின் குணம்.

தூள்இலை கொம்பு இவைகளால் பல் விளக்கினால் பற்களுக்குக் குற்றமில்லை வாதபித்த சிலேஷ்மங்களால் பல்லினிடத்தும்அதன்வேரினிடத்து முண்டாகிற 23-ரோகங்களும் உண்டாகாது. மேற் சொல்லிய தூளும் இலையும் கொம்பும் இயல்பானதுவருள்ளதுகளா யிருக்க வேண்டும் அப்படியிருந்தால் இருதிநாள்வரைக்கும் பல்கள் மலையைப் போல அசைவின்றி உறுதியாக விருக்கும்.

9-வது பல் விளக்கத்தக்க கொம்புகள்.

கருவேல் குச்சியால் பற்களுக்கு உறுதியும் வேப்பங் குச்சியால் ஒளியும் நீர்ப்பூலா குச்சியால் வீரிய விருத்தியும் ஆலம் விழுதால் இலட்சுமி கடாக்ஷமும் நாயுருவி வேரால் முக வசீகரமு முண்டாகும்.

10-வது பல் விளக்கத்தகாத வஸ்துக்கள்.

செங்கல்மாமணல் கரி தென்னம்பாளை வைக்கோல் இவைகளால் தினமும் பல் துலக்குபவரிடத்தில் இலட்சுமி நீங்கி மூதேவி சேர்வாள்.

11-வது பஞ்ச கற்பவிதி.

கஸ்தூரிமஞ்சள் மிளகு வேப்பம் வித்து கடுக்காய்த்தோல் நெல்லிப் பருப்பு இவைகளைக் கிரமப் பிரகாரம் காராம் பசுவின் பால் விட்டு அரைத்து கொதிக்க வைத்து ஒப்பற்ற சிரசில் தேய்த்துக் கொண்டால் எந்நாளும் அதி தூல ரோகத்திற்கும் அதி சூட்சம ரோகத்திற்கும் இடமில்லை இதுவே பஞ்ச கற்ப விதி.

12-ஸ்நான கால விதி.

சித்திரை வைகாசி மாதங்களில் உதயமான 5-நாழிகைக் குள்ளும் ஆனி ஆடி மாதங்களில் 8-நாழிகைக்குள்ளும் ஆவணி புரட்டாசி அற்பிசி கார்த்திகை மாதங்களில் 4-நாழிகைக்குள்ளும் மார்கழி தை மாதங்களில் 2-நாழிகைக்குள்ளும் மாசி பங்குனி மாதங்களில் 3-நாழிகைக்குள்ளும் பக்குவமாக வள்ள தைலஸ்நானஞ் செய்தால் ஆரோக்ய சரீரத்தைப் பொருந்துவார்கள்

13-வது வெள்ளை வஸ்திரத்தின் குணம்.

வெண் துகிலுக்கு வாதாதி தோஷங்களும் வியர்வும் விலகும் ஆயுள் விருத்தி லட்சுமி விலாசம் வனப்பு மகிழ்ச்சி அறிவு பலம் ஆகிய இவைகளுண்டாம்.

14-வது போஜனகால விதி.

இரண்டு கால போஜனமே நன்மை. தப்பிய மூன்றுகால போசனங் கொள்ளல் வேண்டும் சூரியன் இளம்பருவமா யிருக்கு முதயகாலத்தில் 3 3/4 மூன்றேமுக்கால் நாழிகைக்குள்ளும் காலைப்பருவமாகிய உச்சிகாலத்தில் 15-நாழிகைக்குள்ளும் மேற்றிசைக் கடலிற் சேர்ந்த பருவமாகிய இராத்திரி 7 1/2-நாழிகைக்குள்ளும் பசியாகிய தீமையுடையவர்கள் கொள்வார்கள் சூரியனுதயமாகி 11 1/4 நாழிகைக்குள் உண்கிற நல்லவுண்டி தேகத்திற்குப் பொருந்தும் 15-நாழிகைக்

குள் உண்கிற உணவுமிதம் என்கிற அளவில் பிணிகளைவிலக்கும். 22½-நாழிகையில் புசிக்கின் ரோக சம்பவமாம் 30-வதுநாழிகையிலருந்தும் அசனம் உயிருக்கு முடிவைத் தரும் இந்த நான்கில் முதல் 2-ம் கால போசனமும் மற்றவை அகாலபோசனமுமாம் போசனமுதலில் மகர வஸ்துவும் மத்தியில் புளிப்பு உப்பு உவர்ப்பு இலைக்கறிகளும் முடிவில் துவர்ப்புச் சம்பந்தமான புளிப்புத்தயிர் ஊறு காய்களும் உண்ணல் வேண்டும் அப்படியுண்ணில் சுகத்தையடைவாய் எவ்வித தேகிகட்கும் முக்கால் வயிற்று உணவேயன்றி முழுவுணவில்லை. அதற்கென்ன காரணமென்றால் அன்னம் பதார்த்தங்கள் கூடி அரைவயிற்று உணவு பால் மோர் சலம்கூடி கால்வயிற்று உணவு இவைபோக இன்னுங்கால் வயிற்று உணவு கொள்ளத்தக்க இடத்தை வெளியாக வைக்க வேண்டியது அப்படிக்குவைக்காவிட்டால் அன்னம் சீரணமாகாது அதைச் சீரணிக்கத்தக்க அக்கினியும் வாயுவுஞ் சஞ்சரிப்பதற்கிடமில்லை, துவாரத்தையுடைய தீனிப்பையிற் றங்கிய உணவானது 4-பிரிவையுறும் அவையாவன ஒருபங்கு கிருமிகளுக்கும் ஒருபங்கு மலத்திற்கும் ஒருபங்கு ஜடராக்கினிக்கும் ஒருபங்கு தேகத்திற்குமாம் ஒருநாளுண்ட உணவினின்றும் பிரிவுற்ற அன்னரசமானது அன்றைக்குச் சதா துவைநனைத்து ஊறித்தங்கும். 2-ம் நாளுண்ட அன்னரசமான அந்த ரசதாதுவிலேற முன்பு ஊறிநின்ற ரசம் இரத்த தாதுவிற்பாயும் இவ்வாறே 3-ம் நாள் மாமிசதாதுவினும் 4-ம் நாள் மேதோ தாதுவினும் 5-ம் நாள் அஸ்திதாதுவினும் 6-ம் நாள் மச்சை தாதுவினும் 7-ம் நாள் சுக்கில தாதுவினுமாகச்சென்று அத்தாதுக்களை விருத்தியடைச் செய்து 8-ம் நாள் தேகத்திற்கு குன்றாத வன்மையைக்கொடுக்கும்

15-வது உண்கல பேதம்.

மனோற்சாக போசனத்திற்கு வெள்வாழையிலையே நன்று மற்றைய இலைகள் மத்திபமாம் தங்கம் வெள்ளி வெண்கலம் இவைகளாற் செய்த உண்கலங்கள் மிகவுநலமாம் இவைகளைவிட மட்கலமே சிறந்தது; இதிற்புசிக்கில் க்ஷயமும்பாண்டு ரோகத்தாற் பிறந்த நீர்சுரப்பும் விலகும்.

16-வது அன்னத்தின் பிரமாணம்.

அன்னமானது கொஞ்சஞ் சுடுகையுள்ளபோதே உண்பது உத்தமத்திலுத்தமாம் அது வாதபித்த கபங்களினாலும் பீனசத்தினாலும் விளைகின்ற நோயையும் அரோசகத்தையும் நீக்கி சரீரத்திற் வன்மையைத்தரும் புழுங்கலரிசி அன்னத்தைப்புசிக்கின் வாதகோபமும் பலமும் வலியரோகங்களுமில்லை இது நோயாளருக்குதவும் பச்சரிசி அன்னமானது பலத்தையும் குழந்தைகட்கு மாந்தத்தையுமுண்டாக்கும்பித்த கோபத்தையும் மூத்திரக்கிரிச் சரத்தையும் நீக்கும்.

17-வது சமைக்கும் விதமும் அதன் பயனும்.

பழைய அரிசியை தவிடு நொய் முதலியவை போம்படி நன்ருகத் தீட்டி முழு அரிசியாக ஆய்ந்தெடுத்து இள வெந்நீரால் கழுகி வஸ்திரத்திற் கொட்டிச் சற்றே ஆறவைத்து ஒரு பாண்டத்தில் அரிசிக்கு மூன்று பங்கு சலம் விட்டு அடுப்பேற்றி, அது நுரைக்கட்டி கொதிக்கும்போது, அரிசியை அதில்போட்டு மூக்காற்பாகமாக வெந்தவுடன் கரண்டியால் விழாவி வடித்துக்கொண்டு மறுபடியுந்தணலில் வைத்துப் பக்குவமா யிருக்குஞ் சமயத்தில் இறக்கிக்கொள்வதற்கு சுத்த அன்னமென்றுபெயர் இதை நற்கறிகளோடுண்ணில் வாத பித்த சிலேஷ்மம் என்னு முத்தேகிகளுக்கும் முக்கியமாக வுதவும் பத்தியங்களுக்கும், ஆகும் அன்றியும் குடலைப்பற்றிய நோய்கள் முழுமையும் விலகும் குற்றமில்லை பாலுஞ் சாதமுமாக வுண்ணில் பித்தகோபமும் தாகமும் விலகும் கொஞ்சம் மந்தஞ்செய்யும் ஆனல் தேகபுஷ்டியும் உடனே வீரிய விருத்தியும் உண்டாகும். இது பால கவுமாரவிருத்தர் பரியந்தமுதவும்.

பசுவின்பாலைச்சாப்பிடவேண்டுமானல் புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கைப்புகார்ப்பு இனிப்பு என்னும் 6 சுவையில் 1-வதும் 2-வதும் ஆகிய சுவையுள்ள வஸ்துக்கள் எவையும் அனுபானமாகச் சேர்த்துக்கொண்டுண்ணலாகாது. சுக்கிலத்தை விருத்திசெய்யும்படியான கடைசியிற் சொல்லியகார்ப்பு இனிப்பு என்னும் 2-சுவையுள்ள வஸ்துக்களை அனுபானமாகச் சேர்த்துக்கொண்டு உண்ணெனச் சிலர் சொல்லுவர். ஆனலும் அந்த இரண்டுசுவையில் கார்ப்புள்ளபொருள் நோயுற்றபோழ்து அனுபானமாகக் கொள்ளலாகும் மற்ற காலத்தில் பாலைத்தனியே உண்ணவேண்டின் அதற்கு அனுபானம் கற்கண்டுப்பொடி பொருந்தும். 8-வகைக்குற்றங்கள் நீக்கிய அன்னத்துடன் உண்ணவேண்டின் மதுரமுள்ள பழம் அனுபானமாகப்பொருந்தும் ஆகலான் இவ்வாறு முறைப்படி உண்ணக்கடவை. அன்னத்திற்கு எப்போதுங் குற்றமேயில்லையாயினும் பாகபேதங்களுண்டானல் 8-வகை தோஷங்களுண்டாகின்றன அவையாவன முதலாவது அன்னத்தோஷம் என்பது கஞ்சி சிக்கிக் கொள்வதாம் இதனல் தூமம் விதூமம் என்கிற அஜீரணங்கள் பிறப்பனவாம். 2-வது பிச்சில்தோஷம் என்பது அன்னங் குழைந்து போவதாம் இதனல் ஜடராக்கினி அணைந்துவிடும் 3-வது அசுசிதோஷம் என்பது மயிர் கிருமி உமி முதலியவைகளோடு சமைப்பதாம் இதனல் அரோசகமுண்டாமும் 4-வது கொதித்தோஷம் என்பது கருக்கரிசி யன்னமாம் இதனல் அலசரோக முண்டாகும். 5-வது சக்கிலதோஷம் எ-து ஆறி உலர்ந்த அன்னமாம் இதனல் தூமவிரோக முண்டாகும், 6-வது தக்கதோஷம் எ-து காந்தின

அன்னமாம். இதனால் ஜீரணதாதுரோக முண்டாகும் 7-வது விருப தோஷம் எ-து கோழியலரிசி யன்னமாம் இதனால் ஆயுள் முதலான வைகள் கெடும், 8-வது அனர்த்துஜதோஷம் எ-து சொந்த ஜலம் பிறந்து நூலிழைத்த அன்னமாம் இதனால் அதிநித்திரையும் சீதா திரேகங்களும் உண்டாகும்.

19-வது பால் அருந்துதற்கு நாழிகை.

பசுவின்பாலை கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அல்லது 5-நாழிகைக்குள் உண்ணல் வேண்டும் இவ்வாறுண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை யொப்பாகும். அந்தக்காலத்துக்கு மேற்பட்ட பாலை யுண்டால் பிரமன் அறிதற்கரிய சிவனுண்ட விஷத்தை யொப்பாகும்.

20-வது பதார்த்த வகை.

குறிஞ்சி நிலமாகிய மலைச்சாரல் பூமியில் விளைகின்ற துவரம் பருப்பை வெந்நீரில் போட்டுச் சமைத்து போசனஞ் செய்வதற்கு முதலில் பசுவினெய்யுடன் அன்னத்திற்கலந்து புசித்தால் ஒருபிடி சதை வளரும். அன்றியும் குறிஞ்சி நிலத்தில் பயிராகிற வஸ்துக்க ளெல்லாம் அதிக பலமுள்ளதாயிருப்பதால் அந்த நிலத்து துவரையே விசேடமாகும்.

துவரம்பருப்பின் ரசகுணம்.

கட்டளைக்கலிப்பா.

நவரைவாழைக் கனிபலவின்கனி
நல்லமாங்கனி பாலொடுநெய்க்கறி
கவரிலப்பொழுதே மந்தமாம்பரி
காரங்கேட்கும் பயித்தியக்காரரே
எவருங்காண்க அறைகுது மன்னத்தி
லிட்டுணுங்கறி தன்னுடன்கூடவே
துவரைநீர்மிள குள்ளிலிட்டுக்கொளீர்
திட்டவாதமுந் துஞ்சிடுமுண்மையே.

(இ-ள்.) வாழை பலா மா என்கிற முப்பழங்களையும் பால் நெய்க்கறிகளையும், மிதமின்றிப் புசிக்கின் உடனே அக்கினிமந்தம் பிறக்கும் அதை நீக்குவதற்கு வகையரியாது சிகிச்சை வினவுகின்ற பித்தர்களே; கேண்மினோ! துவரம்பருப்புக் கட்டிருந்த ஜலத்தில் மிளகு வெள்ளைப்பூண்டு முதலிய சம்பாரங்கள் சேர்த்து ரசம்வைத்து அதை நற்கறிகள் சேர்ந்த வுணவுடன் சேர்த்துண்ணில் மேற்கூறிய அக்கினி மந்தமும் வாதப்பிர கோபமும் நீங்கும் என்பதாம்.

21-வது ஜலம் அருந்தும் வகை.

போஜனந்தத்தில் திருப்தியாகும்படி வெந்நீரை ஒருதரமாக உண்டால் ருட்சை வாதாதிக்கம் விதாகம் அலசம் வயற்றுப்பிசம் ஆகிய இவைகள் போம் ஆயுசும் சுக்கிலமும் விருத்தியாகும் நீரை அண்ணாந்துண்ணில் பாதிரியா வாதமும் குனிந்தருந்தில் இருமலும் உண்டாம். பாத்திரத்தை வாயாற்கடித்து அருந்தில் ஒருரோகமும் இல்லை இரவில் நீர்பூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன் சூரியோதய காலத்தில் அருந்தில் சுக்கிலவிருத்தியும் உதராக்கினியும் சரீர முழுதுந் தேஜசுமுண்டாம் பயித்தியவாத தொந்தமும் விலகும்.

22-வது கஞ்சி வகை.

துன்பமேயன்றி இன்பந்தராத சுட்க கபரோகிகளுக்கும் சரீர முழுதும் எலும்புதவிர மாமிசப்பசை யிழந்தவர்களுக்கும் பலமற்று கைகால் ஓய்ந்து வீழ்கின்றவர்களுக்கும் யவைக்கோதுமென்னும் பார்லி அரிசிக்கஞ்சியையே மருந்தாகக் கொடுத்தல் வேண்டும். கோதுமைக்கஞ்சியானது வாதசுரம் ஜலதோஷம் கபம் சந்நிபாதம் இவைகளை விலக்கும் தேகத்திற்கு வண்மையைத்தரும்.

23-வது சேர்க்கை அகலின் குணம்.

அவலில் பாலும்நெய்யும் சேர்ந்து உண்டால் சரீரத்திற்கு பலமுண்டாகும் தயிர்களிற் கலந்துண்டால் மந்தமுண்டாகும். மோரில் கலந்துண்டால் சோபமும் எரிவுநீங்கும் சலத்தில் ஊறவைத்துண்டால் உளியால் வெட்டினுல் அதுவும் வாய் மடங்கத்தக்க வுறுதியான வாய்வு உண்டாகும் ஆகாரமும் ஏற்றுக்கொள்ளாது எவ்வகைப் புளியையாவது சேர்த்து உண்டால் பித்தரோகம் நீக்கும் இராப்போசனஞ் செய்தவுடன் சிறுநடையாக 100 அடி உலாவிய பின் நித்திரை கொள்பவர்களுக்கு முன்பு உண்ட அன்னத்திற்சேர்ந்த விஷ பதார்த்தங்களெல்லாம் ஒன்றுறக்கலந்து சீரணிப்பதுந்தவிர அவ்வுண்டியில் திரிதோஷமுஞ் சாராதென்றுணர்க.

24-வது தாம்பூல வகை.

தாம்பூலந்தரிக்குமிடத்து முதலில் வெற்றிலையையன்றிப் பாக்கு மாத்திரம் போட்டுக்கொண்டால் குற்றமுண்டாகும் பந்துக்களின் உறவுநீங்கும் முன்பதாக வெற்றிலையைத் தின்றுபின்பு முறைப்படிக் குப்பாக்கு வெற்றிலைகளைத் தின்னவேண்டும் இவ்வண்ணம் நடத்துகின்ற விவேகிகளிடத்தில் இலட்சுமி நிலைபெற்று வாசஞ்செய்வாளென்க அன்றியும் துவர்த்தல் சொக்குதல் மூர்ச்சைப்புழு உளுத்ததூள் பிசுபிசுப்பு முதலியகுணங்கள் இயற்கையாகப் பாக்குகளிலிருப்பதால் இதைமுதலிற்லின்றால் உடற்கு அபாயம் நேரிடும் என்பதைக்

கருதி முற்றமுறும் என்றும் பந்துக்களின் கூட்டுறவு நீங்குமென்றும் சுண்ணந்தடவாத புனிதமுள்ள ஒருவெற்றிலையை முதலில் மென்று அந்தச்சாற்றை விழுங்கில் நெஞ்சுலரலும் கபக்கட்டும் ஷெ பாக்கின் ஶ்ரேஷங்களும் விலகுவதால் இலட்சுமி வாசஞ்செய்வாளென்றுங் கூறப்பட்டது பாக்கு வெற்றிலை சுண்ணம் இவைகளை ஒன்றுற மெல்லும் போழ்து அதில் நின்று ஊரிய முதல்நீர் நஞ்சு, 2-வது நீர் மிகு பயித்தியம், 3-வது நீர் அமிர்தம் 4-வது நீர் அதியினிப்பு, 5-வது 6-வது நீர்கள்பித்ததோஷம் அக்கினிமந்தம் பாண்டுரோகம் இவைகளை யுண்டாக்கும்.

25-வது அதிஓட்டம், சதா உட்கார்ந்திருத்தல், நொந்த சோறுண்ணல் மிககாற்று விரும்புதல் இவைகளின் குணம்.

இறைக்கும்படி ஓடுதல் சதா உட்கார்ந்திருத்தல் சுடுபுகைபடும்படி உலாவல் நொந்தசோறுண்ணல் மிகுகாற்று விரும்புதல் என்னு மிச்செய்கைகளினுல் முறையே க்ஷயம் அதிதூலம் நேத்திரரோகம் அக்கினிமந்தம் முதலிய நோய்வருக்கமும் மகா வாதரோகங்களும் உண்டாகும் எப்போதும் அதிகநடை நடப்பதால் காந்தியும் சகசதேகபுஷ்டியும்மத்திபமாம் சுக்கிலட்சீணமும் கிழரூபமுமுண்டாகும்.

26-வது சயன வகை.

இலவம்பஞ்சுமெத்தையின் படுக்கையால் உட்சூடு நீங்கும் பருத்தி மெத்தை இரத்தம் விந்துகாமம் சுரம் இவைகளை விருத்திசெய்யும் நற்குணமுள்ள கோரைபாயிற் படுத்தால் அக்கினி மந்தமும் சுரவேகமும் நீங்கும் தேகக்குளிர்ச்சியும் சுகநித்திரையு முண்டாகும் கழுத்திற்கும் தோளுக்குமத்தியிலிருக்கும் அளவான வுயரமுள்ளதாகவும் நீளம் வேண்டியமட்டாகவும் இலவம்பஞ்சினுல் தைத்த தலையணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால் பாதாதி கேசம் வரைக்கும் உள்ள எந்தப்பக்கத்து நரம்புகளும் பிசகாமல் சமனுகவிருக்கும் அதுவுமல்லாமல் சிரசைபற்றிய ஆவர்த்த நோய்களும் நீங்கிவிடும்.

27-வது புணர்ச்சி வகை.

துயரம் அச்சம் தேக முழுதும் ரோமம் திரிதோஷகோபம் தூங்கிவிழுதல் அலித்தன்மை நாணம் பசிகருப்பம், தாகம் தன்வயதுக்கு மேற்பட்டவயது புணர்ச்சியில்வெறுப்பு சுபமின்மை சூசிமுகயோனிரோகம்அலட்சயம் கோபம்அழகின்மை கற்றுழைநாற்றம் கோள்சொல்லுதல் அதிதூலரோகம் ஆகிய இவைகளையுடைய மாதுகள்போகம் சகலரோகங்களுக்கும் காரணமாம் இதன்றி தேவஸ்திரீ குருபத்தினி

இராஜபத்தினி ஏழைஸ்திரீ தூரஸ்திரீ பழிமாது விதவை ஆகியஇவர் களைப் போகிப்பவர்களை தரித்திரமும் துன்பமும் தொடருமேயல்லது இவர்களைவிட்டு மற்ற யாரைத்தொடரும்.

28-வது அரோகசந்தனப் புணர்ச்சி.

பதினாறு வயதுள்ள ஸ்திரீயும் இருபது வயதுள்ள புருஷனும் சரீரமுழுவதும் மறைப்பில்லாமையாகவும் இருவர்க்கும் ஆசையொன்றாகியும் போகம்ஒன்றாகியும் மாதத்துக்கோர்நாள் இராத்திரிகாலத்தில் சரீரசம்பந்தப்பட்டுகூடுங்காலத்து உண்டாகும்கருவானது தாய்தந்தைகளுக்கு உள்ளபலத்தை தன் சரீரத்திற்பொருந்தி தேகம் திடமுள்ளதாகவிருக்கும் வியாதிவராது வந்தாலும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும். (தாய்க்குந் தந்தைக்குந் தேகம் உறுதியாயிருப்பதுமன்றி வியாதியுமணுகாதென்பது கருத்து) மேற்சொல்லிய ஸ்திரீக்குக் கருப்பப்பையும் சோணிதமுஞ் சுத்தமாயிருக்க வேண்டும். இவ்வாறிருந்தால் நல்லகருத்தறிக்கும் முன்சொன்ன முறைப்படி கூடுவதும் ஸ்திரீக்கு மாதாந்தருதுகாலமாகிய பனிரண்டு நாளுக்குள் கூடவேண்டும் ஏனெனில் அந்நாட்களில் சுக்கிலம்போய்த் தங்குகின்ற கருப்பப்பையின் துவாரமானது இராத்திரி காலத்தில் தாமரைப்பூவைப்போல மூடிக்கொள்ளாம லிருப்பதனாலென்றுகொள்க ருதுவான முதன் மூன்றுநாளும் அசுத்தநாளாகையால் புருஷன் சேரக்கூடாது அதன் விபரம் கருப்பப்பையின் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் பிரமாணத்தைத்தப்பி அதிகமாகத்திறந்திருப்பதால் அவ்வழியாக சுக்கிலத்தின்பங்கு மிகுதியாகச் செல்லப்படுகின்றது அப்போது அவிடத்துச்சோணிதமும் இதுவும் ஏற்றக் குறைச்சலின்றி சமமாகத்திரண்டு ஆணும்பெண்ணும் அல்லாத அலிப்பிள்ளையாகப் பிறக்கும் இது ஏதுவைப்பற்றியே முதன் மூன்றுநாளும் அசுத்தநாளென்றும் சேரக்கூடாதென்றதுமாம் மற்ற 9-நாளுக்குள் இரட்டத்த நாட்களிற் சேர்ந்தால் ஆண்குழந்தையும், ஒற்றைப்பட்ட நாட்களிற் சேர்ந்தால் பெண்குழந்தையும் உற்பவிக்கும். இந்த விபரத்தையெல்லாம் சாரீரமெனுஞ் சாத்திரத்தின் முதல்அத்தியாயத்தில் காண்க.

29-வது தினப் புணர்ச்சியின் குணம்.

கொக்கோக சாஸ்திரத்திற்சொல்லும் பலவித லீலைகளுடன் இரவும்பகலும் நித்திரையில்லாமல் புணர்ச்சி செய்கின்றவர்களிடத்தில் மிகுதியாயுண்டாகும் வியாதிகளை அளவிடத் தொடங்கினால் அதற்கு முடிவில்லை அதற்கு பரிகாரஞ்செய்யு மருத்துவன் வகைக்கும் ஒவ்வில்லையென் றுணரவேண்டும்.

30-வது இரவில் நித்திரைப் பங்கத்தின் குணம்.

இராத்திரியில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் நிலையாயிருப்பதற்குச் சித்தமயக்கமுதல் மந்தம்வரையிற் சொல்லியநோய்கள் வந்து பொருந்தும் அன்றியும் வேடருடைய நாய்கள் கௌவுதல்போலப் பலவியாதிகளுங் கௌவிக்கொள்ளும்.

31-வது பகல் நித்திரையின் குணம்.

பகல் நித்திரையானது தண்டம் மேட்டாக்ஷியம் ஊருத்தம்பம் சருவாங்கம் உக்கிராக்கிரகம் சுப்தி அனுத்தம்பம் திருக்குத்தம்பம் சோணிதம் ஆட்டியம் புருவாடோபகம் கிருத்தரசி ஊர்த்துவம் சம்பூகம் அவபேதம் அவதந்திரம் அவதாமை விவுர்தாசியம் என்னும் பதினெட்டு விதவாத ரோகங்களை விளைவிப்பதற்கு ஒருவித்தாகும் ஆகையால் பகல்நித்திரை செய்யக்கூடாதென்பதாம் இந்த வாதரோகங்களின் விபரங்களையெல்லாம் "நயனமிர்தம்" என்னுஞ் சாத்திரத்தில் எட்டாவது அத்தியாயத்திற் காண்க.

தினக்கிரமாலங்காரச் சுருக்கம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

பீர்முகமது

திருவாய்மலர்ந்தருளிய

திருமெஞ்ஞான சர நூல்.

காப்பு.

ஆரணத்தி னரும்பொருளா யுறைந்தநாதி
யகண்டபரி பூரணமாய் நிறைந்தசோதிக்
காரணத்தில் காரணனைத் துதித்துநாளுங்
கதிமுகம்ம திரசூலைக் கருத்துள் வைத்து

வாரணத்தின் சதுயார்கள் பதங்கள் போற்றி
மாற்றுமௌலி மார்கள்பதம் வணங்கி வாழ்த்தித்
தாரணியோர்க் குணர்வுதிப்பத் திருமெய்ஞ்ஞானச்
சர நூலை முறைமுறையாய்ச் சாற்றுவேனே.

நூல்.

எண்சீரடி ஆசிரிய விருத்தம்.

பொன்னான மெஞ்ஞானச் சர நூ லென்னும்
புகழ்பெரிய சாஸ்திரத்தின் புதுமை தன்னை
இந்நிலத்தி லறியாத மாந்தர்க் கெல்லா
மெடுத்துரைக்கும் பரிசுதனை யியம்பக்கேண்மோ
முன்னான சாஸ்திரமாங் குசக் கலத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமைதோன்றக்
கன்னல்ரசச் செந்தமிழின் கவிதையாகக்
கருத்துறபான் கவலலுற்றே னுலகத்தோரே. (1)

உலகவர்க்குச் சர நூலை யொளிப்பில்லாம
லோதும்வகை யேதெனவே யுவந்துகேளாய்
நிலகரும நிலையாது மெறியாய்க்கூறு
நீடூழி வாழ்வரசு நிலைப்பதோடு
விலகுவதும் வருங்காலஞ் செல்கா லங்கள்
[illegible]யனுறவே நிகழ்கால மரணகாலம்
கலைபெரிய விந்நூலின் காரணத்தின்
காட்சிதனைக் கருதிப்பார் காணுந்தானே. (2)

கருநிலையிற் றரித்தகனற் பொறியின் காட்சி
கதித்துலவும் வாயுவொடு கலந்தொன்றாகி
உருவெடுத்து வுயிரென்று வுடலைச் சூழ
வோடிவருஞ் சரமாக வுடலுக்குள்ளே
திருநிலையி லைவரையும் பிரியாதடித்
திசைவாயுத் திரிகோண மறுகோணத்திற்
சுருக்குவலை தாமரைநூற் சொருகும் வாராய்ச்
சுழன்றுவரும் ராட்டினத்தின் சுழலைப்போலே. (3)

சுழன்றுவரு மிருகலையு மொன்றே ரண்டாய்ச்
சொல்லுகிற விடகலைசந் திரனேயாகும்
உழன்றுவரும் வலகலை சூரினே யாகு
மொருமித்த விருகலைதான் சுழினை தீயாம்

எழும்பிவருஞ் சரமொன்றின் விதமேயஞ்சு
வியல்பாக வியம்புகிறே னறிந்து பாராய்
வளம்பெரிய வாயுவுதான் மேலே நோக்கி
வந்தோடு நாழிகையொன் ருேய்ந்திடாதே. (4)

நாழிகைதா னென்றரையாய்ப் பூமியோடு
நலமான கீழ்த்திசையே நளினமாக
நாழிகைதா னென்றேகாண் மூக்கந்தண்டி
னடுவாக வோடுமது வப்புத்தானே
நாழிகைமுக் காற்பக்க விளிம்புபற்றி
நன்ருக வோடுமது தேயுவாகும்
நாழியரை யாகாச நடுவதாக
நாடாமலோடுமெடா நாளிற் பாரே. (5)

நாழியொன்றுக் கரையாகக் கலையொன்றுக்கு
நடக்குமினி யறுகலையி னற்றுப்போகும்
நீளாம லிருகலையுஞ் சேர்ந்தேயோடு
நிலையாது சுழிமுனையே நெருப்புமாச்சு
நாழிகைதா னென்றிற்குச் சரத்திேனுட்ட
நடக்குமடா முந்நூற்று வறுபதாக
நாளொன்றுக் கிருபத்தோ ராயிரத்து
நாலொருபத் தைந்துசர நடக்கும்பாரே. (6)

பாரப்பா வெள்ளிதிங்கள் பதனேமூன்றும்
பக்குவமாய் விடிகாலஞ் சந்திரனேடும்
சேரப்பா செவ்வாயுஞ் சனிஞாயிறுஞ்
செங்கதிரோ னேடுமெடா விடியுங்காலம்
வாரப்பா வினியொருநாள் வியாழன்மட்டும்
வளர்பிறைக்குச் சந்திரனே வளர்ந்துவோடும்
கூரப்பா தேய்பிறைக்குச் சூரியன்ருன்
குதிகொண்டு வோடுமடா கோணந்தானே. (7)

தானனவாரமது வேழுஞ் சொன்னேன்
றப்பிவருஞ் சரத்துடைய பயனேக்கேளாய்
வேனன ஞாயிறிலே சரமேதப்பில்
வியாதியது மெய்தனிலே வளரும்பாராய்
ஆனன திங்களிலே சரமேதப்பி
லறுதியின லவர்காலம் முடிவுமாகும்
கானுலவுஞ் செவ்வாயிற் சரமேதப்பிற்
கலக்கமுறும் பெரியவொரு கலகமாச்சே. (8)

ஆச்சப்பா புதனிலே சரமேதப்பி
லபாயமடா தொடுத்தவகை பலியாதப்பா
நீச்சப்பா குருவாரஞ் சரமேதப்பி
னிலையாது பொருட்சேத நினைந்ததெல்லாம்
சூட்சமமாய்ச் சுக்கிரனிற் சரமேதப்பிற்
சொல்லுகிறேன் மக்களுக்குச் சேதமாகும்
தாழ்ச்சியடா சனிவாரஞ் சரமேதப்பிற்
றனக்குவொரு தத்துவந்து தப்புவாயே. (9)

தப்பாக விருகலையுந் தவறியோடிற்
றனக்குவருஞ் சனிதோஷந் தடையில்லாமல்
ஒப்பாக வொருபுறத்தி லொருநாளோடி
லொருமூன்று வருடத்தி லிறந்துபோவான்
அப்படியே யொருபுரத்தி னாளாறோடி
லாறுகு மாதமடா வறுதிக்காலம்
செப்புகிறேன் சந்திரனி லிரவேயொன்றுஞ்
செங்கதிரோன் பகலொன்று மியங்கிற்றானல். (10)

ஆனாலு மருளான யோகியானா
லவன்பெருமை யெவராலு மறியொண்ணாது
போனசர மீளாமற் சுழலுமாகிற்
போகுமடா வொருமூன்று மாசத்துள்ளே
நாணும விருசரமு மொன்றாயோடி
னாற்பதா நாளிலல்லோ நமனைக்காண்பான்
போனசரம் மீளாமன் மேலேவாங்கிற்
பொய்யல்ல வறுதியென்று வறிந்துபாரே. (11)

அறிந்துகொள்ளச் சொல்லுகிறே னின்னுங்கேளே
யப்பப்பா சந்திரன்றா னியங்கும்போது
சிறந்தமனை குடிபுகுதத் தனம்புதைக்கச்
சேராம விருந்தவரைச் சேர்த்துவைக்க
விரைந்தேறும் விஷமிறக்க விதைவிதைக்க
வேந்தர்களைத் தெரிசிக்க வேள்விசெய்ய
பிறந்தபிள்ளை பேர்குறிக்கப் பிணியுந்தீர்க்கப்
பிரியமுடன் யாபாரம் பலவுங்கொள்ள. (12)

கொள்ளமணங் கோதையரை நாட்குறிக்கக்
கொடிதான பகைவரிடம் மொழுகிச்சொல்ல
வெள்ளமடா கீழ்க்கிணறு வெட்டிக்காண
வேந்தர்முத லமைச்சருக்குத் தூதனுப்ப

அள்ளியிரு கையாலு மையமீய
வாகுமடா வித்தனையுஞ் சந்திரன்மீது
தெள்ளியதோர் சூரியன்று னியங்கும்போது
தீர்க்கமாய்ச் செய்வகையைச் செப்பக்கேளே (13)

செப்பக்கே ளரமனைக ளம்பலங்கள்
சிறப்புடைய மாளிகைகள் சித்ரகூடம்
ஒப்பரிய சித்ரபடா மொளிர்விதான
முடமைவகை மருந்துவகை யாவுஞ்செய்யக்
கப்பலடா கடன்மேலே பயணம்பண்ணக்
கடிதான பேய்பூத மலகையோட்டச்
செப்பணியு முலையாளைச் சேர்ந்துவாழச்
செயமாகப் படைபொருத வழக்குறைக்க. (14)

உரையான மந்த்ரமுத லேதுஞ்செய்ய
வொழுங்காகக் கலையோதச் சரங்களுன்ன
திருவான தேவர்முதற் பெரியோர்மற்றத்
தேவரையுந் திருமுன்னே வரவழைக்க
குருபாதம் பணிந்துவுப தேசங்கேட்கக்
கொள்ளையிடப் பதியேறக் குளிக்கநீரில்
தருகாத பூமியுள்ள தனமெடுக்கத்
தம்பனமே செய்யநல மாகும்பாரே.)

பாடியவோ ரிருசரமு மியங்கும்போது
பலியாது சுழிமுனையே பழியுமாச்சு
ஆடியவோர் சரமோடும் புறத்தைத்தானே
யதிகமதாய்ப் பூரணமென் றுரைக்கலாச்சு
சாடியேவோர் சரமோடாப் புறத்தைத்தானே
சாற்றுகிறேன் சூனியமென் றறிதற்காகத்
தேடிமிக வந்தொருவ னுன்னைக்கேட்டாற்
றீர்க்கமாய்ச் சொல்குறியைச் சொல்லக்கேளே.)

சொல்லக்கேள் காப்பினியாள் கர்ப்பந்தன்னிற்
சூலானே பெண்ணேவென் றுன்னைக்கேட்டால்
வல்லகலை சூரியனில் வலமேகேட்கில்
வளர்ந்திருக்கும் பாலகன்று னேயாகும்
அல்லலவன் சூனியத்தி னின்றுகேட்கி
லாணுரு மதன்கால மற்றுப்போகும்
நல்லகலை சந்திரனிற் பூரணந்தா
னிரியின்சூல் பெண்ணென்று நாட்டுவாயே. (17)

நாட்டிடுவாய் சூனியத்தி னின்றேகேட்கி
  னூரியின்சூல் பெண்ணது வு நமனைச்சேரும்
நாட்டிலின்ன மாதினுக்கு மதலையுண்டோ
  நன்றாகச் சொல்லுமென்று வொருவன்கேட்கில்
கூட்டியதோர் பூரணமே குழந்தையுண்டு
  கொடிதான சூனியமே குலமற்றுப்போம்
தீட்டியநாள் சூரியனுந் திங்கண்மாது
  தீர்க்கமதாய் நீயெவர்க்குஞ் செப்பலாமே. (18)

செப்பியதோர் கருவகைதா னேதென்றாலுஞ்
  செயமாமோ குறைவாமோ வென்றுகேட்கில்
தப்பாது சூரியனிற் பூரணந்தான்
  தப்பிவிட்ட நாளாகுஞ் சூனியத்தில்
மெய்யான சந்திரனின் மெதுவாய்ச்சேரும்
  வேறாகுஞ் சூனியத்திற் கருமமெல்லாம்
ஒப்புடனே காணாத முதலைக்கேட்கி
  லுடன்வருமே பூரணசந்திரனிற் றானே. (19)

சந்திரனிற் சூனியமும் பிரயாசந்தான்
  சார்ந்துபோஞ் சூரியனிற் பூரணந்தான்
எந்திரமாஞ் சூரியனிற் சூனியந்தா
  னெத்தேச காலமில்லை யெழுந்துபோச்சு
சந்திரனில் யாத்திரைசெய் வோர்க்குமேற்குத்
  தப்பினதாற் றங்கடங்க டமக்கேயாச்சு
உந்திவருஞ் சூரியனிற் கீழ்வடக்கு
  வுற்றவகை தப்பினதா லுனக்காகாதே. (20)

உனக்காகச் சூரியனிற் பயணம்போக
  வொற்றையடி மூன்றுதரம் வலதுகாலால்
இனிதாகக் குதித்தல்லோ தத்திப்போத
  லியல்பாகு மிருசரமு மொன்றுமாகில்
தனக்குள்ள விருகாலு மொன்றாய்க்கூட்டித்
  தத்திப்போ மூன்றுதரம் மூச்சடக்கித்
தனையல்லான் மற்றொருவ ரறியொண்ணாது
  தங்காம னிரைத்துவரும் படையக்கண்டால். (21)

படைபொருதச் சந்திரனிற் கச்சைகட்டிப்
  பரிவுடனே சூரியனிற் பாய்ந்துசெல்லச்
சடுதிவரும் படையாணற் சந்திரனாகிற்
  சறுகுதலாய்ப் பின்பறித்து முன்னேசெல்ல

அடவுடனே சுழிமுனைதா னியங்குமாகி
லகலாம லிருகாலுங் கூட்டியொன்றாய்
இடைகாணு நிலைபிரியா திருத்து மூச்சை
யெழும்பிநின்று மேனோக்கி யேற்றுவாயே. (22)

ஏற்றிடுவாய் சூரியனில் மாற்றான் தன்னை
யேறிடுவாய் பூரணத்தி லெதிரிபட்டான்
ஒற்றையடா சூரியனு ராணையாகு
மூத்தமியாள் சந்திரனு மொருரண்டாகும்
ஒற்றைநிலை கைக்கருவு மாண்பாலப்பா
வோடிவருஞ் சந்திரனி லொருபெண்ணாகும்
விந்தையடா வுடலுக்கு ளடைந்தவாவி
வெளிதழன்று வெறுங்கூடாம் விதத்தைக்கேளே. (23)

விதமாக வுடலுக்கு ளடைந்தமூச்சு
விர்த்தியோடு சூஸ்திரமா யிருக்கும்போது
இதமாக வீராறங் குலமேயோடு
மிருநான்கு வங்குலமே யேறுமுள்ளே
துதியாகப் பேசுகையிற் பதினாறோடுந்
துடியாக விருநான்கு தொடுத்துள்ளேறும்
கதிநடையி லிருபதுபோய்ப் பத்துமீளும்
கடும்வேலைக் கறுநான்கின் முந்நான்கேறும். (24)

முன்னேறுஞ் சண்டையிலே யாறாறோடின்
மூவெட்டு வங்குலமே முறையிற்செல்லும்
கண்மூடிச் சயனமிடி லாறெட்டோடிக்
கடுகிவரு மையாறு கருதிப்பாராய்
உன்னியுன்னி யோடுகையி லொன்பத்தாறு
வொன்றுக்குப் பாதியடா வுயரவேறும்
இன்முலையாள் சேர்க்கையிலே யெட்டெட்டோடி
யெண்மூன்று வங்குலமே யேறும்பாரே. (25)

பாரப்பா விவ்விதத்தா லாவியெல்லாம்
பறந்தோடிப் போனதினாற் பிராணன்போச்சு
நீரப்பா கால்வயிறே யருந்தவேண்டும்
நித்தியமு மரைவயிறே யமுதருந்தல்
நேரப்பா மூப்பாகந் தினமொன்றுக்கு
நித்திரையை நெடுநாளி னிறுத்திப்போடு
சீரப்பா வறுகோணத் தெழுந்தவாய்வைச்
சிந்தையிலே யுள்ளடக்க விதத்தைக்கேளே. (26)

விதமென்ன வொழியாம லோடுநாடி
வீசிவரு மோரெழுத்தை விளம்பிக்கொண்டு
இதமான வாசானை யெழுத்தைக்கேட்டு
வெள்ளளவும் பிசகாமற் சாத்தினூன்றி
ஓதுறவே வாய்திறந்தா லொழுகிப்போச்சு
வோகோகோ சரமதனை யொன்றாய்மாட்டி
மாதிறத்தின் வாய்மூடி மனதிற்பூட்டி
வாசித்தான் மரணகலை சாகாதப்பா. (27)

சாகாது தவறாம லோடுநாடிச்
சரமொன்று தப்பிவிடிற் சற்றேபோச்சு
வாகாக வோரெழுத்தா விழுத்துமூச்சை
வாசித்து வெறிவீச வழக்கமாகும்
ஓகோகோ வொருமூச்சுக் கிருக்காலோது
வுத்தமனே யொருமூன்று நாளிற்றேறு
பாகமதா யொருபதுநா றாயிரந்தான்
பழக்கமதாய்க் கொண்டுவச மணையேநாளில் (28)

நாளுக்கு நாட்பழக்க மதிகமாக
நடந்தேறு நாதத்தை நன்றாய்ச்சூட்டி
வேழத்தைத் தும்பியிலே கட்டொண்ணாது
விதமென்ன கலையதையே விரும்பிக்கொள்ளு
நாளுக்கு நாளாவி வளர்ந்தேயேறு
நலமான சுத்திதனைச் செய்துக்கொள்ளு
ஊழூழி காலமெல்லா மூண்டேநானு
மூலகவர்க்கு விந்நூலை யோதினேனே. (29)

ஓதுகின்ற சரமதனை யுலகத்தோர்க்கு
வொளியாம லுரைத்தவித மூவந்தபேர்க்கு
வேதகுல வாவாஞ்சி பேரனான
வேந்தனெனும் சிறுமலுக்க ரீன்றபாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யெண்ணாம
னிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன்யானே
வேதமெனு மெய்ஞ்ஞான சரநூலென்றே
விளம்பினேன் கவிமுப்பதாக மூற்றே. (30)

திருமெய்ஞ்ஞான சரநூல்
முற்றிற்று.

வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது!!

பகவத்கீதை வசனம்.

பாக்கெட் அளவு 18-அத்தியாயங்களும் அடங்கியது.

(படங்களுடன் சுத்தப்பதிப்பு)

இதில் வேதாந்த ரகஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பானு சாரமாய் உபநிஷத் வாக்கியங்கள் ஆங்காங்கு உபயோகிக்கப்பட்டிருக் கின்றன. யோக ஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இதுவே முதன்மை பெற்றதுவாம். ஏழைகளும் எளிதில் வாங்கும்பொருட்டே பாக்கெட் அளவில் விலைமிகவும் சஹாயமாய் ஏற்படுத்தப்பட்டது.

ராப்பர் பயிண்டு	0 8 0	வசனம் பெரியது	1 8 0
ஷை கலிகோ பயிண்டு	0 10 0		
ஷை கிரந்த சுலோகம் தமிழ் அர்த்தம்			1 0 0

ஆனந்தம்! ஆனந்தம்!!

தேவி பக்திரசக் கீர்த்தனங்கள்

இதில் தேனினுமினிய பக்திரஸவிருத்தங்களும், முக்கனிரசமும் கற்கண்டும் அமிர்தமுங் கலந்ததைப்போல வெகு இன்பந்தரக்கூடிய நவீன இந்துஸ்தான் வர்ணமெட்டுகளிலும், தியாகராஜகீர்த்தனை வர்ண மெட்டுகளிலும் இயற்றப்பட்ட பல கீர்த்தனங்கள் நிறைந்திருக்கின் றன, பாடப்பாடப் பரவசமுண்டாக்கும், கேட்க கேட்கக் கிளர்ச்சி யை யுண்டாக்கிக் கர்ணாமிர்தம் பயக்கும் தேவையாய் தேசத்தோர் மெச்சும், கோவை-குழந்தைதாஸ் அவர்களியற்றியது. இன்றே வாங்க முந்துங்கள். விலை அணா 0 6 0

விகட மோஹனா.

(ஓர் அற்புத விரசக்கியானம் பொருந்தியது)

படிக்கப்படிக்கஆனந்தம் விடாநகப்பை உண்டுபண்ணக்கூடியது இப்புஸ்தகம் 80-பக்கம் உள்ளது உயர்ந்த கிளேசு கடதத்தில் படங்க ளுடன் அச்சிட்டிருக்கிறது. விலை அணா 0 8 0

ஜீவோற்பத்தி சிந்தாமணியும் தத்துவ தீபிகையும்.

திருநந்திதேவர் ஆதி திருவள்ளுவ நாயனாராகிய திருமூலதேவ ருக்கு உபதேசித்தருளிய சித்தாந்தம் வேதாந்தமுங்கடந்த நாதாந்த முடிவான அமுர்த பஞ்சாட்சர தருவங்களை இதிலடங்கியிருக்கிறது.

இதன் விலை அணா 0 4 0

எமது விலாசம்:— த. [illegible] சாமி முதலியார்,

23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, சென்னை